மலர் - 04 இதழ் - 5 - நவம்பர் 2025

# தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

சித்தன்னவாசல் குகைக்கோயில்
"அரசன் அரசி ஓவியம்"
- முனைவர் தேமொழி

The 4 agavals of the Thiruvasagam
- Akshayan

மதுரை மாவட்ட பாண்டியர் கால
குடைவரைகளில் உள்ள விநாயகர் சிற்பங்கள்
- அபிஷேக் தென்புலத்தான்

இராஜராஜரின் புதல்வியர் மூவர்
- முனைவர் இரா. கலைக்கோவன்

காதல், வீரம், தோழமை பேசிய ஔவையார்
- கோவிந்தசாமி இராசகோபால்

தண்டனைகளின் வரலாறு
- முனைவர் செ. ராஜேஸ்வரி

நூறு ஆண்டுகளுக்கு முன் சேலம்
மாவட்டத்தில் நெல் சாகுபடி
- வி.குணசேகரன்

A Milestone in Dravidian Language
Translations of the Thirukkural (2025)
- Bp Dr J Ravikumar Stephen G.

நல்ல தமிழ் பேசுவோம் நாளும் தமிழ் வளர்ப்போம்
- பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு

மாற்றங்கள் தரும் பாடங்கள்
- ச.அய்யம்பிள்ளை


இன்னும் பல ...



தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

# தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

**மலர் - 04 இதழ் - 5**
**நவம்பர் 2025**

**நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்**
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

**பொறுப்பாசிரியர்**
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

**ஆசிரியர் குழு**
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

**வடிவமைப்பு**
அருணேஷ்
செயற்கை நுண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madhurai, Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97639

**கட்டுரைகள் அனுப்ப..**
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்

## உள்ளடக்கம்

1. சித்தன்னவாசல் குகைக்கோயில் "அரசன் அரசி ஓவியம்" — 3
   - முனைவர் தேமொழி
2. மதுரை மாவட்ட பாண்டியர் கால குடைவரைகளில் உள்ள விநாயகர் சிற்பங்கள் — 7
   - அபிஷேக் தென்புலத்தான்
3. இராஜராஜரின் புதல்வியர் மூவர் — 13
   - முனைவர் இரா. கலைக்கோவன்
4. இந்தியாவிலேயே முதல் சைட் மியூசியம் அமைந்தும் பலன் இல்லை 150 ஆண்டுகளாக துரதிஷ்டமான ஆதிச்சநல்லூர் தொல்லியல் களம் — 17
   - முத்தாலங்குறிச்சி காமராசு
5. நல்ல தமிழ் பேசுவோம் நாளும் தமிழ் வளர்ப்போம் — 27
   - பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு
6. காதல், வீரம், தோழமை பேசிய ஔவையார் — 33
   - கோவிந்தசாமி இராசகோபால்
7. தமிழுக்கு பெருமை செய்த பாண்டியன் — 45
   - மா.மாரிராஜன்
8. தண்டனைகளின் வரலாறு — 49
   - முனைவர் செ. ராஜேஸ்வரி
9. *The 4 agavals of the Thiruvasagam* — 52
   - *Akshayan Manivannan*
10. உடம்படு மெய்: — 56
    - பேரா.கு.இராமகிருட்டினன்
11. தமிழகத்து போர்த்தளபதிகள் - நரலோக வீரன் ! — 59
    - டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்
12. நூறு ஆண்டுகளுக்கு முன் சேலம் மாவட்டத்தில் நெல் சாகுபடி — 63
    - வி.குணசேகரன்
13. நூல்: "பயணம் போகலாம் வாங்க" (பயண இலக்கியம்) — 67
    - வித்யா மனோகரன்
14. மாற்றங்கள் தரும் பாடங்கள் — 71
    - ச.அய்யம்பிள்ளை
15. உலகத் தமிழரின் ஒரே நூல் திருக்குறள் — 77
    - டாக்டர் புதேரி தானப்பன்
16. *A Milestone in Dravidian Language Translations of the Thirukkural (2025)* — 83
    - *Bp Dr J Ravikumar Stephen G.*
17. *TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor* — 85
    - *Dr. C. Rajeswari*
18. திருப்புமுனைப் பணியாற்றிய தியாகசீலர் திரிங்கால் அருளப்பர் — 89
    - பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே
19. *Book Release of Glimpses of Kamba Ramayana by Dr. Chandrika, in Sydneym* — 96

சிலப்பதிகாரம்
மணிமேகலை
வளையாபதி

# சித்தன்னவாசல் குகைக்கோயில் "அரசன் அரசி ஓவியம்"

**முனைவர் தேமொழி**
**சான் ஃபிரான்சிஸ்கோ**

*சிம்மவிஷ்ணுவின் மகனான முதலாம் மகேந்திரவர்மன் புதுக்கோட்டைச் சீமையில் உள்ள சித்தன்னவாசலில் குகைக் கோயில் அமைத்துள்ளான். அவன் தமிழ்நாட்டின் எப்பகுதியை யாயவது பிடித்தான் என்பதற்குச் சான்றில்லை. அவன் காலத்தில் தென்னாட்டில் போரே இல்லை. ஆதலின் புதுக்கோட்டை வரையுள்ள சோழநாட்டைச் சிம்ம விஷ்ணுவே வென்று அடிப் படுத்தினவன் ஆவான். மகேந்திரவர்மன் காலத்துச் சித்தன்னவாசல் ஓவியங்கள் இரண்டிலிருந்து கி.பி. 7ஆம் நூற்றாண்டில் பல்லவ நாட்டில் இருந்த நடனக்கலையை நன்குணரலாம். சித்தன்னவாசல் குகைக்கோயிலின் முகமண்டபமான ஒரு சிறிய தாழ்வாரத்தையும் அதன்பின் சதுரவடிவில் அமைந்துள்ள உள்ளறையையும் கொண்டதே இக் கோவில். இங்குக் காணத்தக்கவை நான்கு ஆகும். அவை: (1) உருவச்சிலைகள். (2) நடனமாதர் ஓவியங்கள், (3) அரசன் அரசி ஓவியங்கள், (4) கூரையிலும் தூண்களிலும் உள்ள ஓவியங்கள் என்பன. வலப்புறத் தூணின் உட்புறத்தில் ஓர் அரசன் தலையும் அவன் மனைவி தலையும் தீட்டப்பட்டுள்ளன. அரசன் கழுத்தில் மணிமாலைகள் காணப்படுகின்றன. காதுகளில் குண்டலங்கள் இலங்குகின்றன. தலையில் மணி மகுடம் காணப்படுகிறது. பெருந்தன்மையும் பெருந்தோற்றமும் கொண்ட அந்த முகம் ஆதிவராகர் கோவிலில் உள்ள மகேந்திரவர்மன் முகத்தையே பெரிதும் ஒத்துள்ளது. ஆதலின், அவ்வுருவம் மகேந்திரவர்மனதே என்று அறிஞர் முடிவு கொண்டனர். அவனுக்கு அண்மையில் உள்ளது அரசியின் முகம் ஆகும். அந்த அரசியின் கூந்தலும் தலைமீதுதான் அழகுடன் முடியப்பட்டுள்ளது;* என்று இவ்வாறாகத் தமிழ் அறிஞரும் வரலாற்று ஆய்வாளரும் ஆன டாக்டர். மா. இராசமாணிக்கனார் அவர் எழுதிய "பல்லவர் வரலாறு" நூலில் குறிப்பிடுகிறார்.

ஆய்வுப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் எழுதிய "மகேந்திரவர்மன்" (1955) என்ற நூலில் இடம் பெற்றுள்ள "ஓவியங்கள்" என்ற கட்டுரையில் சித்தன்னவாசல் குகைக் கோயிலின் "அரசன் அரசி" ஓவியம் குறித்து கீழ் வருமாறு குறிப்பிடுகிறார்: *மகேந்திரவர்ம பல்லவன் காலத்துச் சித்திரங்கள்*

பெரும்பாலும் மறைந்துவிட்டன. நற்காலமாக இப்போது கிடைத்திருப்பவை, காலப்பழமையினால் வண்ணங்கள் மங்கிப்போய் அரைகுறையாக அழிந்துபட்ட நிலையில் சித்தன்னவாசல் குகைக்கோயிலில் காணப்படுகிற ஓவியங்களே. சித்தன்னவாசல் குகைக் கோயிலில், மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்ட சமணக்கோயில் ஆகும். அங்குக் காணப்படுகிற சுவர் ஓவியங்கள் முக்கியமாக நான்கு. அவற்றில் முதலாவது, அரசன் அரசி ஆகிய இருவரின் ஓவியங்கள். இவை மார்பளவு வரையில் காணப்படுகின்றன. கிரீடங்களுடன் காணப்படும் இவை ஓர் அரசன் அரசியின் ஓவியங்களைக் குறிக்கின்றன. உண்மையில் இந்த ஓவியம் மகேந்திரவர்மனையும் அவனுடைய பட்டத்தரசியையும் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை; என்கிறார் மயிலை சீனி வேங்கடசாமி.

செய்யறிவு உதவியுடன் உருவாக்கப்பட்ட சித்தன்னவாசல் குகைக்கோயில்

"அரசன் அரசி ஓவியம்"

### சித்தன்னவாசல் குடைவரைக்கோயிலின் ஓவியங்கள் :

சித்தன்னவாசல் குடைவரைக்கோயிலின் ஓவியங்கள் பல்லவர் காலத்து ஓவியம் என்று இதன் கலைப் பண்பின் செழுமையையும் இதில் காணும் பல்லவர் பாணியின் தாக்கத்தினையும் கண்டு அக்கால வரலாற்று ஆய்வாளர் பலரும் எண்ணி இருந்தனர். மகேந்திர பல்லவன் கல்வெட்டுகள் திருச்சி மாவட்டத்தில் காவிரிக் கரையோடு நின்றுவிடுகின்றன என்பதாலும், மகேந்திர வர்மனின் கல்வெட்டு என்று உறுதியாகக் கூறும் கல்வெட்டுகள் காவிரிக்குத் தெற்கே இல்லை என்பதாலும் மகேந்திர வர்மன் ஆட்சியில் இல்லாத புதுக்கோட்டை மாவட்டத்துச் சித்தன்னவாசல் குடைவரைக் கோயிலை மகேந்திர வர்மன் காலத்தது என்று கருதுவது பொருத்தம் அற்றது என்பது இக்காலத்து வரலாற்று ஆய்வாளர்கள் கருத்து.

மேலும்; பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் ஆதரவுடன் மதுரை ஆசிரியரான இளங்கௌதமன் என்ற சமண முனிவர் சித்தன்னவாசல் அறிவர்

கோயிலின் அகமண்டபத்தைப் புதுப்பித்து முகமண்டபத்தை எடுத்ததாகக் குடைவரையில் பொறிக்கப் பட்ட பாடல் வடிவில் உள்ள கல்வெட்டு கூறுகிறது.

"திருத்திய பெரும்புகழ்த் தைவ தரிசனத்
தருந்தவ முனிவனைப் பொருட்செல்வன்
அறங்கிளர் நிலைமை இளங்கௌ தமனெனும்
வளங்கெழு திருநகர் மதிரை ஆசிரியன்
அவனேய் பார்முழுதாண்ட பஞ்சவர் குலமுத
லார்கெழு வைவேல் அவநீப சேகரன்
சீர்கெழு செங்கோல் சிரீவல்லவன்
என்றிப் பலவுங் குறிகொள் இனிதவை .........
பண்ணவர் கோயில் பாங்குறச் செய்வித்து
அண்ணல்வாஇ லறிவர் கோஇன்
முன்னால் மண்டகம் கல்லால் இயற்றி ............
அழியா வகையாற் கண்டனனே ............
சீர்மதிரை ஆசிரியனண்ண லகமண்டகம்
புதுக்கி ஆங்கறிவர்கோயில் முகமண்டக
மெடுத்தான் முன்"

இக்கல்வெட்டுச் செய்தியின் அடிப்படையில், சித்தன்னவாசலிலுள்ள ஓவியங்கள் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு மன்னரான அவனி சேகரன் என்ற பாண்டியன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் (கி.பி.815 - கி.பி.860) காலத்தவை என்று கருதப்படுகிறது. இவை வெண்சுதையின் மீது பொருத்தமான மூலிகை வண்ணங்கள் கொண்டு வரையப் பட்ட பாண்டியர் காலத்து ஓவியங்களாகும். முகமண்டபத்துத் தூணில் எட்டுப் பட்டைக் கொண்ட இடைப்பகுதியில் உட்புறத்தில் கிரீட மகுடத்துடன் அரசனினும் அவனது அரசியும் சமணத் துறவி ஒருவருடன் காட்சியளிக்கின்றனர். இவர்களில் சமணத் துறவி இவ்வோவியங்கள் உருவாவதற்கும் குடைவரை புதுப்பிக்கப் படுவதற்கும் காரணமாக இருந்த இளங்கௌதமனாக இருக்க வேண்டும் என்றும், அரசன் அரசியின் உருவங்கள் சமண முனிவர்க்கு ஆதரவளித்த பாண்டியன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் மற்றும் அவனது தேவியின் உருவங்களாக இருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது.

## அடிக்குறிப்புகள்:

*https://www.tamilvu.org/courses/diploma/d061/d0612/html/d0612663.htm*

*https://tamildigitallibrary.in/Articles/வரலாற்றுச்%20சின்னம்-86-சித்தன்னவாசல்%20குடைவரை-சித்தன்னவாசல்%20மலை*

# மதுரை மாவட்ட பாண்டியர் கால குடைவரைகளில் உள்ள விநாயகர் சிற்பங்கள்

**அபிஷேக் தென்புலத்தான்**
**இராமநாதபுரம்**

மதுரை மாவட்டத்தில் மொத்தம் ஒன்பது குடைவரைக் கோயில்கள் உள்ளன. இவை முற்கால பாண்டியர் காலத்தைச் சேர்ந்தவை. இதில், ஐந்து குடைவரைகளில், விநாகரின் ஆறு சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் தென்பரங்குன்றம் குடைவரையில் மட்டும் இரண்டு வகையான சிற்பங்கள் உள்ளது.

விநாயகர் சிற்பங்கள் அமைந்துள்ள குடைவரைகளின் பெயர்கள் :

1. இடைச்சி மண்டபம் - அரிட்டாபட்டி
2. சுப்ரமணிய சுவாமி குடைவரைக் கோயில் - திருப்பரங்குன்றம்
3. உமையாண்டவர் குடைவரை - தென்பரங்குன்றம்
4. உதயகிரீசுவரர் குடைவரை - குன்னத்தூர்
5. நீலகண்டேசுவரர் குடைவரை - குன்னத்தூர்

## இடைச்சி மண்டபம் - அரிட்டாபட்டி

விநாயகரின் உருவம் அர்த்த மண்டபத்தின் வெளிச்சுற்றில் இடது பக்கத்தில் அமைந்துள்ளது. 64 செ.மீ. ஆழம், 1.04 மீ. அகலம், 1.71 மீ. உயரம் கொண்ட கோட்டத்தில் பிள்ளையார் நான்கு கைகளுடன் அமர்ந்த நிலையில் உள்ளார். இவரது முன் வலது கையில் கோமேதககமும், இடது கையில் உடைந்த தந்தமும், பின் இடது கையில் என்ன உள்ளது என்று சரியாக அறியமுடியவில்லை, பின் வலது கையில் பாசமும் ஏந்தியுள்ளார். உடம்பில், கனத்த முப்புரி நூலும் மார்பிற்குக் கீழ் உதரபந்தமும் உள்ளது. மகர பூரிம முன் முகப்பும், பக்க முகப்புகளும் கொண்டு அமைந்த சிறிய அளவிலான மகுடம் சூடியுள்ளார். இரண்டு தந்ததில் வலது பக்கம் உள்ள தந்தம் உடைந்த நிலையிலும், கைகளில் தோள், கை வளைகள் கழுத்தில் சரப்பளி அணிந்தும் வலம்புரி விநாயகராக காட்சியளிக்கின்றார்.

இடைச்சி மண்டபம் - அரிட்டாபட்டி

# சுப்பிரமணிய சுவாமி குடைவரைக் கோயில் - திருப்பரங்குன்றம்

## கற்பக விநாயகர் கருவறை :

விநாயகரின் மிகப் பெரிய உருவச் சிற்பமும் இங்கு மலையைக் குடைந்து கலைவண்ணம் மிளிர உருவாக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் காணப்படும் விநாயகருக்கும் இங்குள்ள விநாயகருக்கும் பெரும் வேறுபாடு இருப்பதைக் காணலாம். இது துர்க்கை கருவறைக்கு இடப்பக்கத்தில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. நான்கு கரங்களில் பின்னிரு கரங்கள் இரண்டும் ஒரே கரும்பைத் தலைக்குப் பின்புறமாகப் பிடித்துள்ளன. கீழ் வலக்கரத்தில் கனியுளது. இடக்கரத்தைத் தொடை மீது வைத்துள்ளார். தலையில் கரண்ட மகுடமும், தும்பிக்கையில் மணியும், கழுத்தில் உருத்திராட்ச மாலை, காசு மாலை, மலர் மாலை ஆகிய மூன்று மாலையும் அமைய இவர் காட்சி தருகிறார். மேலே சூரியன், சந்திரன் வந்து வணங்க, அருகே கந்தருவர் சாமரம வீசுகின் றனர். பூதகணங்கள் இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டும், கனிகளைச்சுமந்து கொண்டும் வரும் கோலத்தில் அமைக்கப் பட்டுள்ளன. கீழே இடப்பக்கம் அனுமன் தன் இடக்கையால் சஞ்சீவி பருவதத்தைத் தாங்கிவரும்கோலமும் அமைக்கப்பட்டுள் ளது. நினைத்ததைக் கொடுக்கும் கற்பகமரம் போல் அடியவர் கள் நினைத்ததைக் கொடுக்கும் ஆற்றல் கொண்டவர் என் பதாகக் கற்பக விநாயகர் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. "மணவிழாக் கோலத்தில் முருகன் இங்கே கோயில் கொண்டு இருப்பதால் விநாயகர் கனியும் கரும்பும் கரங்களிலேந்தி மண விருந்தினைச் சுவைக்கின்ற காட்சியைக் காணமுடிகிறது" என்பர். இக்கருவறையில் முன்பு நர்த்தனக் கோலத்தில் விநாயகர் சிலை இருந்ததென்றும், அதனால் தான் ஆஸ்தான மண்டபத்தின் இடது தூணிலும், ஆஸ்தான மண்டப முகப்பின் மேற்பகுதியிலும் நர்த்தனகோலம் உள்ளதென்றும், பின்னர் இது அமர்ந்த கோலமாக மாறியிருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

சுப்ரமணிய சுவாமி குடைவரை - திருப்பரங்குன்றம்

மற்றைய இடங்களில் மேலிரு கரங்களில் அங்குசமும், பாசமும் ஏந்தியிருப்பார். ஆனால், இங்கோ மேலிரு கரங்களில் ஒரே கரும்பை நீளக் கரும்பைத் தலைக்குப் பின்புறம் வைத்துப் பிடித்த நிலையில் இருக்கின்றார்.

“சிற்ப அமைதிப்படி ஏராளமான கணபதி உருவங்கள் உள்ளன. பதினெட்டுக்கும் அதிகமான மூர்த்தங்கள் காணப்படுகின்றன. பொதுவாக இக்கணபதிகளின் கைகளில் இரண்டு ஆயுதங்கள் இருக்கும். அவை பாசமும், அங்குசமும் ஆகும். இந்த அடையாளங்கள் தாருண கணபதி வீரவிக்னேஸ்வர கணபதி, லெட்சுமண கணபதி பிரசன்ன கணபதி, உன்மத்த உச்சிட்ட கணபதி, விக்னராஜ கணபதி, புவனேச கணபதி, நிருத்த கணபதி, ஹரித்ர கணபதி ஆகிய உருவங்களிள் கைகளில் காணப்படும். இதனால் பாசமும், அங்குசமும் ஆரம்ப காலத்தில் இருந்திருத்தல் வேண்டும்.

இங்குள்ள விநாயகர் தம் கைகளில் பாசமும், அங்குசமும் கொண்டிராவிட்டாலும் இவரை வேட்டுவக் கடவுளின் வளர்ச்சி நிலையில் உள்ளவராகக் கொள்ளலாம்.

இரு கரங்களில் கரும்பைப் பிடித்துக்கொண்டு தாமரை மலர் மீது பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். கணுக்கால்வரை ஆடை காணப்படுகிறது. யக்ஞோபவீதம் மார்பில் படிந்து செல்கிறது.

இந்த உருவங்கள் அனைத்தும் அடர்த்தியாக பூசப்பட்டவை மற்றும் பூச்சுக்கு அடியில் உள்ள கல் உருவங்களின் விவரங்கள் தெளிவாக இல்லை. மேலும், அனைத்து சிற்பங்களும் அசல் அம்சங்களை கண்டிப்பாக பின்பற்றாமல் சமீபத்தில் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளன.

இவரை இடம்புரி கணபதி என்றும் அழைப்பர். இந்த குடைவரை கிழக்கு பகுதியை விட ஆழமாகவும் அகலமாகவும் உள்ளது. இது இரண்டாவது வரிசையின் உள் வரம்பிலிருந்து சுமார் 2 மீ அகலமும் 92 செ.மீ ஆழமும் கொண்டது.

அவரது காதுகள் தட்டையாகவும், விசிறியாகவும் உள்ளன, மேலும் அவரது தலை கரண்ட மகுஷால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

## திருப்பரங்குன்றம், வேற்கோட்டம், *The cave Temple’s in the region of pandiyas etc., and fieldwork.*

இங்கு இரண்டு வகையான விநாயகரின் சிற்பங்கள்

உமையாண்டவர் குடைவரை - தென்பரங்குன்றம்

இடம்பெற்றுள்ளன. ஒன்று ஹேரம்ப கணபதி, இவரின் புடைப்புச்சிற்பம் குடைவரையின் உள்ளே அர்த்தம்ணடபத்தில் அமைந்துள்ள நடராஜரின் சிற்பம் அருகில் உள்ளது. ஐந்து தலைகளும் பத்து கரங்களுடன் சிம்ம வாகனத்தில் காட்சியளிக்கிறார்.

இரண்டாவது சிற்பமானது குடைவரையின் வெளியே வலது பக்கத்தில் உள்ளது. நான்கு கரங்களுடன் பத்ம பீடத்தில் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். இவரது முன்னங்கைகள் உடைந்த நிலையிலும், பின்னங்கைகளில் வலது பக்கத்தில் அங்குசமும் இடது பக்கத்தில் பாசமும் ஏந்தியுள்ளார். முகம் சிதைந்த நிலையில் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

உமையாண்டவர் குடைவரை - தென்பரங்குன்றம்

## உதயகிரீசுவரர் குடைவரைக் கோயில் - குன்னத்தூர்

குடைவரையின் வெளியே சுவமியின் வலது பக்கத்தில் வடக்கு நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது இடம்புரி விநாயகரின் உருவம். தலையில் கரண்ட மகுடம், இரண்டு கைகளுடனும், பிற இடங்களைப் போலன்றி அரிதாக நின்ற நிலையில் காணப்படுகிறார். இருப்பினும், இந்த சிற்பமானது முழுமையாக முடிக்கப்படவில்லை, மேலும் மாற்றங்கள் மற்றும் சேதங்களுக்கு உட்பட்டுள்ளது. இவரின் முழுமையடையாத அமர்ந்த வடிவத்தை நிற்கும் வடிவமாக மாற்றுவதற்கான முயற்சி பிற்காலத்தில் மேற்க் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது, அதன்படி கால் பகுதியை பொருத்துவதற்காக அந்த இடமும் அடிவாரத்தில் நீட்டிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் தான் கைகளுக்கு கீழ்பகுதியில் அமர்ந்த நிலையிலான தோற்றத்திற்கான சான்று இடம்பெற்றுள்ளன. இவரின் உருவம் இடம்பெற்றுள்ள கோஷ்டமானது, 4.4 அடி உயரமும் 2.4 அடி அகலம் கொண்டுள்ளது.

## நீலகண்டேசுவரர் குடைவரைக் கோயில் - குன்னத்தூர்



இங்குள்ள வலம்புரி விநாயகரின் உருவமானது, தலையில் முழுமை பெறாத கரண்ட மகுடத்துடனும், நான்கு கரங்களுடன் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். இவரின் முன் வலது கையில் கோமேதகமும் இடது கையை இடுப்பில் வைத்த நிலையிலும், பின் வலது கையில் கோலயும், இடது கையில் கரும்பையும் (!?) கொண்டுள்ளார். உடம்பில் கனமான முப்புரி நூலும், உதரபந்தமும் கழுத்தில் சரப்பளி, கைகளில் கைவலை தோள் வலைகளும், இடுப்பில் மேலாடையும் அணிந்துள்ளார். இத்திருமேனி அமைந்துள்ள துவாரமானது 1.26 மீட்டர் உயரமும் 98 செ.மீ. அகலமும் 63 செ.மீ. ஆழமும் கொண்டது எனபது குறிப்பிடத்தக்கது.

* தகவல் - படம் (தமிழினியாள்)

* அளவுகள் - *Cave Temple's in the Region of Pandiyas etc., ASI*

* இருப்பிடம் பற்றிய தகவல்கள் :

1. அரிட்டாபட்டி - மேலூர் வட்டம் மதுரை மாவட்டம். [ 10.0403793, 78.2761080 ]
2. திருப்பரங்குன்றம் மலை - வடக்குப்பகுதியில் சுப்ரமணிய சுவாமி குடைவரை [ 9.8790104, 78.0709022 ] மற்றும் தெற்குப் பகுதியில் உமையாண்டவர் குடைவரை [ 9.8740291, 78.0708057 ] , மதுரை மாவட்டம்.
3. குன்னத்தூர் : மதுரை - சிவகங்கை செல்லும் சாலையில் வரிச்சியூர் அருகில் அமைந்துள்ளது. உதயகிரீசுவரர் கோயில் [ 9.9038369, 78.2542198 ] முதல் மலையின் கிழக்குச்சரிவிலும், நீலகண்டேசுவரர் கோயில் [ 9.9024887, 78.2480075 ] அருகில் உள்ள மலையின் கிழக்குப் பகுதியிலும் அமைந்துள்ளது.

* நிர்வாகம் / பாதுகாப்பு :

1. அரிட்டாபட்டி குடைவரை - தமிழக தொல்லியல் துறை
2. சுப்ரமணிய சுவாமி குடைவரைக் கோயில் - இந்து சமய அறநிலையத்துறை
3. தென்பரங்குன்றம் உமையாண்டவர் குடைவரை - மத்திய தொல்லியல் துறை
4. குன்னத்தூர் உதயகிரீசுவரர் குடைவரை - தமிழக தொல்லியல் துறை
5. குன்னத்தூர் நீலகண்டேசுவரர் குடைவரைக் கோயில் - மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் குருக்களுக்கு பாத்தியப்பட்டது. அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

குடைவரைகள் பற்றிய தேடல் தொடரும்...

# இராஜராஜரின் புதல்வியர் மூவர்

**டாக்டர் இரா.கலைக்கோவன்**
**கண் மருத்துவர், வரலாற்று ஆய்வாளர், திருச்சி**

சோழப் பேரரசின் இணையற்ற மாமன்னராக விளங்கித் தஞ்சாவூரில் தாம் எடுப்பித்த மாபெரும் கற்றளியாம் இராஜராஜீசுவரத்தால் தமிழ்நாட்டுக் கலைவரலாற்றில் சிறப்புக்குரிய இடத்தைப் பெற்றுள்ள பெருவேந்தர் முதலாம் இராஜராஜருக்கு மூன்று பெண்கள் இருந்தனர். அம்மூவருள் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்கு அறிமுகமான பெயர் குந்தவை.

**குந்தவை நாச்சியார்**

## குந்தவை நங்கை

கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருவலஞ்சுழிக் கோயில் வளாகத்துள் இராஜராஜரின் பட்டத்தரசியான உலகமாதேவி எழுப்பிய சேத்ரபாலர் கோயில் உள்ளது. அக்கோயில் இறைவனுக்குப் பொன்னும் பொன்னாலான நகைகளும் குந்தவை வழங்கியதாக அக்கோயிலில் உள்ள இராஜராஜரின் 25ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுச் சொல்கிறது.1 குந்தவையைக் குறிப்பிடும்போது, ‘ஸ்ரீராஜராஜதேவர் திருமகளார் விமலாதித்ததேவர் மகாதேவியார் ஸ்ரீகுந்தவை நங்கையார்’ என்று அவருடைய தந்தையார் பெயரையும் மணவாளர் பெயரையும் கூறிச் சிறப்பிக்கும் கல்வெட்டு, இராஜராஜரின் மற்றொரு மகளையும் வெளிச்சத்திற்குக் கொணர்கிறது.

## மாதேவடிகள்

மாதேவடிகளார் என்றும் நங்கை மாதேவடிகளார் என்றும் அறியப்படும் இராஜராஜரின் இந்தப் பெண்ணை, 'நடுவில் பெண்பிள்ளை', 'நடுவில் பிள்ளையார்' என்று அறிமுகப்படுத்துவதன் வழி, இராஜராஜரின் மூன்று பெண்களுள் இவர் இடைப்பட்டவர் என்று தெளிவுபடுத்தும் இக்கல்வெட்டு, சேத்ரபாலருக்கு மாதேவடிகள் தந்த நகைகளைச் சுட்டுமிடத்து, 'ஸ்ரீராஜராஜதேவர்க்கு ஆடியருள பிரசாதம் பெற்ற பொன்னில்' அவர் அவ்வணிகலன்களைச் செய்தளித்ததாகக் கூறுகிறது.

இராஜராஜரின் இந்த இரண்டு பெண்களில் நடுவிற் பெண்ணாகக் குறிக்கப்படும் மாதேவடிகள் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருவையாறு கோயில் வளாகத்தின் வடபகுதியில் முதலாம் இராஜராஜரின் பட்டத்தரசியார் உலகமாதேவியார் எடுப்பித்த கற்றளியான உலகமாதேவீசுவரம் கல்வெட்டிலும் இடம்பெற்றுள்ளார்.

கோயில் அர்த்தமண்டபத்தின் வடக்குத் தாங்குதளத்தில் உள்ள இக்கல்வெட்டில், 'ஸ்ரீராஜராஜதேவர் திருமகளார் மாதேவடிகளார் திருவையாற்று ஒலோகமாதேவி ஈச்வரமுடையார்க்குத் தாம் உடையார் ஸ்ரீராஜராஜதேவர்க்கு ஆடிஅருளிப் பிரசாதம் பெற்ற பொன்னில்' கொடுத்த நகைகள் பதிவாகியுள்ளன. மன்னரின் 25ஆம் ஆட்சியாண்டின் 144ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டுள்ள பதினைந்து வரிகளாலான இக்கல்வெட்டு மிக முக்கியமானதாகும்.

## அருமொழி சந்திரமல்லியான கங்கமாதேவி

இராஜராஜரின் மூன்றாவது மகளைக் குறிக்கும் கல்வெட்டும் இதே உலகமாதேவீசுவரத்தின் தெற்குத் தாங்குதளத்தில்தான் உள்ளது. 'உடையார் ஸ்ரீராஜராஜதேவர் திருமகளார் அருமொழி சந்திரமல்லியான கங்கமாதேவியார்' என்று இவரை வெளிப்படுத்தும் அக்கல்வெட்டு, கோயிலுக்கு இவ்வம்மை பொன்னாலான ஈச்சோப்பிக்கை வழங்கியதைப் பதிவுசெய்துள்ளது.

வலஞ்சுழிக் கல்வெட்டின் அடிப்படையில் வரலாற்றறிஞர் நீலகண்ட சாஸ்திரியார் இராஜராஜருக்கு மூன்று பெண்கள் இருந்தனர் என்று குறிப்பிட்டுள்ளபோதும் குந்தவை, மாதேவடிகள் எனும் இரண்டு பெண்களின் பெயர்களே அவருடைய நூலில் இடம்பெற்றுள்ளன.2 மூன்றாம் பெண்ணின் பெயரோ, அப்பெண்ணின் பெயர் சுட்டப்படும் ஐயாறு கல்வெட்டுப் பற்றிய குறிப்போ அவரது நூலில் இல்லை.

சோழர் வரலாற்றைத் தமிழில் உருவாக்கித் தந்த வரலாற்றறிஞர் தி. வை. சதாசிவபண்டாரத்தார் தம்முடைய நூலில், சந்திரமல்லியையும் மாதேவடிகளையும் ஒரே பெண்ணாகக் கொண்டு இராஜராஜருக்கு இரண்டு பெண்கள்தான் என்று முடிவுசெய்துள்ளார்.3 உலகமாதேவீசுவரத்திலுள்ள மாதேவடிகளின் கல்வெட்டும் கங்கமாதேவிக் கல்வெட்டும் தற்போது

முழுமையாகப் படிக்கப்பட்ட நிலையில்4 பேராசிரியர் நீலகண்டசாஸ்திரியாரின் கூற்றுப்படி இராஜராஜரின் புதல்வியர் மூவர் என்பது உறுதிப்படுவதுடன், அவர்தம் பெயர்களும் முழுமையான அளவில் அறியப்பட்டுள்ளன.

இராஜராஜரின் மூன்று மகள்களுள் குந்தவையும் மாதேவடிகளும் சேத்ரபாலருக்குக் கொடையளிக்க, மாதேவடிகளும் சந்திரமல்லியும் உலகமாதேவி ஈசுவரத்திற்குக் கொடையளித்துள்ளனர். உலகமாதேவி எடுப்பித்த இவ்விரு கற்றளிகளும் பாடல் பெற்ற இரண்டு பெரும் கோயில் வளாகங்களுக்குள்ளேயே உள்ளமை கருதத்தக்கது.

இராஜராஜரின் மூன்று மகள்களுள் அவரது 25ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் கணவர் பெயருடன் அறியப்படுபவர் குந்தவை மட்டுமே. அருமொழி சந்திரமல்லியான கங்கமாதேவி எனும் பெயரிலுள்ள, 'கங்கமாதேவி' எனும் பிற்பகுதி கொண்டு இப்பெண் கங்க அரசனை மணந்தவராகலாம் என்று கூறியுள்ளார் திரு. சு. இராஜகோபால்.5

கங்கமாதேவி என்பது சந்திரமல்லியின் மற்றொரு பெயராகவே கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. 'அருமொழி சந்திரமல்லியான கங்கமாதேவி' என்றே கல்வெட்டு அவரை அறிமுகப்படுத்துகிறது. கங்க அரசனின் மனைவியாக அவர் இருந்திருப்பின், வலஞ்சுழிக் கல்வெட்டுக் குந்தவையைச் சுட்டுமாறு 'ஸ்ரீராஜராஜ தேவரின் திருமகளார் கங்கமன்னரின் தேவியார்' என்றே ஐயாறு கல்வெட்டு அவரையும் சுட்டியிருக்கும். ஆனால், இங்குள்ள கல்வெட்டு மிகத் தெளிவாக அருமொழி சந்திரமல்லியான கங்கமாதேவி என்றே அப்பெண்ணைச் சுட்டுவதால் அவரை கங்க மன்னனுக்கு மணம் முடிக்கப்பட்டவராகக் கொள்ள முடியவில்லை.

இராஜராஜரின் 25ஆம் ஆட்சியாண்டில் அவரது மூன்று பெண்களுள் குந்தவை மட்டுமே கணவர் பெயருடன் காட்சிதருகிறார். மற்ற இரண்டு பெண்களின் நிலை என்ன என்பதில் தெளிவில்லை. இந்த மூன்று பெண்களுமே பட்டத்தரசி உலக மாதேவி எடுப்பித்த கற்றளிகளுக்கு

மட்டுமே கொடையளித்திருப்பதால் இவர்கள் அவ்வம்மையின் புதல்விகளாகலாம் என்று கருத்துக்கொள்ளவும் இடமுள்ளது.

இவர்தம் தந்தையான இராஜராஜர் தஞ்சாவூரில் எடுப்பித்த இராஜராஜீசுவரத்திற்கு யாதொரு கொடையும் இவர்களால் வழங்கப்படவில்லை. 'நாம் குடுத்தனவும் அக்கன் குடுத்தனவும் நம் பெண்டுகள் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும்' எனத் தந்தார் தந்ததையெல்லாம் பதிவுசெய்துள்ள இராஜராஜர், 'நம் பெண்கள் குடுத்தனவும்' என்று சுட்டி மகிழ இவர்கள் ஏன் இராஜராஜீசுவரத்தைத் தழுவாது போயினர் என்பது புதிராகவே உள்ளது.

இம்மூன்று பெண்களில் குந்தவையும் சந்திரமல்லியும் சொல்லாத ஓர் அரிய தகவலை மாதேவடிகள் தாம் இடம்பெறும் இரண்டு கல்வெட்டுகளிலும் தவறாமல் வெளிப்படுத்தியுள்ளார். 'உடையார் ஸ்ரீராஜராஜதேவர்க்கு ஆடிஅருளிப் பிரசாதம் பெற்ற பொன்'னிலேயே மாதேவடிகளின் இரண்டு கோயில் கொடைகளும் அமைந்துள்ளன. இராஜராஜருக்கு நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் இந்தத் திருமுழுக்கு அவரது 25ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளிலேயே இடம்பெற்றுள்ளது. இந்த முழுக்குப் பொன்முழுக்கு என்றே கருத வேண்டியுள்ளது. அப்படி அவர் ஆடிஅருளிய பொன்னையே மாதேவடிகள் பிரசாதமாகப் பெற்று, அதிலிருந்தே கோயில்களுக்குக் கொடையளித்துள்ளார்.

இராஜராஜருக்குத் திருமுழுக்கு நிகழ்ந்ததும் அந்நிகழ்வில் நடுமகள் மாதேவடிகள் பிரசாதம் பெற்றதும் அரிய வரலாற்றுத் தரவுகளாக இரண்டு கல்வெட்டுகள் வழிப் பதிவாகியுள்ளபோதும், இராஜராஜரின் 25ஆம் ஆட்சியாண்டில் கங்கமாதேவியும் மாதேவடிகளும் ஏன் கணவர் பெயரின்றிக் குறிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறியக்கூடவில்லை.

வரலாறு எப்போதுமே இப்படித்தான்; ஒரு கதவைத் திறந்து பல வழிகளைக் காட்டும். சில வழிகள் உடன் வெளிச்சம் பெற்றுப் பயணங்களைத் தொடரவைக்கும். சில வழிகளோ, தேட வைக்கும்; தயங்க வைக்கும்; தளராமல் நடந்தால் மெல்ல, மெல்ல இலக்கைக் காட்டும்.

## குறிப்புகள்


1. *மு. நளினி, இரா. கலைக்கோவன், வலஞ்சுழி வாணர், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், 2005, ப. 129.*
2. *K. A. Nilakanta Sastri, The Colas, Madras University, Chennai. 1964, p. 187.*
3. *தி.வை.சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974, ப. 133.*
4. *இரா. கலைக்கோவன், ஆடிஅருளப் பிரசாதம் பெற்ற பொன்னில் . . . , வரலாறு மின்னிதழ், ஜனவரி, 2012.*
5. *சு. இராஜகோபால், திருவையாறு, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை, 1976, ப. 91.*

# இந்தியாவிலேயே முதல் சைட் மியூசியம் அமைந்தும் பலன் இல்லை 150 ஆண்டுகளாக தூரதிஷ்டமான ஆதிச்சநல்லூர் தொல்லியல் களம்

**முத்தாலங்குறிச்சி காமராசு**
**தொல்லியல் ஆய்வாளர், நெல்லை**

இந்தியாவிலேயே முதல் சைட் மியூசியம் என்ற பெயரை பெறுவதற்கு ஆதிச்சநல்லூர் கடந்து வந்த காலம் கிட்டத்தட்ட 150 வருடம். ஆனாலும் அது பணி சரியாக நிறைவேறாமல் தடுமாறிக்கொண்டே இருக்கிறது.

ஆதிச்சநல்லூரில் 1876 இல் ஜெர்மன் நாட்டை சேர்ந்த ஜாகோர் என்பவர் அகழாய்வு செய்து இங்கு கிடைத்த பொருள்களை அவரது நாட்டுக்கு கொண்டு செல்கிறார். ஜெர்மன் நாட்டில் பெர்லின் நகரில் உள்ள 64 அருங்காட்சியகத்தில் ஒரு அருங்காட்சியகத்தில் அந்த பொருளை பார்வைக்கு வைக்கிறார். அப்போது கூட துரதிஷ்டம் தான். ஏன் என்றால் இந்த பொருள்களை அவர் ஆய்வுசெய்யவில்லை. அறிக்கையும் தரவில்லை. எத்தனை ஆண்டு பழமையானது. இதன் முக்கியத்துவம் என்ன என்பது தெரியாமலேயே முதல் ஆய்வு கடந்து விட்டது.

காலங்கள் கடக்கிறது. நெல்லை திருச்செந்தூர் ரயில் பாதை போடும் போது இவ்விடத்தினை தோண்டுகிறார்கள். அப்போது நிறைய பழங்காலபொருள்கள் கிடைக்கிறது. அருகில் உள்ளவர்கள் தமது முன்னோர்கள் ஏதோ புதைத்து வைத்து விட்டு சென்று விட்டார்கள். அதை தேட வேண்டும் என கடப்பாறை கம்பியோடு வந்துஅவ்விடத்தினைகூறுபோடுகிறார்கள். அப்போது இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஆண்டு கொண்டிருக்கிறார்கள். இந்திய தொல்லியல் துறை தலைவராக இருந்தவர் அலெக்ஸாண்டர் ரியா. இவர் இவ்விடத்தினை பாதுகாத்து சட்டம் இயற்றுகிறார். சுமார் 125 ஏக்கர் நிலம் இந்திய தொல்லியல் துறை கட்டுபாட்டுக்குள் வருகிறது. எனவே இவ்விடம் பாதுகாக்கப்படுகிறது. இவ்விடத்தில் 1902 ல் அலெக்சாண்டர் இரியா ஆய்வு செய்து நூற்றுகணக்கான பொருள்களை எடுக்கிறார். மண்பாண்டம், இரும்பு,வெண்கலம், தங்க நெற்றிப்பட்டயம் என வகைவகையாக பொருள்களை எடுத்து சுமார் 21 மாட்டு வண்டிகளில் ஏற்றி சென்னை கன்னிமாரா நூலகம் அருகில் உள்ள அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கிறார். சில எலும்பு கூடுகள், மண்டையோடுகள் உள்பட பொருள்கள் பல நாடுகளுக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு செல்லப்பட்டது. ஆனாலும் பெரும்பான்மையான பொருள்கள் பாதுகாக்கப்பட்டது. அவர்தான் முதல் முதலில் இந்த பொருள்களை படம் எடுத்து ஆவணப்படுத்துகிறார். இதற்கிடையில் டாக்டர்கால்டுவெல் உள்பட பலர் ஆதிச்சநல்லூரில் சிறிய சிறிய ஆய்வு நடத்துகிறார்கள். காலங்கள் கடக்கிறது சிந்து சமவெளியை ஆய்வு செய்த வங்க தேசத்து அறிஞர் பானர்ஜி அவர்கள் சிந்து சமவெளி நாகரீகமே பொருநை வெளி நாகரீகம் . பொருநை ஆற்றங்கரையில் இருந்து தான் சங்கலி தொடர் போல சிந்து நதி வரை வந்துள்ளது என ஆங்கிலத்தில் கட்டுரை எழுதி உலக நாடுகளுக்கு அறிவிக்கிறார். இதனால் ஆதிச்சநல்லூர் உலக மக்களால் திரும்பி பார்க்கப்பட்டது. ஆனாலும் துரதிஷ்டம் அடுத்த கட்ட நகர்வு இல்லாமல் அப்படியே விடப்பட்டு விட்டது.

*2004 ல் இந்திய தொல்லியல் துறையினர் டாக்டர் சத்திய மூர்த்தி தலைமையில் ஒரு ஆய்வு செய்தனர். அதன் பொருள்களை சென்னை தலைமை செயலகம் அருகில் உள்ள தொல்லியல் துறைக்கு சொந்தமான இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. ஆனாலும் அதன் அறிக்கை சுமார் 19 வருடங்கள் ஆகியும் வெளிவரவில்லை.*

தூத்துக்குடி மாவட்டம் பிரிந்து *25* வது வருடம் விழா எடுக்கும் போது அப்போதைய கலெக்டர் ஆஷிஷ குமார் இவ்விடத்தினை பிரபலமாக்க முயற்சி செய்து கட்டிடங்கள், ஆர்ச் போன்றவற்றை கட்டுகிறார்கள். அதன் பிறகும் முன்னேற்றமில்லை. அவை அப்படியே போட்டுப்பட்டு விட்டது. இதுபோன்று பல முயற்சிகள் எடுக்கப்பட்டும் ஆதிச்சநல்லூர் நாகரீகம் பெரியதாக வெளியே தெரியவில்லை. எல்லாமே தூரதிஷ்டம்.

என்ன செய்வது ஆதிச்சநல்லூரில் நடக்கும் எல்லா முறயச்சியும் தோல்வியடைகிறது. இதற்கு முடிவே இல்லையா? என்ற எண்ணம் எனக்கு தோன்றியது. இதற்கிடையில் கிழடி அகழாய்வு முடிவுகள் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது. அனைவரையும் பேச வைத்தது. அப்போது அதை விட பழமையான ஆதிச்சநலலூர், 2004 நடந்த அகழாய்வில் கிடைத்த பொருள்களை வைத்து சில தனியார் நிறுவனங்கள் இதன் வயது 6 ஆயிரம் வரைஇருக்கும் என அறிவித்தனர். ஆனால் ஆதிச்சநல்லூர் பேசப்படவில்லை. 2600 பழமையான கீழடி பெருமையாக பேசப்படுகிறது. அப்படியென்றால் ஆய்வு முடிவை வெளியே கொண்டு வரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். இதற்காக மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன். எனது வழக்கறிஞர் டாக்டர் அழகு மணி இதற்கான ஏற்பாடுகளை செய்தார். 2017 தொடரப்பட்ட இந்த வழக்கில் மூன்று கோரிக்கைகளை முன்வைத்தோம். 2004 ல் நடந்த அகழாய்வு அறிக்கை வேண்டும். மீண்டும் அகழாய்வு செய்யவேண்டும். ஆதிச்சநல்லூரில் உலக தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்பதே எங்களது கோரிக்கை. மூன்று கோரிக்கையையும் நிறைவேறியது. குறிப்பாக 2004 ஆய்வுசெய்த அறிக்கையை பரபரப்பாக வெளியிட்டார்கள். மாநில அரசு ஆதிச்சநல்லூரில் இரண்டு கட்ட ஆய்வு செய்தது. இதே வழக்கில் சிவகளை பகுதியில் மூன்று கட்ட அகழாய்வு செய்தனர். கொற்கையில் ஒரு கட்ட அகழாய்வும் செய்தது. இந்த மூன்றுஇடத்தில்கிடைத்தபொருள்களைதிருநெல்வேலிமாவட்டம்பாளையங்கோட்டை மதுரை கன்னியாகுமரி சாலையில் ரெட்டியார்பட்டி மலையில் கீழடியை விட நான்கு மடங்கு பெரிய அருங்காட்சியகம் ஒன்றை கட்டி வருகிறார்கள். விரைவில் இந்த கட்டிடம் மிகப்பிரமாண்டமாக திறக்கப்படும் என தெரிகிறது. இது ஒருபுறம் வெற்றியாக இருந்தாலும் இந்த வழக்கு நடக்கும் போதே 125 ஏக்கரையும் பாதுகாப்பு கம்பி போட்டு பாதுகாக்க மத்திய தொல்லியல் துறை நடவடிக்கை எடுத்தது.

இதற்கிடையில் 2020 ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆதிச்சநல்லூரில் சைட் மியூசியம் அமைக்கப்படும் என அறிவித்தார். இதன் படி திருச்சி மண்டலம் புதிதாக அமைக்கப்பட்டு டாக்டர் அருண்ராஜ் இயக்குனராக அறிவிக்கப்பட்டார். அதன்பின் 2021 ஆம் ஆண்டு கனிமொழி எம்.பி சைட்மியூசியம் பணிகளை துவக்கி வைத்தார். மிக வேகமாக பணி நடந்து இந்தியாவிலேயே முதல் சைட் மியூசியம் பணி துவங்கியது . இதற்காக மத்திய அரசு சார்பில் ரூ.5 கோடியில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம், சைட் மியூசியம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. முதல்கட்டமாக மாதிரி சைட் மியூசியமும் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டது. இதை கடந்த 5.08.2023 அன்று கனி மொழி எம்.பி முன்னிலையில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதா ராமன் திறந்து வைத்தார். அதே நாளில் உலக தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. இப்போதும் ஆதிச்சநல்லூருக்கு தூரதிஷ்டம் தான்.

அகழாய்வு நடந்த இடங்களில் தென்னை ஓலை கீற்றிலான கொட்டகை அமைத்து இருந்தனர். அதன் மீது தார்ப்பாய் சுற்றி இருந்தனர். அகழாய்வில் கிடந்த பொருட்கள் குறித்து ஆய்வறிக்கை தயாரிக்கும் பணியில் மத்திய தொல்லியல் துறையினர் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் இங்கு பணியாற்றிக்கொண்டிருந்த இயக்குனர் டாக்டர் அருண்ராஜ் பதவி உயர்வு பெற்று டெல்லிக்கு சென்றார். அதன் பின் பணி அப்படியே கிடப்பில் போடப்பட்டு விட்டது. மாதிரி சைட் மியூசியம் அமைக்கப்பட்ட பி சைட்டிலும் 2023 ஆம் ஆண்டு டிசம்பரில் வந்த மழை வெள்ளம் புகுந்தது. இதனால் மாதிரி சைட் மியூசியம் மிகவும் பாதிக்கப்பட்டது. அதே வேளையில் மிகவும் பிரமாண்டமாக சி சைட்டில் சைட் மியூசியம் அமைய அகழாய்வு முடிந்த நிலையில் போதிய பணம் ஒதுக்கீடு இல்லாமல் அந்த பணி கிடப்பில் போடப்பட்டது. இந்த சைட்டில் போடப்பட்ட தற்காலிக செட் மழை வெள்ளத்தில் ஒழுக ஆரம்பித்தது. இதனால் பல லட்சம் செலவு செய்து மியூசியம் அமைக்காத காரணத்தினால் அந்த பணி செய்த இடமே வீணாகிக்கொண்டிருந்தது. உலக தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்க ஊர் பொதுமக்கள் 5 ஏக்கர் இடத்தினை தானமாக அளித்திருந்தார்கள். அந்த இடத்தில் அடிக்கல் நாட்டிய பணியும் கிடப்பில் கிடந்தது.

தொல்லியல் ஆர்வலர்கள் ஆதிச்சநல்லூரில் மியூசியம் அமைக்க வேண்டும். என தொடர்ந்து மனு செய்து வந்தனர். மற்றுமொரு வழக்கையும் நான் மதுரைஉயர்நீதி மன்றத்தில் தொடர்ந்தேன். தொடர்ந்து இயக்குனர்களாக வந்தவர்கள் வட நாட்டை சேர்ந்தவர்களாக இருந்த காரணத்தினால் ஆதிச்சநல்லூர் மீது கவனம் செலுத்த வில்லை. எனவே தமிழர் ஒருவரை திருச்சி மண்டல இயக்குனராக பணி நியமனம் செய்யவேண்டும் என்ற கோரிக்கை ஆதிச்சநல்லூர் தொல்லியல் ஆர்வலர்கள் மத்தியில் எழுந்து வந்தது. இந்த நிலையில் தான் தமிழகத்தினை சேர்ந்த அறவாழி என்பவர் திருச்சி மண்டல இயக்குனராக கடந்த மாதம் பொறுப்பேற்றார். இதனால் ஆதிச்சநல்லூர் பணிகள் முடுக்கி

விடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. அதுபோலவே அவரும் ஆதிச்சநல்லூர் வருகைதந்து சி சைட்டில் உள்ள ஓலைக்கூரையை அகற்றி நிரந்தர கூரை அமைத்து, கண்ணாடி கிளாஸ் மூலம் சைட் மியூசியம் அமைக்கும் பணிக்கான நடவடிக்கை எடுத்தார். இந்த பணிக்கான மத்திய அரசு அனுமதிக்கு சென்ற நிலையில் (16.10.2025) ஆதிச்சநல்லூரில் வடகிழக்கு பருவ மழை பெய்தது.

அகழாய்வு நடந்த இடத்தின் மீது அமைக்கப்பட்ட ஓலைக்கீற்று கொட்டகைகளும் சேதமடைந்த நிலையில் இருந்தன. இந்த நிலையில் நேற்று பெய்த கனமழையால் ஆதிச்சநல்லூர் அகழாய்வு குழிகளுக்குள் மழைநீர் புகுந்தது.

அங்கிருந்த பழங்கால முதுமக்கள் தாழிகள், மண்பாண்ட பொருட்களுக்குள் தண்ணீர் புகுந்ததால் சேதமடைந்தன. கீற்றுக்கொட்டகை வழியாக மழைநீர் ஒழுகிய இடங்களில் வாளிகள் வைத்தும் தண்ணீரை அகற்றினர். அகழாய்வு குழிகளுக்குள் தேங்கிய தண்ணீரை அகற்றும் பணியில் தொல்லியல் துறை ஊழியர்கள் மும்முரமாக ஈடுபட்டனர். முக்கால் வாசி பணி நடந்தும் இந்தியாவிலேயே முதல் முதலில் அமைக்கப்பட்ட சைட் மியூசியம் நிலை பரிதாபமாகத்தான் உள்ளது.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழர்களின் நாகரீகத்தினை தொடங்க வேண்டும் என்றால் பொருநை ஆற்றங்கரையில் இருந்து தான் தொடங்க வேண்டும் என ஆதிச்சநல்லூரை முன் வைத்து கூறியுள்ளார். பொருநை ஆற்றங்கரையில் உள்ள ஆய்வு செய்த சிவகளையில் எடுத்த இரும்பு பீட்டா ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டு அதன் காலம் 5300 என உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் தான் மாநில் அரசு உருவாக்கும் அருங்காட்சியகத்துக்கு பொருநை அருங்காட்சியகம் என பெயர் வைத்து உள்ளார்கள்.

ஆனால் இந்தியாவிலேயே முதல் முதலில் அமைக்கப்பட்ட சைட் மியூசியம் நிலைத்தான் பரிதாபமான நிலையில் உள்ளது.




இந்த நிலையில் ஆதிச்சநல்லூர் சைட் பொறுப்பு அதிகாரி சங்கர், ஆதிச்சநல்லூர் சி. சைட்டில் பி சைட்டில் அமைந்து இருப்பது போலவே சைட் மியூசியம் அமைக்க

அனைத்து நடவடிக்கையும் மத்திய தொல்லியல் துறையினரால் எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் பணி துவங்கும் என்று தகவல் அளித்துள்ளார்.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அடிக்கல் நாட்டிய இடத்தில் உலக தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைத்து வெளிமாநிலம் மற்றும் வெளிநாட்டில் உள்ள ஆதிச்சநல்லூர் பொருள்களை மீட்டுக்கொண்டு இங்கே பார்வைக்கு வைக்க வேண்டும். சி சைட்ல் பிரமாண்டமாக சைட் மியூசியம்அமைக்க வேண்டும் என்பது தான் இந்திய தொல்லியல் ஆர்வலர்களின் கோரிக்கை அதை மத்திய அரசு நிறைவேற்றும் என எதிர்பார்க்கிறார்கள்.

## சைட் மியூசியம் என்றால் என்ன?

கீழடி ,உள்பட பல அருங்காட்சியகங்களில் வேறொரு இடத்தில் அகழாய்வு செய்த பொருள்களை எடுத்து வந்து காட்சி படுத்தியிருப்பார்கள். இதுபோலத்தான்பொருநை அருங்காட்சியகமும் அமைய உள்ளது . ஆனால் சைட் மியூசியம் என்பது உள்ளது உள்ளபடியே எடுத்த இடத்தில் தோண்டப்பட்ட குழியின் மேல் கண்ணாடி பேழை அமைத்து அதன் மேலே நின்று பொருள்களை பார்வையிடும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கும். ஐரோப்ப நாடுகளில் தான் இதுபோன்ற சைட் மியூசியம் உண்டு. இந்தியாவிலேயே முதல் முதலில் தமிழ் நாடு தூத்துக்குடி மாவட்டம் தாமிபரணி ஆற்றங்கரையில் உள்ள ஆதிச்சநல்லூரில் அமைக்கப்பட்டுள்ளது. ஆதிச்சநல்லூரில் மற்றொரு பகுதியில் இதுபோன்ற சைட் மியூசியம் அமைக்க தோண்டப்பட்ட குழியில் மியூசியம் அமைக்காமல் கிடப்பில் போடடுவிட்டார்கள். அந்த இடத்தில் தான் தற்காலிக கூரை மழையில் விழுந்து தண்ணீர் பெருகி உள்ளது. இதுதான் தொல்லியல் ஆர்வலர்கள் மனதை உலுக்குவதாக உள்ளது.

# நல்ல தமிழ் பேசுவோம்
# நாளும் தமிழ் வளர்ப்போம்

**பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு**
**முதல் பதிவாளர் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை**

தமிழ் என்னும் சொல்லுக்கு ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டு கால இலக்கிய வரலாற்றில் அதன் பொருள் காலந் தோறும் மாறுபட்டு வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இனிமைத் தமிழ்மொழி எமது எமக்கு இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது

என்றார் பாவேந்தர் .

தமிழுக்கும் அமுதென்று பேர் என்று

அவர் மேலும் மொழிந்தார்

தெள்ளூற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கு அமரர் சிறப்புக் கண்டார்

என்றார் பாரதியார் .

. எத்திசையும் புகழ் மணக்க
இருந்த பெரும் தமிழணங்கே

என்று தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில் தமிழை அணங்காகத் தேவதையாக் கண்டார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

.தமிழினிய தெய்வீகமே மொழிகள்குலத் தனிவிளக்கே

என்றார் தான் பாடிய தமிழ்த் தாய் வாழ்த்தில் நாவலர் சோமசுந்தர பாரதியார் .

இவர்கள் எல்லாம் இருபதாம் நூற்றாண்டில் எழுந்த கவிஞர்கள்.

இனிமைத் தமிழ் மொழியைத் தங்கள் உயிராகப் போற்றி அதனைத் தெய்வமாகவும் தேவதையாகவும் அமுதாகவும் கண்டார்கள்.

தங்கள் மொழியையும் நாட்டையும் தாயாகக் கருதுவது தமிழர் மரபு.அந்த வகையில் , தங்கள் மொழியாம் தமிழைத் தாயாகக் கருதினார்கள்.

தாயெழில் தமிழை எந்தன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியில் காண
இப்புவி அவாவிற்று என்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தெந்தன் செவியில் வந்து பாயும்நாள் எந்த நாளோ
யாரிதைப் பகர்வார் இங்கே!

என்று விழைந்தார் பாவேந்தர்.

பாவேந்தர் தமிழைத் தாய் என்று அறிவிக்கின்றார்.

தமிழ் என்னும் சொல் ஐந்து பொருள்களில் ஆளப்பட்டு வருவதை இன்று நாம் காண்கிறோம் .

1. அவை:
2. மொழி
3. மக்கள்
4. இனம்
5. நாடு
6. இலக்கியம்

என்பன.

தமிழ் என்னும் சொல் உலக மொழிகளிலே உயர் தனிச் மொழியைக் குறிக்கும் என்பதை நாம் அறிகிறோம்

எங்கள் தமிழ்மொழி
எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

என்றார் பாரதி.

தமிழ் என்னும் சொல் தமிழ் மக்களைக் குறிக்கிறது.தமிழ் என்று சொன்னால் தமிழர்களைத் தமிழ் மக்களைக் குறிக்கும் என்கிற இந்த மரபு புறநானூற்றில் இருந்தே தொடங்கி இருக்கிறது. பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் போர் தொடுக்கும்

பொழுது அவனை எதிர்த்துச் சோழரும் சேரரும் மேலும் ஐந்து குறுநில மன்னர்களும் போரிட்டார்கள்.அப்பொழுது அந்தப் போர்க்களக் காட்சியைக் கண்ட புலவர் குடபுலவியனார், போர்க்களத்தில் தமிழ் மன்னர்கள் தங்களுக்குள் போரிட்டார்கள் என்பதைக் குறிக்கின்றார்.

தமிழ் தலை மயங்கிய தலயாலங் கானத்து (புறநானூறு 19_2)

என்று குறிப்பிடுகிறார்.

இங்கே தமிழ் என்பது தமிழ் மன்னர்ளை மட்டும் அல்லாமல் தமிழ் மக்களையும் குறிக்கிறது.

**தமிழ் என்ற சொல் தமிழ் இனத்தையும் குறிக்கிறது.**

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்

என்று நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை,தமிழ் என்பது ஓர் இனத்தின் பெயர் என்று எடுத்துக்காட்டுகிறார்.

**தமிழ் என்பது நாட்டைத் தமிழ் மொழி பேசும் நிலப்பரப்பைக் குறிக்கிறது**

கும்மியடித் தமிழ்நாடு முழுதும் குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி

என்றார் பாரதியார்.

எனைஈன்ற தந்தைக்கும்
தாய்க்கும் மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு
தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும்
விளையும் என்றால்
செத்தொழியும் நாள்எனக்குத் திருநாளாகும்

என்றான் பாவேந்தர் இயற்றிய பாண்டியன் பரிசின் காப்பியத் தலைவன். இங்கே பாவேந்தர் தமிழ்நாடு மக்கள் என்கிற சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் என்பதை நம்மால் காண முடிகிறது.

தமிழ் என்னும் சொல் இலக்கியம் என்ற பொருளையும் கொண்டு வருகிறது. .சங்கத்தமிழ் என்றால் சங்க இலக்கியம் என்று நாம் உணர்ந்து கொள்கிறோம்.

சங்கத் தமிழ் மூன்றும் தா
என்கிறாள் ஔவைப் பிராட்டி.

சங்கத் தமிழ் மாலை
முப்பதும் தப்பாமல்

என்று பாடுகிறாள் ஆண்டாள் நாச்சியார்.

காப்பியத் தமிழ் என்றால் காப்பிய இலக்கியம் என்று புரிந்து கொள்கிறோம். எனவே தமிழ் என்னும் சொல்தமிழ் மொழியில் தோன்றிய இலக்கியத்தையும் குறிப்பதற்குப் பயன்பட்டு வருகிறது.

அதே நேரத்தில் இந்தத் தமிழ் என்னும் சொல்லுக்குச் சங்ககாலத்தில் அது ஒரு மொழி என்ற பொருளைத் தாண்டி அதன் தனிச் சிறப்பையும் உணர்த்தியது. பிறமொழி

பேசுகிறவர்கள் தமிழின் தனிச்சிறப்பாகத் தமிழரனுடைய காதல் உணர்வை அன்பின் ஐந்திணை வழியாகத் தமிழர்கள் புலப்படுத்திய காதல் நெறியைத்தான் கருதினார்கள். . எனவேதான் யாழ்ப் பிரகதத்தன் என்னும் ஆரிய அரசனுக்குத் தமிழைக் கற்பிக்கும் பொருட்டுக் கபிலர் குறிஞ்சிப்பாட்டு என்னும் ஒரு சங்கப் பாட்டைப் பாடினார். இது தமிழருடைய அகத்திணையில் மிகச் சிறந்ததாக விளங்குகிற குறிஞ்சித் திணையில் ,தலைவன் தலைவி இருவருக்கும் இடையே தோன்றிய காதலைத் தோழி வெளிப்படுத்துகிற பாட்டு. குறிஞ்சித் திணையில் அறத்துடன் நிற்றல் என்று ஒரு துறை இருக்கிறது.எனவே ஆரிய அரசனுக்குத் தமிழ் என்றால் அது காதல் அதிலும் சிறப்பாக அந்தக் காதலை வெளிப்படுத்துகிற முறை என்ற பொருளில் ஓங்கி ஒலித்தது. எனவேதான் வ.சுப.மாணிக்கனார் சங்க இலக்கியங்களில் ஆய்வு செய்து தன்னுடைய ஆய்வுக்குத் தமிழ்க் காதல் என்றே பெயரிட்டார். எனவே இந்தத் தமிழரின் காதல்நெறி உலகில் இருக்கிற செம்மொழிகளிலே உயர்தனிச்செம்மொழியாகத் திகழ்கின்றதமிழ் மொழியின் தனிச்சிறப்பாகவும் தகுதி மிகுந்த பெருமைக்குரியதாகவும் இன்று வரை விளங்கி வருகிறது. அதற்கு அடுத்து நிலையில் இலக்கிய வரலாற்றில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றின. இக்காலத்தில் தமிழ் என்றால் அறம் என்ற பொருள் ஆளப்பட்டது அக்காலத்துத் தோன்றிய நூல்கள் எல்லாம் அற நூலகளாக இருந்ததால் அறம் பாடிய தமிழை அறம் என்னும் பொருளிலே தமிழ் ஆளப்பட்டு வந்தது. கிபி ஆறாம் நூற்றாண்டில் இருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் எழுந்த பக்தி இலக்கியங்களின் போது தமிழ் என்பது சைவமாகவும் வைணவமாகவும் பொருள்பட்டது.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்

என்று திருஞானசம்பந்தர் தன்னைப் பற்றிக் குறிப்பிடுகையில், தமிழ் பரப்பும் என்ற சொல் இங்கே தமிழ் இலக்கியத்தைக் குறிக்க வில்லை. .தமிழ் , சைவ சமயத்தைக் குறிக்கிறது சைவ சமயத்தைப் பரப்புவதயே தனது தலையாய கடமையாகக் கொண்ட சம்மந்தர்தன்னைதத் தமிழ் பரப்பும் தொண்டனாக கூறியது சைவம் பரப்பும் தொண்டனாக கூறியதாகவே கொள்ள முடிகிறது.அதைப் போலவே

திருமூலரும்

என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

என்று கூறியுள்ளதும், தமிழ் என்பது சைவ நெறித் தத்துவங்களைக் குறிப்பதாகவே நாம் கொள்ள முடிகிறது .எனவே இந்தக் காலத்தில் தோன்றிய சமய இலக்கியங்களைக் குறிக்க தமிழ் எனும் சொல் பயன்பட்டுள்ளதை நாம் காண்கிறோம் .

இதைப் போலவே ஒவ்வொரு காலத்திலும் தோன்றிய இலக்கியங்கள் எவற்றைப் பாடு பொருளாகக் கொண்டனவோ அவற்றைக் குறிப்பதற்கான அடையாளமாகத் தமிழ் விளங்கி வந்துள்ளது. .

இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்

என்று நிகண்டுகள் தமிழ் மொழிக்கு இலக்கண பகர்கின்றன.

சீவக சிந்தாமணியும் தமிழின் பொருளை இனிமையென்றே கூறுகிறது. இனிமையான சாயலுடைய பெண்கள் சீவகனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தார்கள் என்று சொல்லுகிற பொழுது திருத்தக்க தேவர் தமிழ் இயல சாயலார் என்று பெண்களைக் குறிப்பிடுகிறார்

## இன்றைய நிலை

. .இத்தகைய இனிமைத் தமிழ் மொழியின் இன்றைய நிலை குறித்து எண்ணிப் பார்க்க வேண்டி உள்ளது

இனிமைத் தமிழ் மொழியில் இன்றைக்குப் பிறமொழிச் சொற்கள் வந்து கலந்து விடுகின்றன. அச் சொற்களைத் தமிழர்கள் தமிழ் என்று கருதியே பேசுகிற அவல நிலை இன்று எழுந்து விட்டது.இதைக் காணும் பொழுது நிகழ்காலத்தில் வாழும் தமிழ் அறிஞர்களுக்கு மனதில் துன்பமே மேலிடுகிறது.

பலாச்சுளையும் முள்ளும்
தமிழும் பிறமொழிச் சொற்களும்

தமிழோடு பிற மொழிச் சொற்கள் கலந்து வருகிற பொழுது அது நாவிலே பெரும் துன்பத்தை தரும் என்பதை மறைமலடிகள் குறிப்பிடுகிறார். <u>இனிக்கும் பலாச்சுளைகளை சுவைத்துக் கொண்டிருக்கும் போது</u> திடீரென்று முள் ஒன்று நாவில் குத்தியது போன்று தமிழ்ச் சொற்களோடு பிற சொற்கள் கலந்து பேசுகிற பொழுது எனக்கு வலிக்கிறது என்று அவர் குறிப்பிடுகிறார்.ஆனால் இன்றைக்கு நா முழுவதும் புண்ணாகிற அளவுக்கு பிறமொழிச் சொற்களைப் பேசி தமிழர்கள் தங்கள் நாவைப் புண்ணாக்கி கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல தமிழ்த் தாயின் நெஞ்சத்தையும் புண்ணாக்கி வருகிறார்கள்.

வாழ்க்கை மொழியை
வாழும் மொழியாகும்

இன்றைக்குத் தமிழருடைய வாழ்க்கை மொழியாகத் தமிழ் இல்லை.

தமிழரது உணவின் பெயர்களில் தமிழ் இல்லை. பருப்புச் சோறும் தயிர்ச் சோறும் இன்றைக்கு வேற்று மொழியில் வழங்கப்படுகின்றன வெங்காயப் பச்சடிக்கும் வேறு பெயர் இன்று வந்து விட்டது.

தமிழ்ப் பிள்ளைகளும் தமிழரும் ஒன்று இரண்டு மூன்று என வரும் எண்ணுப் பெயர்களைத் தமிழில் சொல்வதில்லை. தமிழில் உறவு பெயர்கள் பழக்கத்தில் இல்லை. உறவுகளை ஆங்கிலச் சொல்லால் அழைப்பது மிகுந்த வேதனைக்குரிய செயலாகும் . வாழ்க்கை மொழியாக இல்லாத எந்த மொழியும் வாழும் நிலையை இழந்து விடும் என்பது உறுதி. நாம் வாழும் காலத்தில் தமிழின் வாழ்வுக்கு தீங்கு வராமல் காப்பது நமது கடமையாகும்.

## ஆங்கிலச் சொற்களால் அழியும் தமிழ்ச்சொற்கள்

ஓர் ஆங்கிலச் சொல்லை பயன்படுத்துவதன் மூலம் எத்துணைத் தமிழ்ச் சொற்கள் மறக்கப்படுகின்றன மறைக்கப்படுகின்றன என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் காணலாம்.

கிச்சன் என்ற ஆங்கிலச் சொல் பழக்கத்தில் வந்த பின்பு அது தமிழில் இருந்த

அடுக்களை
அடுப்படி
அடுப்பாங்கரை
ஆக்குப்பறை
சமையலறை
சமையல் கட்டு
சமையல் கூடம்
மடப்பள்ளி

என்று இத்துணைச் சொற்களையும் கொன்று தின்று தீர்த்துவிட்டு கிச்சன் இன்றைக்கு நிலை பெற்றிருக்கிறது .இதைப் போலவே ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லும் நம்முடைய பேச்சு வழக்கில் வருகிற பொழுது நாள்தோறும் தமிழ் மொழியிலிருந்து நூற்றுக்கணக்கான சொற்கள் இறந்து விடுகின்றன. இந்த நிலைக்குக் காரணம் இன்றைய தமிழர்கள் பிறமொழிச்சொற்களைப் பேசுவதற்கு நாணுவதில்லை.

உலகத்துச் செம்மொழிகளுக்கெல்லாம் இல்லாத உயர்ந்து சிறப்பு ஒன்று தமிழுக்கு இருக்கிறது என்று சொன்னால் அது இன்றும் பேச்சு மொழியாக உயிருள்ள மொழியாகத் திகழ்வதால் தான்.

ஆனால் அந்தப் பேச்சு மொழியிலும் பிறமொழிச் சொற்கள் கலந்து விடுமானால் தமிழின் தன்மை படிப்படியாக இழந்து இதுவும் ஒரு காலத்தில் எழுத்து வடிவிலும் இலக்கிய வடிவிலும் இருக்கிற மொழியாகப் போய்விடும் நிலைமை ஏற்படலாம். இதனைப் பார்த்துக்கொண்டு அமைதி காக்கும் சாட்சியாக இருக்கிற ஒவ்வொரு தமிழரும் குற்றவாளிகளே என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே இயன்ற வரையில் இயல்பான தமிழிலேயே பேசுவோம். பிற மொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் இருக்கிற பொழுது அவற்றைப் பயன்படுத்துவோம். எந்தக் கருத்தை வெளிப்படுத்துவதற்கும் தமிழுக்குத் தகுதி உண்டு என்பதில் நாம் நம்பிக்கை வைப்போம். நல்ல தமிழ் பேசுவோம்! நாளும் தமிழ் வளர்ப்போம்!

# காதல், வீரம், தோழமை பேசிய ஔவையார்



**கோவிந்தசாமி இராசகோபால்**
**மேனாள் தமிழ்ப்பேராசிரியர், இந்திய மொழிகள் மற்றும் இலக்கியவியல் துறை, தில்லிப் பல்கலைக்கழகம்**

ஈராயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கும் மேலான இலக்கிய-இலக்கண வரலாறு கொண்டது நம் அன்னைத் தமிழ்மொழி. இதன் நெடும்பரப்பில் எண்ணிறந்த கவிஞர்/புலவர் பெருமக்கள் தம் பாட்டுத்திறத்தாலே தமிழ் வையத்தைப் பாலித்திட வைத்துள்-ளனர். ஆயின் அவர்களுள் ஒரு சிலரே மக்கள் மனங்களிலே அரியாசனம் பெற்றுள்-ளனர். கம்பன், வள்ளுவர், இளங்கோ என்ற ஒரு மூன்று தமிழ்க்கவிஞர்களை மட்டுமே ஒரு முப்பெரும் கவிஞர்களாக, முத்திரைக்கவிஞர்களாக வரிசைப்படுத்துகிறார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். இக் கவிஞர்களுக்கு நிகர் உலகில் எவரும் யாங்-கணுமே பிறந்ததிலை எனவும் இறும்பூது எய்துகிறார் அவர் (1976:46). இந்த முன்னைக் கவிஞர் மூவருக்கும் ஒத்த நிலையில் வைத்து எண்ணத்தக்க ஒரே ஒரு பெண்பாற் கவிஞர்/புலவர் உளர் எனில், அவர் ‘ஔவையார்’ மட்டுமே ஆவர்.

## ஔவையார்: சொற்பொருள் விளக்கம்

ஔவை என்னும் சொல், ‘ஆர்’ எனும் மதிப்பு தரு விகுதி கூட்டப்பெற்று ‘ஔவையார்’ என ஆகிறது. ஔவையா? அவ்வையா? அப் பெண்கவிஞர் பெயரை எழுதுவதில் ஒரு குழப்பம். அவர் பெயர், ‘அவ்வை’ என எழுதப்பட்டதே முதல் வழக்கு/முன்னை வழக்கு.’ இதுவே பின்னர் ‘ஔவை’ எனத் திரிபு கண்டது என்கிறார் மு.வ. (1977:27). இவர்தம் கருத்திற்கு ஊற்றுக்களமாக இருப்பது,

உரையாசிரியர்கள் இளம்பூரணரும் நச்சினார்க்-கினியரும்1 எழுத்ததிகார நூற்பா ஒன்றுக்கு முன்மொழிந்திருக்கும் பொழிப்புரை ஆகும்.

அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் (தொ.கா. 56)

என்ற நூற்பாவிற்கு உரை வரையும்போது இளம்பூரணர் (2010:29), "அகரத்தின் பின்னர் இகரமேயன்றி யகரமாகிய புள்ளியும், ஐ எனப்பட்ட நெட்டெழுத்தாம் வடிவு-பெறத் தோன்றும். எ-டு: ஐவனம், அய்வனம் என வரும். 'மெய்பெறத் தோன்றும்' என்றதனான், அகரத்தின் பின்னர் உகரமேயன்றி, வகரப் புள்ளியும் ஔகாரம் போல வருமெனக் கொள்க. எ-டு: ஔவை – அவ்வை எனக் கண்டு கொள்க" என விளக்கம் நல்குகிறார்.

'அவ்வை' எனும் சொல் 'தாய்', 'கிழவி', 'தவப்பெண்' எனப் பல பொருள்கள் பயப்பது என விளக்கம் அளிக்கிறது தமிழ் லெக்சிகன் (1982:150). இதே அகராதி, 'ஔவை' என்பதற்கும் மேற்சொன்ன பொருள்விளக்கங்களையே 'mother,' 'matron,' 'old woman' என ஆங்கிலத்தில் குறிப்பிடுகிறது (மேலது, ப. 632). ஆக, 'அவ்வை' என்பதும், 'ஔவை' என்பதும் ஒரே பொருள்கள் குறிக்கும் இருவேறு எழுத்து வழக்குகள் என்பது தெளிவு. 'அவ்வை' எனும் சொல் 'அம்மை' என்ற சொல்லின் திரிபு என்கிறார் மு.வ. (மு.நூ.) இச் சொல், மூலத் திராவிடமொழிச் சொல்லாகப் புலப்படுகிறது. இது தெலுங்கு & கோண்டி (Gondi) மொழிகளில் 'அவ்வா' எனவும், கன்னடம் & கொடகு (Kodagu) மொழிகளில் 'அவ்வே' எனவும் வழங்கப்படுகிறது. தெலுங்கு மொழியில் இது பாட்டியை அதாவது அம்மாவின் அம்மாவைக் குறிக்கிறது. காலங்காலமாகத் தமிழ் மக்கள் ஔவையைப் 'பாட்டி' என்ற உறவுமுறைப் பெயரோடு குறிப்பிடுவது அறியத்-தகுந்தது. ஆக, தாய், அம்மா, கிழவி என்ற பெயர்ச்சொற்களினும் 'அம்மை" (Reverent lady) எனப் பொருள்படும் 'பாட்டி' என்ற சொல்லே ஔவைக்குப் பெரிதும் பொருந்தும் சொல் எனலாம். ஆயின், இதில் நெருடலும் உண்டு. காரணம், எட்டுத்தொகை நூல்களில் இடம்பெற்றிருக்கும் அவர்தம் காமம் சார்ந்த காதல் உணர்வுகள் அவரைப் 'பாட்டி'யாக அடையாளம் காட்டவில்லை; காதல் உணர்ச்சி மிக்க ஒரு 'மங்கை'யாகவே அவரை மதிப்பிடத் தோன்றுகிறது. வீரம், போர் மறம், அரசாட்சி போற்றும் அவர்தம் புறக்கவிதைகள் அவரை ஒரு வீர மங்கையாக, அரசியலில் விவேகம் பேசும் ஒரு 'நங்கை'யாக அடையாளம் காட்டுகின்றன.

தமிழ் இலக்கிய உலகில் 'ஔவையார்' எனும் பெயரில் சங்க காலம் முதற்கொண்டு கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரை எண்ணிறந்த பாட்டுகள் காணப்படு-கின்றன. இப் பெயரில் தமிழில் இலக்கியம் படைத்தோர் 9 பேருக்கும் மேல் இருக்-கலாம் என்கிறார் தாயம்மாள் அறவாணன் (2015:174). சங்க காலம் முதற்கொண்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரை ஔவையார் பெயரில் எண்ணிறந்த பாட்டுகள், மூன்று கால கட்டங்களில் வெளியாகி உள்ளன.

1. முதலாவது காலகட்டம்: சங்கக் காலம் – காதல் வீரம் குறித்த பாட்டுகள்.
2. இரண்டாவது காலகட்டம்: இடைக்காலம் – பல்வேறு பேசு பொருள்கள் குறித்த தனிப்பாடல்கள்.

3. மூன்றாவது காலகட்டம்: நவீன காலம் அதாவது 1800/1900 ஆம் நூற்றாண்டு – ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்ற நீதி நூல்கள்.

முதலாவது காலகட்டமாகிய சங்க காலத்தில், ஔவையார் பெயரில் பதிவாகியிருக்கும் கவிதைகளின் பேசுபொருள்களை இக் கட்டுரை வெளிக்கொணர முயல்கிறது. சங்கப் பாக்கள் அளிக்கும் தரவுகள் அடிப்படையில், ஔவையார் கொங்கு மண்டலத்தைச் சார்ந்தவர்; தகடூர் என்ற இன்றைய தருமபுரியை ஒட்டிய ஏதோ ஓர் ஊரில் வாழ்ந்தவர்; தகடூரை ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி என்ற குறுநில மன்னனோடு நெருங்கிய தோழமை கொண்டிருந்தவர்; காதல் உணர்ச்சியும், வீர எழுச்சியும் ஒருங்கே வாய்த்-திருந்த ஒரு பெருங்கவிஞர்; நேர்படப் பேசியவர் என்றவாறான ஒரு பிம்பம் வெளிப்படுகிறது.

## சங்க காலத்து ஔவையார்

சங்க காலத்து ஔவையார், தமிழ் கூறு நல்லுலகை ஈர்த்த ஒரு நட்சத்திரப் பெண் கவிஞர். இதில் சந்தேகம் இல்லை. கபிலர், பரணர் என்ற பெரும்புலவர்களை அடுத்துச் சங்க காலத்தில் பெருவாரியான கவிதைகளைப் படைத்த பெண்பாற் கவிஞர் ஔவை-யார் மட்டுமே ஆவர். அவர் பெயரில் காணப்படும் சங்கக் கவிதைகள் மொத்தம் 59.2 அவற்றுள் அகத்திணைக்கு உரியவை 26; புறத்திணைக்கு உரியவை 33.

## பிரிவு பற்றிப் பேசிய ஔவையார்

அகத்திணைகள் ஐந்து. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன. இவற்றுள் பாலைத்திணையை ‘நடுநாயகம்’ என்பர். அகத்திணை ஐந்து இல்லை; அவை இரண்டேதாம் என்பர் ஒரு சிலர். அவையாவன: குறிஞ்சியும் அது தவிர்ந்த பிற திணைகளும். குறிஞ்சித்திணை மட்டுமே கூடலும் கூடல் நிமித்தமும் பற்றிப் பேசு-கிறது. பிற எல்லாம் பிரிதலும் பிரிதலும் நிமித்தமும் பற்றிப் பேசுபவை. கூடலைப் பேசும் அகக் கவிதைகளைவிடப் பிரிதலைப் பேசும் அகக்கவிதைகள்தாம் மிகுதி. காம உணர்ச்சி, பிரிவுத்துயரம், தனிமை, ஏக்கம், இயலாமை, கழிவிரக்கம் இப்படி பலதரப்-பட்ட உணர்ச்சிகளுக்கு இடமளிப்பவை பாலைத்திணைக் கவிதைகள். ‘உள்ளுறை,’ ‘இறைச்சி’ என்ற தமிழ்க்கவிதை எடுத்துரைப்பு உத்திகள் பிரிவுக்கவிதைகளில்தாம் பெரிதும் இடம்பெறுகின்றன.

அனைத்து உயிரினங்களிடமும் காணப்படும் ஓர் அடிப்படை உள்ளுணர்வு (Basic Instinct) ‘காமம்.’ காமம் குறித்து ஆண்கள் வெளிப்படையாகப் பேசலாம். ஆனால் பெண்கள் பேசக்கூடாது என்பது எழுதப்படாத சமூக நியதி. இதை மறுதலிக்கும் விதத்தில் காமத்தை, குறிப்பாகக் காதலனின்/கணவனின் பிரிவுத்துயரத்தைப் பல அகத்திணைக் கவிதைகளில் வெளிப்படையாகப் பேசியவர் ஔவையார். அகநானூற்-றிலும் குறுந்தொகையிலும் இடம்பெற்றிருக்கும் அவர்தம் இரு கவிதைகளே இதற்குச் சான்று. தலைமகன் ஒருவன் களவுக்காலத்தில் ஏதோ போர் காரணமாகவோ அல்லது பொருள் தேடல் காரணமாகவோ காதலியைப் பிரிகிறான். அவன் குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்பி வரவில்லை. காலம் கடக்கிறது. பிரிவு தலைவியைப் பெரிதும் வாட்டுகிறது. தனிமைத் துயரம் தாங்காது தவிக்கிறாள் அவள். அவளின் முலைகளுக்கு இடையே பசலை படர்கிறது. அவளை

அவன் கைவிட்டுவிட்டான் என ஊரார் கிசுகிசுக்கின்றனர். இதனால் நெஞ்சம் கலங்குகிறாள் தலைமகள். நாணமும் அவளைக் கைவிடுகிறது. உடலாலும் உள்ளத்தாலும் நொந்து நொடிந்திருக்கும் தலைவி தன் தோழியிடம் கையறு நிலையில் புலம்புகிறாள்.

போரில் வெற்றி பெற்ற மன்னனை அரசியார் வரவேற்றல்

புலம்புனிறு தீர்ந்த புதுவரல் அற்சிரம்
நலங்கவர் பசலை நலியவும் நந்துயர்
அறியார் கொல்லோ தாமே அறியினும்
நம்மனத் தன்ன மென்மை இன்மையின்
நம்முடை உலகம் உள்ளார் கொல்லோ
யாங்கென உணர்கோ யானே வீங்குபு
தலைவரம் பறியாத் தகைவரல் வாடையொடு
முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை
அசைவுடை நெஞ்சத் துயவுத்திரள் நீடி
ஊரோர் எடுத்த அம்பல் அஞ்சினை
ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பிப்
புலவர் புகழ்ந்த நாணில் பெருமரம்
நிலவரை எல்லாம் நிழற்றி
அலரம்பு ஊழ்ப்பவும் வாரா தோரே *(அ.நா. 273)*

“வாடைக் காற்றானது நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போவது போலவே, என் முலைகளுக்கிடையே தோன்றிய பசலை நோயும் நாளும் பெருகிப் படர்ந்துகொண்டே இருக்கிறது. ஊரார் தூற்றும் அம்பல் என்னும் முளையானது கிளை பரப்பி இப்போது மரமாக வளர்ந்துள்ளது. காதல் என்னும் ஒளியினையுடைய தளிர்களைப் பரப்பிக் கொண்டதாகப் புலவர்கள் புகழ்ந்துரைத்த நாணமும் இல்லாது போன ஒரு பெருமர-

மாகவும் அது ஆகிவிட்டது. நிலத்தின் எல்லை எங்கணுமே கவிழ்ந்து நிழல் பரப்பி, அலராகிய அரும்புகளைத் தோன்றச் செய்தும் விட்டது பசலைநோய். இந்த இக்-கட்டான சூழ்நிலையிலும் அவர் வரவில்லையே! நம் துயர் அவர் அறியாமல் இருக்கி-றாரா? அல்லது அறிந்தும் வாராமல் இருக்கிறாரா? நம் மனத்தின் மென்மை அவரிடம் இல்லையே! நாம் கையற்றுக் கலங்கியிருக்கும் உலகத்தை அவர் கொஞ்சமும் நினை-யாதிருக்கிறாரே! அய்யோ நான் என்னவென்று உணர்ந்து ஆற்றியிருப்பேன்?"

இவ்வாறு வாடைக் காலத்தில் பெண்களிடமும் காம உணர்வு தலைதூக்கி இருக்கும் என்பதை வெளிப்படையாகப் பதிவுசெய்திருக்கிறார் ஔவையார். தலை-மகனைத் தழுவப் பெறாததனால் தலைவியின் காமநோய் நாளுக்கு நாள் வளர்கிறது. முலைகளுக்கு இடையே பசலை நோய் படர்கிறது. இது ஒருபுறம் கிடக்க, தலைமகன் அவளை விட்டுப் பிரிந்துவிட்டான் என ஊரார் கிசுகிசுக்கின்றனர். இது முன்னே முளையாக இருந்தது, இப்போது கிளைகள் பல பரப்பி நிழல் தரும் ஒரு பெருமரமாக வளர்ந்திருக்கிறது என்ற உருவகப்படுத்துகிறார் ஔவையார்.

## பெண்ணியவாதி ஔவையார்

பொருள் தேடல் காரணமாகத் தலைமகன் தன் மனைவியை விட்டுப் பிரிந்து சென்-றிருக்கிறான். காலம் கடக்கிறது. தனிமைத்துயரில் தவிக்கிறாள் தலைமகள். அவளின் காம நோய் தீவிரம் அடைகிறது. இது தெரியாது தென்றல் வேறு அவளைப் பாடாய்ப் படுத்துகிறது. தாங்காது தவிக்கிறாள் அவள். இது அறியாது, ஊர் மக்கள் இயல்பாக உறங்கிக் கொண்டிருக்கின்றனர். காதல் நோயில் தனியே தவிக்கும் தலைமகளுக்கு ஊர் மேல் எரிச்சல். தாளமுடியாத காமத்தீயில் தகிக்கும் அவளின் நிலையை மிகத்துல்லியமாகச் சித்திரிக்கிறார் ஔவையார்.

> முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
> ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு
> ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்
> அலமர லசைவளி அலைப்பவென்
> உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே (கு.தொ. 28)

சங்க காலத்தில் இத்தகைய கூக்குரலை வேறு எந்தப் பெண்பாற் புலவரும் எழுப்ப-வில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது. காமத்தைப் பக்தி மொழியில் பேசிய ஆண்டா-ளும்கூட இவருக்குப் பின்னேதான். இரவு நேரத்தில் தலைமகன் பிரிவால் தனியே இருக்கும் திருமணமான பெண் தன் மனத்தில் ஊற்றெடுக்கும் காமத்தைத் தாங்க இயலாமல் "சுவற்றில் முட்டுவேனோ, அதைக் கையால் தாக்குவேனோ, அல்லது உரத்த குரலெடுத்து ஆ! ஓ! எனக் கூவுவேனோ! என் செய்வேனோ தெரியவில்-லையே!" எனத் தன் காதல்மனத்தின் தகிப்பை வெளிப்படுத்தியிருப்பது ஒரு தனிப்-பட்ட பெண்ணின் மொழியாகத் தெரியவில்லை. பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த பெண் இனம் எதிர்கொள்ளும் தனிமையின் கூக்குரலாகவே புலப்படுகிறது. இந்த வகையில் 'ஔவையார்தான் முதல் தமிழ்ப்பெண்ணியவாதி' எனலாம்.

## அதியமான் நெடுமான் அஞ்சி – ஔவையார் தோழமை

கடை ஏழு வள்ளல்களுள் ஒருவன் அதியமான் நெடுமான் அஞ்சி. இவன் தகடூர் என்னும் நிலப்பகுதியை ஆண்டவன். சங்க காலத்தில் தகடூர் கொங்கு மண்டலத்தில் இடம்பெற்றிருந்தது. தற்போதைய தருமபுரி என்னும் நகரமே அக் காலத்தில் தகடூர் என வழங்கப்பெற்றது.



குறுநில மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சிக்கும் பெண்பாற் கவிஞர் ஔவையாருக்கும் இடையே மிக நெருங்கிய தோழமை உறவு இருந்தது. மன்னர்களுக்கும் புலவர்களுக்கும் இடையே காலந்தோறும் நட்புறவு இருந்து வருகிறது. பாரி–கபிலர்; கோப்பெருஞ்சோழன்–பிசிராந்தையார் நட்பு சங்க காலத்தில் மிகவும் பேசப்பட்ட ஒன்று. இவர்களின் நட்பைவிடத் தனித்துவமானது நெடுமான் அஞ்சி–ஔவையார்தம் தோழமை. ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான அவர்கள்தம் நட்பு மிகவும் உணர்வுவயப்பட்டது; தோழன்–தோழி அல்லது தந்தை–மகள் என்ற உறவுமுறைகளில் அமைந்தது. ஔவையாரின் கவிதைச்சொற்களைக் கட்டுடைத்து மறுவாசிப்பு செய்யும்போது இந்த உறவுநிலைகள் புலப்படுகின்றன.

அதியமானுக்காகவே வாழ்ந்த ஒரு புலவர் ஔவையார் மட்டுமே. அதிய-மானுக்கும் தொண்டைமானுக்கும் இடையே நிகழவிருந்த போரைத் தூதுவராகச் சென்று போர் நிகழாது பல உயிர்களைக் காத்தவர் ஔவையார் (பு.நா. 95).

## வீரம் குறித்த சொல்லாடல்

சங்க காலத்தை 'வீரயுகக் காலம்' (கி.மு. 3000–கி.பி. 300) என்பர். நிலம் பொருட்டு மன்னர்களிடையே ஓயாமல் போர் நிகழ்ந்தகாலம் சங்ககாலம். "புறத்தில் நிலத்தைத் துய்ப்பதும், அகத்தில் பெண்ணுடலைத் துய்ப்பதும் ஆணுக்கானதாக முதன்மைப்-படுத்தப்பட்ட சங்க மரபில், புறத்திணைப் பாடல்கள் தனித்துவமானவை. இனக்குழு வாழ்க்கை சிதிலமடைந்து, வேந்தர்கள் உருவான காலகட்டத்தில் தமிழக நிலப்பரப்பு, போர்களின் மூலம் விரிவடைந்துகொண்டிருந்தது. குறுநில மன்னர்களின் ஆளுகைக்-குட்பட்ட நிலமும் குடியும் சிதைக்கப்பட்ட நிலையில் வீரம் போற்றப்பட்டது. ஆணுக்கான புழங்குவெளி, புறத்தில் என்ற நிலையில், வீரத்தை முன்னிறுத்திய பேச்சினை உருவாக்கச் சங்கப் புறப்பாடல்கள் பெரிதும் பயன்பட்டுள்ளன" (முருகேச பாண்டியன் 2016: 79–80). அரிசில் கிழார், உறையூர் ஏணிச்சேரி, முடமோசியார், கபிலர், கழாத்தலையார், கோவூர்கிழார், பரணர், பெருஞ்சித்திரனார், மாங்குடி மருதனார் என எண்ணற்ற ஆண்பாற் கவிஞர்கள் அக்காலத்து மன்னர்களின் வீரம், போர்மறம் குறித்து, உண்மையில் புளகாங்கிம் கொண்டு ஏகத்துக்கும் புகழ்ந்து கவிதை யாத்துள்ளனர். ஆண் இனம் வல்லாற்றல் கொண்டது; வலிமை பாராட்டுவது. இந்த வகையில், ஆண்பாற் கவிஞர்கள் போர்மறம் குறித்துப் பாட்டுகள் கட்டியதில் வியப்பொன்றும் இல்லை. இனம் இனத்தோடுதானே சேரும். ஆயின், மெல்லியல்பு கொண்ட பெண்களும்கூட நீரையும் நிலத்தையும், மக்களையும் வீட்டுவிலங்கு-களையும் அழித்தொழிக்கும் போர் என்னும் பொல்லாவினையைப் போற்றிப் புகழ்ந்-திருப்பது புரிந்துகொள்ள முடியாததாக இருக்கிறது.

அள்ளூர் நன்முல்லையார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கை பாடினியார், காவற்-பெண்டு, குறமகள் இளவெயினியார், தாயங்கண்ணியார், நக்கண்ணையார், நெட்டி-மையார், பாரி மகளிர், பூதப்பாண்டியன் பெருங்கோப்பெண்டு, பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார், பேய்மகள் இளவெயினியார், பொன்முடியார், மாறோக்கத்து நப்பசலையார், மாற்பித்தியார், வெண்ணி குயத்தியார், வெறிபாடிய காமக் கண்ணி-யார் உள்ளிட்ட ஒரு பெரிய பெண்கள்பட்டாளமே வீரத்தையும் போர்மறத்தையும் போற்றிப் பாட்டுகள் இயற்றியிருக்கின்றது. உலகில் வேறெந்த மொழியிலேனும் போர் குறித்து இந்த அளவிற்குப் பெண்பாற் கவிஞர்கள் சொல்லாடல் நிகழ்த்தி இருக்கின்-றனரா என்பது தெரியவில்லை. இது ஆய்தற்குரியது.

புறம் பாடிய பெண்பாற்கவிஞர் கூட்டத்தில், ஔவையார் ஒரு தனித்த பெருங்-கவிஞர்; ஒரு பேராளுமை. ஆண்கவிஞர்களுக்கு நிகரான போர்மறம் பேசியவர். அவர் பெயரில் வெளியான புறக்கவிதைகள் ஒரு பெண்ணின் எழுத்தாக இருக்கலாம். ஆனால் 'அவற்றில் ஒலித்திருப்பது என்னமோ ஆண்குரலே' எனலாம். குறிப்பாக, அதியமான் நெடுமான்

*அஞ்சியின் போர்த்திறம் குறித்துப் பேசும்போது, அவர் எழுத்து-களில் வீரம் பீடுநடை போடுகிறது.*

*அக் காலத்தில் மன்னர்களிடையே மண்ணுக்காகப் பெரும்பூசல் இருந்தது. போர் நிகழ்த்துவதே அவர்களின் வாழ்வாக இருந்தது. நெடுமான் அஞ்சிக்கும் பகை மன்னர் பல பேர் இருந்தனர். அவர்களிடம் அச்சத்தை ஏற்படுத்திப் போரைத் தடுப்பது ஔவை-யாரின் நோக்கமாக இருந்தது. ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு பெரும்வீரனாக அதியமானைக் கண்ட ஔவையார், அவனின் வீரத்தை விவேகமுடன் பகைமன்னர் முன்னே பறைசாற்றுகிறார்.*

*களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போரெதிர்ந்து*
*எம்முளுள் உளனொரு பொருநன் வைகல்*
*எண்தேர் செய்யும் தச்சன்*
*திங்கள் வலித்த காலன் னோனே (பு.நா. 87)*

*"பகைவர்களே! போர்க்களம் சேர்வதைப் போற்றுங்கள். எதிர்த்துப் போரிடும் ஆற்றல் உள்ளவன் ஒருவன் எம்முள்ளும் ஒருவன் இருக்கின்றான். அவன் எத்தகையவன் எனில், ஒரு நாள் பொழுதில் எட்டுத்தேர்கள் உருவாக்கும் தச்சன், ஒரு மாதம் கூடி உரு-வாக்கிய தேர்க்காலைப் போன்ற அழகும் வலிமையும் கொண்ட தோள்களையுடை-யவன் அவன்!" என அதியமானின் பெருமிதம் பேசுகிறார் ஔவையார். வேறொரு புறநானூற்றுக் கவிதையிலேயும் (பு.நா. 90) அஞ்சியின் வீரம் பற்றிக் கிளக்கும் போது அவர் சொல்கிறார்: "மான் கூட்டத்தை ஒற்றையாக இருந்து தாக்கி அழிக்கும் மறப்புலி போன்றவன் அவன். காரிருளைக் கிழித்து மேல் எழுந்து வரும் சூரியன் போன்றவன் அவன். ஆற்றல் மிக்க காளை போன்றவன் அவன். வீராதி வீரர்களுக்குத் தலைவன் அவன். அவன் போர்க்களம் புகுந்தால் அவனை எதிர்க்கவல்லவர் எவருமில்லை." இச் சொற்கள் அதியமானின் வீரத்தை மெச்சிப் புகழ்வது ஒரு நிலை. எதிரி மன்னர்களை அச்சமூட்டி அதியமானுக்குப் பணிய வைப்பது மற்றொரு நிலை. இது ஔவையார் கவிதைகளில் காணப்படும் ஓர் எடுத்துரைப்பு உத்தி.*

*மாவீரம் செறிந்த கோமான் அதியமான் நெடுமான் அஞ்சி, அவனுக்கு ஒரு நாள் நீண்ட ஆயுளைத் தரும் அரும் நெல்லிக்கனி ஒன்று கிடைக்கிறது. அதைத் தான் உண்ணாமல், தான் பெரிதும் நேசிக்கும் ஔவையாருக்கு ஈத்துவக்கிறான். அவனின் தன்னலமற்ற ஈகைப்பண்பைப் பாராட்டும் ஔவையார், அவனைப் "பால்புரை பிறைநுதற் றொருவன் போல / மன்னுக பெரும நீயே" (பு.நா. 91) என வாழ்த்துகிறார். இந்த அடிகளிலிருந்து சில செய்திகள் நமக்குப் புலனாகின்றன. சாதல் நீங்க அதிய-மான் தனக்கு நெல்லிக்கனியை அளித்ததால், அதே நிலையில் அவனும் சிவபெருமான் போல என்றைக்கும் நிலைத்து வாழ வேண்டும் என வாழ்த்துகிறார் ஔவையார். பிறைநுதல் ஒருவன் எனக் குறிப்பிடப்பட்டதன்வழிச் சிவபெருமான் குறித்த புராணச் செய்திகள் சங்க காலத்திலேயே தமிழ்ச்சமூகத்தில் பரவியிருந்தன என்பதும் தெரிய வருகிறது. ஔவையார் ஒரு சிவ வழிபாட்டாளராக இருந்திருப்பார் என்ற குறிப்பும் புலப்படுகிறது.*

## போர்வீரனின் வீரமரணம்

காதலையும் வீரத்தையும் மனிதனின் இரு கண்களாகச் சித்திரிக்கின்றன சங்க இலக்கியங்கள். நாட்டின் மண்ணைக் காக்க ஆண்பிள்ளைகளைப் பெற்றெடுப்பதே தலையாய கடன் எனத் தாய்மார்கள் வீரம் பேசினர். இதனாலே போலும் பெண்-பிள்ளைகள் பற்றிய சித்திரிப்பு சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. போர்க்-களத்தில் பகைவர்களோடு போராடி மடிகிறான் ஒரு வீரன். அவன் புறமுதுகிட்டு மாண்டு போனான் என யாரோ பொய்ச்சேதி பரப்புகின்றனர். போர்க்களத்திற்கு பதை-பதைப்போடு உடனே விரைகிறாள் அவன் தாய். வீழ்ந்திருக்கும் வீரனின் உடலைப் புரட்டிப் பார்க்கிறாள். அவன் தன் மார்பிலே விழுப்புண் ஏற்றே வீரமரணம் அடைந்-திருக்கிறான் என்ற உண்மை தெளிவாகிறது அவளுக்கு. அதற்காக உண்மையிலே அகம் மகிழ்கிறாள். வற்றிய அவள் முலைகளிலே அவளையும் அறியாமல் பாலூறிச் சுரக்கிறது (பு.நா. 295).

“போர்க்களத்தில் ‘வீர மரணம்’ என்ற வீரப்புனைவு மூலம் பெண் பெருமைப்-பட்டுக் கொள்ளலாம் என்பது புறம் சித்திரிக்க விழையும் குடும்ப உறவில் முக்கியமான செய்தி. மேலாதிக்கம் அல்லது நிலம் காரணமாக நடைபெறும் குருதி சிந்தும் அரசியலில் ஆணுடல்கள் தேவைப்படுகின்றன. பெற்ற குழந்தையின்மீது பாசம் வைத்திருக்கும் பெண்ணின் இயல்பைச் சிதைத்துவிட்டுப் புதிய வகைப்பட்ட பேச்சுகளைப் புறப்பாடல்கள் உருவாக்கிட விழைந்துள்ளன. இறந்த மகனுக்காக அழுது புலம்புவதைவிட, அவனின் வீரத்தினுக்காக மகிழ்வது மேலானது என்ற கருத்தியல் பெண் கவிஞர்களின் கவிதைகளிலும் வெளிப்பட்டுள்ளது” என மறுவாசிப்பு செய்திருக்கும் ந. முருகேச பாண்டியனின் கருத்துரை (மு.நூ., ப. 52) குறிப்பிடத்தக்கது.

## வாழ்வின் இலக்கணம்

“தேடிச் சோறுநிதந் தின்று, பல சின்னஞ் சிறுகதைகள் பேசி, மனம் வாடித் துன்பமிகு உழன்று, பிறர் வாடப் பலசெயல்கள் செய்து, நரை கூடிக் கிழப்பருவம் எய்தி, கொடுங் கூற்றுக் கிரையெனப் பின்மாயும் வேடிக்கை மனித”ராய் (பாரதியார் 1976:131) பெரும்-பாலான மக்கள் மாண்டு மடிகின்றனர். ஆயின் ஒரு சிலரே அலையடிக்கும் கடலாக, அரவணைக்கும் தென்றலாக என்றும் இந்த நிலவுலகில் நற்பெயரோடு நிலை-பெறுகின்றனர். பொன்னையும் பொருளையும் சேர்த்து வைத்து, மண்ணையும் பெண்-ணையும் ஆண்டு அனுபவித்து மாண்டு மடிவது வாழ்க்கையாகாது. ‘பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி இருக்கின்றது என்பது நிஜம்.’ அதனால் உயிரோடு இருக்கின்ற போதே, யாரும் தம்மிடம் இருக்கின்ற பொருளைத் தேவைப்படுவோர்க்குத் தானம் கொடுத்துப் பயன்மரமாய் வாழ வேண்டும். இதுவே வாழ்க்கையின் இலக்கணம். இது ஔவை கூறியது.

ஓயாமல் போர் செய்யும் வீரயுகக் காலத்தில், போர்க்களம் தவிர மன்னர்கள் எங்கும் வேறோரிடத்தில் சந்திப்பது வழக்கமில்லை. ஆயின் விதிவிலக்காக ஒரு முறை சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற மூவேந்தரும் ஓரிடத்தில் வேதியர் வளர்க்கும் வேள்வி காண ஒருங்கே கூடுகின்றனர். அவர்களை ஓரிடத்தில் ஒருங்கே கண்ட ஔவையார் பெரிதும்

அகம் மகிழ்கிறார். நிறைந்த மனத்துடன் அவர்கள் என்றும் அப்படியே ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளாய் இருக்கவேண்டும் என விரும்புகிறார். அந்தச் சூழ்நிலையில் அவர் 'பாடிய பாட்டு' (இசைத்த கவிதை) மிகவும் மனங்கொளத்-தக்கதாய், வாழ்வின் இலக்கணத்தை வரையறை செய்வதாய், பார்ப்பார்க்கு அளிக்க வேண்டிய தானம் பற்றிப் பேசுவதாய் இருக்கிறது.

நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே ஆயினும் தம்மொடு செல்ல
வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்
ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேறல் மாந்தி மகிழ்சிறந்து
இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழுங் காலைப் புணைபிறி தில்லை
ஒன்றுபுரிந் தடங்கிய இருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்
யானறி அளவையோ இதுவே வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும் இம்மெனப்
பரந்தியங்கு மாமழை உறையினும்
உயர்ந்துமேந் தோன்றிப் பொலிகநும் நாளே (பு.நா. 367)

"வேந்தர்களே! எப்பேர்பட்ட வலிமை மிக்க மன்னனாயினும் வையக வாழ்வு முடிந்து வானுலகம் செல்லும் நாளில், அவன் நிலத்தை உடன் கொண்டு போக முடியாது. அது துறக்கம் போலவே அவனுக்கு இனிமையை நல்கியிருந்தாலும் பின்னர் ஒரு நாளில் அவனினும் வலிமை மிக்க பிறருக்கு, அவர்கள் அயலவர்களாகவே இருந்தாலும் சொந்தமாகும். அதனால், உயிரோடு இருக்கும் காலத்தில் ஈரக்கையுடன் இரந்து நிற்கும் பார்ப்பார்க்கு, பூவையுடன் பொன்னையும் நீருடன் வார்த்துத் தருக. பெண்கள் பொற்கலத்திலே ஏந்தித் தரும் கள்ளை உண்டு மகிழ்ந்து, வரும் இரவலர்க்கு அருங்-கலம் குறையாது வழங்கி வாழ்க! ஆராய்ந்து பார்க்கில், இவ் உலகில் உயிரோடு இருக்கும் காலம் வரையும் புகழுடம்புடன் இங்கு நிலைத்து வாழச் செய்யும் நல்வினை-கள் அல்லாமல் நாம் இந்த மண்ணை விட்டுப் போகும் நாளில் நமக்குப் புணையாவது வேறு எதுவும் இல்லை. தன் மனத்தை அடக்கி வென்ற இருபிறப்பாளர் வளர்க்கும் முத்தீயைக் கண்டவராக இங்கிருக்கும் கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்தரே! யான் அறிந்தவரைவாழ்வின்இலக்கணம்இதுவேயாகும். வானத்து மீனினும், மேகங்களிலிருந்து வீழும் மாமழையின் துளிகளினும் நெடுநாள் நும் வாழ்நாள் பொலிகவே!"

இந்தக் கவிதைவழிப் பல செய்திகள் நமக்குத் தெரியவருகின்றன.

- சங்க காலத்திலேயே வேதம் நன்கு அறிந்த பார்ப்பார் இருந்தனர்.
- இருபிறப்பாளர் எனக் குறிப்பிடப்பட்ட பார்ப்பாரால் வேள்வித்தீ (யாகம்) நடத்தப்பட்டது.
- தமிழ் மன்னர்கள் தீவளர்க்கும் யாகச்சடங்கில் பங்கேற்றனர்.
- பார்ப்பார் ஏழ்மையில் இருந்துள்ளனர். எனினும் உள்ளங்கையில் நீரைச் சொரிந்து அவர்களுக்கு பூவையும் பொன்னையும் தாரை வார்த்துக் கொடுக்கப் பட்டுள்ளது.
- சொர்க்கம் பற்றிய நம்பிக்கை இருந்துள்ளது.

## ஆடவர் முதன்மை

தற்காலத்தில் மட்டுமில்லாமல் சங்க காலத்திலும் சமூகம் ஆணின் மேலாதிக்கத்தின் கீழே செயல்பட்டிருக்கிறது. ஆண்தலைமையை ஏற்றுக் கொண்டாடி இருக்கிறது. இது ஔவையாரின் கவிதை ஒன்றில் வெளிப்பட்டிருக்கிறது.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே (பு.நா. 187)

“ஆடவர் நல்லவராக விளங்கும் இடத்தில் நிலமும் நன்முறையில் விளங்கும் என்ற ஔவையாரின் கருத்து ஆண் பற்றிய மதிப்பீட்டை உருவாக்குகிறது. வன்முறையும் ஆதிக்கமும் மிக்க அரசியலை முன்னெடுத்துச் செல்லும் ஆண்களில் உலகம் பற்றிய ஔவையாரின் மதிப்பீடு இன்றைய காலகட்டத்துக்கும் பொருத்தமாக உள்ளது” (முருகேசபாண்டியன், மு.நூ., ப. 56). இங்கு ‘ஆடவர்’ என்ற சொல் எண்ணத்தக்கது. வெறுமனே ஆண்களைக் குறிக்கும் சொல்லில்லை. மாட்சிமை பொருந்திய ஆட்சி-யாளர்களாகிய மன்னர்களைக் குறிக்கும் சொல் ஆகும்.

## கையறுநிலைப்பா

எதிரி மன்னன் ஒருவன், வீரத்தால் அன்றி நயவஞ்சகத்தால் அதியமான் அஞ்சியைக் கொல்கிறான். இது அறிந்து ஔவையார் கொண்ட பெருந்துயரம் சொல்லில் சொல்லமுடியாதது. நெஞ்சம் துடித்து அப்போது அவர் பாடிய இரங்கற்பா/கையறு-நிலைப்பா வரலாற்றுச் சிறப்பு வாய்ந்து. இதற்கு ஈடு-இணையாக வேறொன்றைச் சொல்லுதற்கில்லை.

சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகள் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தானிற்கும் மன்னே
நரந்தம் நாறும் தன்கையால்

புலவுநாறும் என்தலை தைவரு மன்னே
அருந்தலை இரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்று அவன்
அருநிறத்து இயங்கிய வேலே
ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநரும் இல்லை பாடுநர்க்கொன்று ஈகுநரும் இல்லை
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கு ஒன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே'' *(பு.நா. 235)*

*''கள் குறைவாக இருந்தால் முதலில் எங்களுக்குத் தந்து விடுவான். அது நிறைய இருந்தால் நாங்களும் அவனும் ஒன்றாகக் குடித்து மகிழ்வோம். அப்போது நாங்கள் பாடுவதைக் குடித்துக்கொண்டே கேட்டு மகிழ்வான். பெரிய அளவுக்குச் சோறு இருந்தால் மிகப் பலரோடு அமர்ந்து விருந்து அயர்வான். எலும்போடு கூடிய ஊன் இறைச்சி உணவை எங்களுக்குத் தந்துவிட்டு, அவன் அம்பும் வேலும் விளையாடும் போர்க்களத்தில் நின்று, வீரம் விளைத்திருப்பான். நரந்த மலர் மணம் வீசும் தன்-னுடைய திருக்கையால் புலால் நாற்றம் வீசும் எங்கள் தலையைத் தடவிக் கொடுப்பான் எந்தை. பாடி வரும் பாணர்கூட்டம் பதைபதைக்க அவர் உண்கலம் உடைந்து சிதற, கையேந்தி வருவோர் கைகளையும் துளைத்துக்கொண்டு, பாணரை நம்பியிருக்கும், பசியால் வாடும் சுற்றத்தார் கண்ணொளி மழுங்கிச் சோர்ந்துவிழ, அழகிய சொற்களை ஆய்ந்து பாடவல்ல புலவர் நாவிலும் சென்று தைத்தது, அதியமான் நெடுமான் அஞ்சி-யின் மார்பில் தைத்த வேல். எங்கள் உயிர்த்துணையாகிய எம் தலைவன் எங்கிருக்-கிறானோ? இனி உலகில் பாடிப் பரிசில் பெற வருவாரும் இல்லை. வருவோர்க்குத் தருவாரும் இல்லை. குளிர்ந்த நீர்நிலையில் பூத்த, தேன் நிறைந்த அழகிய பெரிய பகன்றைப் பூ எவராலும் சூடப்படாது வீணே வாடி வதங்கி அழிவதைப் போல, பிறர்க்கு உதவாது, ஒன்றும் தாராது மடியும் உயிர்களும் உலகில் நிறையவே இருக்-கின்றனவே!''*

ஒருவர்க்கு உதவாது, ஒன்றும் தாராது வாழ்கிற பலர் உலகில் இருக்கையில், எல்லோர்க்கும் எப்போதும் உதவி வாழும் வள்ளல் அதியமான் நெடுமான் அஞ்சி இறந்துவிட்டானே என்று ஔவையார் வருந்திப் பாடிய இக் கையறுநிலைப்பாவில் இடம்பெற்றிருக்கும் பல தொடர்கள் கற்போர் கவனத்தை ஈர்க்கின்றன. முரண் தொடர்களாக இடம்பெற்றிருக்கும் சிறியகள்–பெரியகள், சிறுசோறு–பெருஞ்சோறு, இரப்போர்–புரப்போர், நரந்தம்–புலால் நாற்றம் என்ற தொடர்கள் அதியமானின் சிறப்பினை விளக்கிடும் மொழியாக வெளிப்பட்டுள்ளன. இம் மொழியமைப்பு பெண்பாற் புலவரான ஔவையாரிடம் மட்டுமே காணப்படுகிறது என்கிறார் முருகேச-பாண்டியன் *(2016:91)*. மேலும் 'இந்தக் கவிதையில் ஏழு தொடர்கள் 'மன்னே' என முடிவதும் குறிப்பிடத்தகுந்தது. அவை அசைச்சொற்களாயினும் கற்போர் உள்ளங்-களைக் கலங்க வைப்பனவாக உள்ளன. இந்த எடுத்துரைப்பு உத்தி வேறு எந்தப் புலவர் கவிதையிலும் காண முடியாதது.

நரந்தம் நாறும் தன்கையால்
புலவு நாறும் என்தலை தைவரும் மன்னே

என ஔவையார் அதியமானைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள அடிகள் உடல்மொழி சார்ந்தவை. பொதுவாக ஆண்புலவர்கள் இனக்குழுத் தலைவர் அல்லது குறுநில மன்னருடன் ஆன உறவு, நட்பு பற்றி விவரிப்பது வழக்கம். மன்னன் புலவரின் தலையைத் தடவிக்கொடுத்தான் என்ற விவரிப்பு பெண்பாற் புலவரால் மட்டுமே விவரிக்கக்கூடியதாகும். இவ்வகையில் ஔவையின் இக் கவிதை தனித்துவமானது' *(முருகேசபாண்டியன் 2016:92)*. இதில் இடம்பெற்றிருக்கும் 'எந்தை' என்ற சொல் 'எம் தந்தை' *(Our Father)* என்ற நேரடிப்பொருளையும், 'தானைத் தலைவன்' *(Lord)* என்ற குறிப்புப்பொருளையும் நல்குவதாக இருக்கிறது. ஆக, எவ்வகையிலேனும் அதியமா-னோடு ஔவையார் கொண்டிருந்த உறவு உணர்ச்சிவயப்பட்டது என்பது வெளிப்-படை.

முடிபுகளாகச் சில கருத்துகளை இங்கே நாம் நினைவு கூரலாம். சங்க காலத்து ஔவையார் வழமையான ஒரு பெண்கவிஞர் இல்லை; தமிழ்க் கவிதையுலகம் கண்ட முதல் பெண்ணியவாதி. ஆண்கவிஞர்கள் பேசாப் பொருளைத் துணிவுடன் பேசியவர்; போர்காரணமாகவோ அல்லது பொருள்தேடல்காரணமாகவோ தலைவன் மேற்கொண்ட பிரிவால் நொந்து தவித்த காதலியர்தம் நோக்காட்டை, ஊற்றெடுத்த பாலுணர்வு ஏக்கத்தைத் தயக்கமின்றிப் பலரறியப் பொதுவெளியில் கதைத்தவர்; அதியமான் அஞ்சி என்னும் தகடூர் மன்னனுடன் நெருக்கமான தோழமை கொண்டிருந்தவர்; தலைவன்-குடிமகள் அல்லது தந்தை-மகள் உறவுமுறை போற்றியவர்; கள்ளும் கறிச்சோறும் உண்டு களித்தவர்; பகை மன்னனால் அதிகமான் வஞ்சித்துக் கொல்லப்பட்டபோது தாளமுடியாத துக்கத்தில் தவித்தவர்; ஆகச் சிறந்த ஒரு கையறுநிலைக் கவிதையைப் பாடியவர். ஆக, ஔவையார் என்னும் ஒரு பெயரில் சங்க காலத்தில் பல குரல்கள் ஒலித்திருக்கின்றன.

## சான்றெண் விளக்கங்கள்

1. "அகரத்தின் பின் இகரமே யன்றி யகரமாகிய புள்ளி வந்தாலும், ஐயெனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவு பெறத் தோன்றும். எ-டு: ஐவனம் அய்வனம் என வரும்.

மெய் பெற என்றதனான் அகரத்தின் பின்னர் உகரமே யன்றி வகரப்புள்ளியும் ஔகாரம் போல வருமென்று கொள்க. ஔவை அவ்வை என வரும்" என விளக்கம் நல்குகிறார் நச்சினார்க்கினியர்.

2. (நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், பாகம் 1, மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம், ப. 82)
3. அகத்திணைக் கவிதைகளுள் தலைவி கூற்றாக வெளிப்பட்ட கவிதைகளே மிகுதி. அவை மொத்தம் 16. தோழி கூற்று 4; பரத்தை கூற்று 2, தலைவன் கூற்று 2, செவிலி கூற்று 1, கண்டோர் கூற்று 1.
4. இவற்றுள் பாலை பற்றிய கவிதைகள் 9; குறிஞ்சி பற்றிய கவிதைகள் 4; முல்லை பற்றிய கவிதைகள் 5. மருதம் பற்றிய கவிதைகள் 4. நெய்தல் பற்றிய கவிதைகள்.
5. அகநானூறு (4 கவிதைகள்): 11, 147, 273, 303; குறுந்தொகை (15 கவிதைகள்): 15, 23, 28, 29, 39, 43, 80, 91, 99, 102, 158, 183, 200, 364, 388; நற்றிணை (7 கவிதைகள்): 129, 187, 295, 371, 381, 390, 394.
6. புறநானூறு (33 கவிதைகள்): 87-104, 140, 187, 206, 231, 232, 235, 269, 286, 290, 295, 311, 315, 367, 390, 392.
7. பாடாண் திணைக் கவிதைகள் (12): 91, 92, 95-97, 101-103, 140, 367, 390, 392; வாகைத்திணைக் கவிதைகள் (7): 93, 94, 98-100, 104, 315; தும்பைத்திணைக் கவிதைகள் (6): 87-90, 295, 311; வெட்சித்திணைக் கவிதைகள் (2): 269; கரந்தைத்திணைக் கவிதைகள் (2): 286, 290; பொதுவியல் கவிதைகள் (4): 187, 231, 232, 235.

## பார்வை நூல்கள்


1. அறவாணன், முனைவர் தாயம்மாள். 2015. அவ்வையார் படைப்புக் களஞ்சியம். சென்னை: தமிழ்க் கோட்டம்.
2. பாரதியார், சுப்பிரமணிய(ன்). 1976. பாரதியார் கவிதைகள். சென்னை: பூம்புகார் பிரசுரம்.
3. முருகேசபாண்டியன், ந. 2016. மறுவாசிப்பில் செவ்வியல் இலக்கியப் படைப்புகள். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
4. வரதராசன், மு. 1977. மொழிநூல். சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
5. இளம்பூரணர் (உ.ஆ.). 2010. தொல்காப்பியம் (எழுத்து-சொல்-பொருள்): மூலமும் உரையும். சென்னை: சாரதா பதிப்பகம்.
6. நச்சினார்க்கினியர் (உ.ஆ.). 1944. தொல்காப்பியம்: எழுத்ததிகாரம். சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.--------------------- 1982. Tamil Lexicon, Vol. I, Part I. Chennai: University of Madras.
7. பிள்ளை, வையாபுரி (தொ.ஆ.). 1967 (2ஆம் பதி.) சங்க இலக்கியம். சென்னை: பாரி நிலையம்.

# தமிழுக்கு பெருமை செய்த பாண்டியன்

**மா.மாரிராஜன்**
**சோழர் ஆய்வு மையம், காரைக்கால்**

சங்ககாலச் சோழன் கரிகால் பெருவளத்தானை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல் பட்டினப்பாலை. பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர். பாடலைப் பாராட்டிய கரிகாலன் புலவருக்கு பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தான். மேலும் பட்டினப்பாலை அரங்கேறிய16 தூண்கள் கொண்ட மண்டபத்தையம் புலவருக்கே பரிசாக அளித்தான் கரிகாலன்.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் துவக்கம். சோழர்கள் ஆதிக்கம் வீழ்ந்து பாண்டியர்கள் எழுச்சிபெற்றனர்.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழநாட்டின் மீது படையெடுத்து முழுமையாக வென்றார். முன்பு பாண்டியநாட்டில் சோழர்கள் செய்த இடிப்பு வேலையை இவர் சோழநாட்டில் செய்தார். சோழநாட்டில் உள்ள மாட மாளிகைகள் அனைத்தையும் சுந்தரபாண்டியன் இடித்துத் தள்ளினார்.

சுந்தரபாண்டியன் இடிக்காமல் விட்ட ஒரு இடம்தான் அந்த 16 கால் மண்டபம். பட்டினப்பாலை பாடிய புலவருக்கு கரிகால் சோழன் பரிசாகக் கொடுத்த அந்த மண்டபத்தை பாண்டியன் இடிக்கவில்லை.

இதை எப்படி இடிக்கமுடியும்.? சங்கத் தமிழ் புலவர் ஒருவரின் பெயர் கொண்ட இடமாயிற்றே. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பாண்டியன் எவ்வாறு இடிப்பான்.?

திருச்சி அருகே உள்ள திருவெள்ளாரை பெருமாள் கோவிலில் இச்செய்தி கல்வெட்டாக உள்ளது.

“ வெறியார் துளவத் தொடைச்செய மாறன் வெகுண்டதொன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டில் அரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன்செய் பட்டினப் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறு மேயங்கு நின்றனவே!”

என்பது கல்வெட்டு வாசகம்.

தமிழையும் தமிழ் புலவரையும் தமிழ் இலக்கியத்தையும் மாண்பு செய்த சுந்தரபாண்டியன் நாள் இன்று.

சங்க இலக்கியத்தின் பெயர் ஒன்றையும் அதன் புலவர் பெயரையும் வரலாற்று சாசனமாகக் கொண்டிருப்பது இக்கல்வெட்டு ஒன்றேயாகும். சுந்தரபாண்டியரின் வரலாற்று சாசனமாகும்.

“ கண்ணன் செய் பட்டினப்பாலை "

என்ற வரிகளை கல்வெட்டில் காணும் பேறு இன்றும் நமக்குள்ளது.

மதுரையை மீட்டும் தமிழுக்கு பெருமை செய்தும் சிறப்புற்ற சுந்தரபாண்டியத்தேவர்

பிறந்த தினம் இன்று..

“ புரட்டாசி மாதம் அவிட்டம் நட்சத்திரம் "

**மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்**

# தண்டனைகளின் வரலாறு

**முனைவர் செ. ராஜேஸ்வரி**
**மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை**

*உலகின் மிக நீண்ட பாண்டியப் பேரரசு, பதினான்காம் நூற்றாண்டில் (கி.பி. 1312 வரை) பஞ்ச பாண்டியர்கள் என்றாகி தென்காசி பாண்டியர் என்றாகி முடிவடைந்தன. கிபி 12ஆம் நூற்றாண்டில் மைசூர் பகுதியை ஆட்சி செய்த ஹொய்சல மன்னர்கள் (கிபி 1100 -1342 வரை) மதுரை வரை தங்கள் ஆதிக்கத்தை செலுத்தினர். அதன் பின்பு கி.பி.1335 முதல் 1378 வரை 40 ஆண்டு காலம் இஸ்லாமிய ஆட்சியும் அதனைத் தொடர்ந்து நாயக்கர்களின் ஆட்சியும் (கிபி 1529 முதல் கிபி 1736 வரை சுமார் 600 ஆண்டுகளாக) மதுரையில் நடைபெற்றது. இக்காலகட்டங்களில் பல வினோதமான தண்டனை முறைகள் நடைமுறையில் இருந்தன.*

## மிரட்டல் தொடர்கள்

*மதுரைப் பகுதியில் 1960களில் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளிடம் பெரியவர்களும் இளைஞர்களும் மூக்கின் குறுக்கே ஆட்காட்டி விரலை வைத்து வல இடமாக அசைத்து மூக்கை நறுக்கி விடுவேன், மூக்கை அறுத்து விடுவேன் என்று விளையாட்டாக மிரட்டுவார்கள். குழந்தைகள் இவர்களைக் கண்டாலே பயந்து தாயாரின் பின் ஒடுங்கி கொள்வார்கள். இது ஒரு விளையாட்டான மிரட்டலாகவே இருந்தது.*

*சில ஆட்கள் தனது ஆள்காட்டி விரலை குழந்தையின் வயிற்றில் வைத்து குடலை உருவி விடுவேன் என்று விரலை ட்ரில் செய்வது போல செய்வார்கள். இதற்கும் காரணம் என்னவென்று அந்த காலகட்டத்தில் தெரியவில்லை. சில பெரியவர்கள் நரசிம்மர் கதையைக் காரணம் காட்டுவார்கள். தாய்மார் சிலர் தங்களுடைய ஆண் குழந்தைகள் வெளியே எங்கேயாவது போய் ஓடி விளையாடி அடுத்தவர்களின் உடமைகளுக்கோ குழந்தைகளுக்கோ ஏதேனும் இடையூறு விளைவித்து தெருவுக்குள் சண்டை சச்சரவு என்று வரும்போது தன் பிள்ளைகளிடம் உன் தோலை உரித்து உப்புக்கண்டம் போட வேண்டும் என்பார். அல்லது உன் தோலை உரித்து உப்பைத் தடவ வேண்டும் என்று சொல்லி திட்டுவார்கள். சிலர் சிறுவர்களின் கண்களில் வெங்காயத்தைப் பிழிந்து ஊற்றுவதும் உண்டு.*

தோலை உரித்து உப்பைத் தடவ வேண்டும் என்று ஏன் சொல்கிறார்கள் என்பதும் எனக்கு அப்போது தெரியாமல் இருந்தது. ஆனால் தமிழக வரலாற்றில் இந்த தண்டனைகள் எல்லாம் ஒரு காலத்தில் மேல் மட்டத்தில் நடந்துள்ளன என்பது தெரிந்ததும் அதுவே அடித்தட்டு மக்களிடம் பேச்சு வழக்கில் உள்ளது

## மூக்கை அறுத்தல்:

இராமாயணத்தில் தன் அண்ணனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று காதல் மொழி பேசிய சூர்பணகையின் மூக்கை அறுத்ததாக சொல்லப்பட்டிருந்தாலும் அவன் அறுத்தது மூக்கை அல்ல அவளது மார்பை என்பதை ஸ்ரீவில்லிபுத்தூரில் மகாமண்டபத்தில் உள்ள ஆறடி உயரத்தூண் உறுதி செய்கின்றது. பெண்களை அவமானப்படுத்த வேண்டும் என்று கருதுவோர் அவர்களின் பெண்மையை இழிவு செய்யும் வகையில் அவர்களின் மார்பை அறுத்தனர். ஆனால் ஆண்களை அவமானம் செய்வோர் அவர்களின் மூக்கை அறுத்தனர்.

## மூக்கறுப்புப் போர்

*1638* இல் மைசூர் பகுதியை ஆண்டு வந்த நரச ராஜா என்ற மன்னனுக்கும் திருமலை நாயக்கருக்கும் இடையே பகை ஏற்பட்டது. அவன் படைகளுடன் மதுரையைக் கைப்பற்ற பயணப்பட்டான். வழியில் இருந்த ஊர்களுக்கு எல்லாம் தீ வைத்தான்.. பொருட்களைக் கொள்ளையடித்தான். வழியில் கண்டவர்களின் மூக்கை அறுத்தான். உடல் நலம் குன்றி இருந்த திருமலை நாயக்கர் சேதுபதியின் உதவியை நாடினார். சேதுபதியின் மறவர் படை திண்டுக்கல்லில் மைசூர் படையை எதிர்கொண்டது. மைசூர் படைவீரர்களின் மூக்குகளை எல்லாம் அறுத்து மூட்டையில் கட்டியது. இப்படைக்குத் தலைமை தாங்கிய திருமலை நாயக்கரின் தம்பி முத்துநாயக்கர் நாயக்கரும் அரங்கண்ண நாயக்கரும் மைசூர் வீரர்களுக்கு இந்த மூக்கறுப்புத் தண்டனையை வழங்கினர். தமிழக மக்களின் மூக்கை அறுக்க தொடங்கிய மைசூர் வீரர்கள் கடைசியில் மூக்கறுபட்டு ஊர் திரும்பினர்.

## மூக்கறுப்புப் போரின் விளைவு

மூக்கு அறுப்புப் போர் காரணமாக மதுரை தல்லாகுளத்தில் சித்திரை திருவிழாவில் அழகர், மலைக்குத் திரும்பும் போது பூப்பல்லக்கு அலங்காரம் நடைபெறும் மைசூர் ராஜா மண்டபம் திருமலை நாயக்கருக்குக் கை மாறியது. அவர் தனக்குப் படை கொடுத்து உதவிய இராமநாதபுரம் சேதுபதிக்கு அந்த மண்டபத்தைப் பரிசாகக் கொடுத்தார். ஆனாலும் அப்பகுதி மக்கள் மைசூர் ராஜா மண்டபம் என்றே சொல்லி வந்தனர். இந்த மண்டபம் அங்கு இருப்பதால் தானோ என்னவோ அங்கு வாழ்வோர் மூக்கை அறுக்கவா என்று செல்லமாக மிரட்டினர். நினைவில் நிருதி பேசி மகிழ்ந்தனர்.

## தோலை உரித்தல்

சிவபெருமான் கஜாசூரனுடன் போரிட்ட போது யானை உருவில் இருந்த கஜாசுரனின் தோலை உரித்து தன் உடம்பில் போர்வையாக போர்த்திக் கொண்டார். இக்காட்சி சிவன்

கோவில்களில் சிவ ரூபமாக இருப்பதைக் காணலாம். மதுரையில் சொக்கநாதர் சந்நிதியின் முன் உள்ள கம்பன்ன மண்டபத்தில் ஒன்று யானைத் தோலைத் தன்மீது போர்த்தி யானையின் தலை மீது சிவபெருமான் நிற்கும் காட்சியாகும். இதுபோல மனிதர்களின் தோலை உரித்து விட்டு உடம்பில் உப்பை தடவி விட்டால் உப்பு உடம்பில் உள்ள ரத்தத்தையும் ஈரத்தையம் உறிஞ்சி எடுத்து விடும். இதனால் தோலுரிக்கப்பட்ட உடல் விரைவில் செத்துவிடும்.

## சோளக்காட்டு பொம்மை

வயல்களில் காகங்களும் மற்ற பறவைகளும் பயிர்களைத் தின்று அழித்து விடாமல் விரட்டுவதற்கு மனித கால் சட்டை, கைச்சட்டைக்குள் வைக்கோல் நிரப்பிய மனித உருவங்களை கம்புகளில் கட்டி நிறுத்தி வைப்பர். இதை சோளக் காட்டு பொம்மை என்பர். இந்த சிந்தனையோடு ஒரு வரலாற்று நிகழ்வைத் தொடர்பு படுத்திப் பார்க்கலாம்

## தோலை உரித்துத் தொங்கவிடுதல்

ஹொய்சல மன்னர்கள் மைசூரைத் தலைநகரமாகக் கொண்டு அதனைச் சுற்றியுள்ள பகுதியை *1100* முதல் *1342* வரை ஆண்டனர். இவர்களில் மிவும் சிறப்புப் பெற்றோர் முதலாம் வல்லாளன் இரண்டாம் வல்லாளன் மூன்றாம் வல்லாளன் ஆவர். டெல்லி சுல்தான்களின் ஆட்சி மதுரையில் நடைபெற்ற காலத்தில் மூன்றாம் வல்லாளன் கண்ணனூர் கொப்பம் என்ற சமயபுரம் வரை படையெடுத்து வந்தான். அப்போது மதுரையில் ஆட்சி செய்த கியாசுதீன் பெரும்படையுடன் போய் வல்லாளனைத் தோற்கடித்தான். இனி எவரும் தன்னுடன் போரிட துணியக் கூடாது என்பதற்காக வல்லாளனின் தோலை உரித்து அதற்குள் வைக்கோலைத் திணித்து மதுரை மதில் சுவரில் அவனைத் தொங்க விட்டான்.இபுன் பதூதா என்ற பயணி எழுதிய நூலில் இத்தகவல் உள்ளது.

கியாசுதீன் வல்லாளனுக்கு கொடுத்த தண்டனை மதுரை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியது. அவர்கள் மனதில் அவனது உருவம் ஆழமாக பதிந்துவிட்டதனால் அவர்களின் பேச்சு வழக்கில் இத்தண்டனை முறை ஏழுநூறு ஆண்டுகளாகத் தொடர்கிறது.

இன்றைய தலைமுறையினர் யாரும் தோலை உரிப்பேன், மூக்கை அறுப்பேன் என்று சொல்வது கிடையாது. எங்கள் வயதினருக்கு, எங்கள் ஊரில் இத்தண்டனை முறைகளைச் சொல்லி மிரட்டுவது தெரிந்திருக்கும்.

அச்சுறுத்தல் மிரட்டல் ஆகியவற்றுக்கு பயன்படுத்தும் சொற்களுக்கு அரசியல் வரலாறு உண்டு என்பதைப் போலவே வசைச் சொற்களுக்கும் சமூக வரலாறு உண்டு. இது குறித்து இன்னொரு கட்டுரையில் காண்போம்

# *The 4 agavals of the Thiruvasagam*

**Akshayan Manivannan**
**Sydney**

The Thiruvasagam (Divine Utterances) of Manickavaasagar is a group of 658 songs of the highest mystical quality. "Those who do not melt for the Thiruvasagam will not melt for anything" is a famous proverb in Tamil, which captures Manickavaasagar's heart rending cries as they echo from the depths of his soul. It has been sung across 51 separate headings, with some headings being long poems, while the majority fall in the category of approximately 10 songs (pathigam), with each song being 4-liners. The first four headings are all of the first category and are colloquially called the 4 agavals. They form a sort of introduction to the text.

The Sivapuranam is probably the most well-known of all the songs in the Thiruvasagam, and it is the first heading of the 51. It details the ancientry of Sivan in 95 lines, each of which is drenched in both poetic brilliance as well as unbounded love for the Lord.

Sivapuranam Lines 31 – 48

Having taken a multitude of births, I have grown weary my Lord
Yet having truly beheld your golden Feet,
I have today gained liberation
O Primordial sound which frees me, resonant in my soul
True One, He who is beyond the malas*, Master of the bull
Unattainable to the Vedas who cry "Ayya!"
as you rise as the Minute nuance, who deepens and broadens
You are the heat and the cold, You are Vimala,
You stand as the body's soul
You came in grace and caused all that is false to flee
You are True knowledge, glistening like a bright flame
O Blissful Lord, to me who possess no wisdom You
Wipe my ignorance away, O wise One
He who has no beginning, no measure, no end!
He who creates, protects and destroys all worlds, and showers his grace
He who liberates and joins me amidst His band of devotees
He is the subtlety of fragrance, He is far, yet he nears us

He is the meaning of the Vedas,
Standing where speech and thought disappear
Like the mixture of milk and sugar cane and butter
Soaked in sweet honey He delights the thoughts of sincere devotees
Lord to us all! He who severs the continuity of birth

This is followed by the Keerthi Thiruagaval, a fascinating composition of 146 lines which is still the question of much controversy and debate. From the first line to the last the song details the grace bestowed by Sivan towards His devotees, and includes many stories and incidents well known to us now. It also includes many histories which are completely unknown. Many of the city names which are mentioned have since gone out of usage further adding to the difficulty. The concluding passages are a delight to meditate on.

The history of Sivan gracing Manickavasagar is well known, but is recounted briefly here. Sent by the king to go buy horses, Manickavasagar is travelling through Thiruperunthurai when Sivan comes bearing the form of a sage, encircled by one hundred devotees. He sits under the kurunthai tree, and as Manickavasagar sees him he is drawn by a deep and swelling love. As Manickavasagar recounts:

The moment He placed his twin Feet on my head,
My companions, my relatives – I wholly renounced it all!
(Thiruppoovalli Song 1 Lines 1 - 2)

However, Sivan takes the opportunity to enact a divine drama. Conjuring an effulgence of light, He guides all 100 devotees into it towards salvation, in front of Manickavasagar's eyes. After they all pass and Manickavasagar alone is left, Sivan eyes him and says "Come to Thillai", before stepping foot in the pillar of light and disappearing. This scene is revisited in countless places throughout the Thiruvasagam, with few as touching and descriptive as the Keerthi Thiruagaval:

Keerthi Thiruagaval Lines 127 – 146

Mere cur I am, He bade me come to glorious Thillai
where shines the beauteous stage,
yet He left me here, befitting indeed!
That day those servants who were graced to go with Him
merged with Him one by one in perfect union
yet those who gained Him not leaped in the fire!
Bewilderment overcame others –
on the earth they fell and rolled and cried,
as others still, with hurry in their step,
rushed to enter the sea as they wailed
"Our Lord Our Lord" –
as such were those that gained His Foot,
while others hailed Him saying

"O Divine Dancer who graced Patanjali"
and reviling the world, continued to yearn.
He dances in the goldcapped halls of Puliyur,
beautiful as the Himalayas themselves –
and with sight of beauteous smile on his Holy face,
like that which he graces unto red-lipped Uma and Kali,
the King surrounded by saints, joyously entered Puliyur –
High Lord of Kailai that resounds with rapturous song!

The third of the agavals is the Thiruvandapaguthi of 182 lines. It is a beautiful composition which details the nature of Sivan, both in his form and formless nature. This is interspersed with both autobiographical sections as well as a long famous allegory of 30 lines which builds a magnificent and vivid description of nature which culminates in the presentation of Sivan as a rain cloud.

Manickavasagar also introduces a novelty in these 4 agavals. As equals to the Sanskrit "mantra endings" such as namaha, Manickavasagar creates 4 such mantra endings in Tamil. These begin in the Sivapuranam with the lines which end with vazhga (literally: long live), velga (victory to) and pottri (hail). These mantra-like lines are continued in the Thiruvandapaguthi, where he also introduces the fourth mantra ending kaanka (behold!):

Thiruvandapaguthi Lines 29 – 35 and 58 – 64

Behold the most ancient one, behold Him the complete
Behold Him who is beyond compare
Behold Him who is adorned with ancient tusk of the boar
Behold Him who wears hide of the forest tiger around His waist
Behold Him smeared with ash, as I think on Him
Behold! I can't stand it * – I will perish
Behold He who is, like sweet music of the Veena
...
Behold! I saw Him with my own eyes
Behold the ambrosia which yields abundant grace
Behold! I saw the greatness of His compassion
Behold! He impressed His feet upon the earth
Behold! I was assured He was Sivan
Behold! He made me His own and graced me
Behold He who shares His form, with her of waterlily-like eyes

Note: can't stand the separation from the Lord is the implication

The final agaval is the Potri Thiruagaval, the longest poem of the Thiruvasagam by far, totalling 225 lines. It starts with a long description of the dangers faced by a life, from as early as conception in the womb to the sorrows of worldly life. This is followed by the hardships it faces even after it desires to grasp God, as forces such as atheism and misguided

faith attack the seeking soul. Navigating even these, the soul finds a glimmer of light and grips firm on to it, and this guides the soul slowly and steadily into ecstatic apprehension of Sivan. The remaining ~130 lines are salutations to the Lord, including the famous:

thennaa dudaiya sivanE pOTRi
ennaat tavarkkum iRaivaa pOTRI
Glory to Sivan of the Southern country!
Glory to the Lord of every country!
(Potri Thiruagaval Lines 164 – 165)

The lines follow on like this, stacking praises one after another in exceeding passion. As mentioned before one of Manickavasagar's main goals in singing the praise of the Lord in this way is to firmly establish the ability to recite mantras in the mother tongue – Tamil. We can say his efforts are widely successful, although not nearly to the full extent that they could be. The section preceding this, which details the holy march towards salvation, is long and beautiful, we look at just the ending to this passage:

Potri Thiruagaval Lines 80 – 86

As softening bones melt,
with a heart that yearns with each breath –
overflowing the banks of the river called love,
they cry "Our Leader", as the senses converged on Him.
With rambling speech, as hairs stood erect,
as their hands, verily flowers, folded in worship like lotus bud,
as their hearts blossomed,
they thus stood with teary eyes, gleaming of delight –
with love undiminishing, day by day –
Hail Mother like One to those devotees.

# உடம்படு மெய்:

**பேரா.கு.இராமகிருட்டினன்**
**முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், தெ.இ.மொழிகள் துறைத் தலைவர்,**
**பஞ்சாபு பல்கலைக்கழகம்**

முகநூலில் சிலர் உயிரெழுத்தோடு உயிரெழுத்துப் புணரும்பொழுது தவறாகப் புணர்த்தி எழுதுகின்றனர். ஒருவர் 'ஆங்கிலயிலக்கணம்' என எழுதினார். அதனைச் சுட்டிக்காட்டினேன். அதற்கு அவர், 'ஆங்கிலவிலக்கணம் எனயெழுவது எனக்கு உடன்பாடன்று. இப்புணர்ச்சியில் வகரத்தைவிட யகரவொலியே இயல்பாக பொருந்துகின்றது. மேலும், இது தொல்காப்பியத்திற்கு உட்பட்டதே; இலக்கணமீறல் இல்லை' என மறுமொழி கூறினார். மேலும்,

'தொல். சொல். சூத். 140.
"எல்லா மொழிக்கும் உயிர்வருவழியே உடம்படுமெய்யின் உருபுகொளல்
வரையார்."

என்று எடுத்துக்காட்டுத்தந்தார்.. இந்நூற்பாவிற்கு உரை எழுதிய சேனாவரையர், அவை யகரமும் வகரமுமென்பது முதனூல்பற்றிக்கோடும்;

'உடம்படு மெய்யே யகார வகார
முயிர்முதன் மொழிவரூஉங் காலை யான'

எனவும்

'இறுதியு முதலு முயிர்நிலை வரினே
யுறுமென மொழிப வுடும்படு மெய்யே'

என்வுங் கூறினாராகலின், உயிர்களுள் இகர ஈகார ஐகார ஈறு யகர உடம்படுமெய் கொள்ளும். ஏகாரம், யகரமும், வகாரமுங் கொள்ளும். அல்லனவெல்லாம் வகர உடம்படுமெய்யே கொள்ளுமென்று உணர்க.

என்று விளக்குகிறார்.

எனவே தொல்காப்பியருக்கு முன்பே உடம்படுமெய் தெளிவாக வரையறுக்கப் பெற்றது. தொல்காப்பியர் குறிப்பாக உணர்த்தினார். தொல்காப்பியருக்குப் பின்னர்ச் சேனாவரையரும் பின்பற்றினார். அவருக்குப்பின்பு 12 ஆம் நூற்றாண்டினதான நேமிநாதம் எனும் இலக்கண நூல்,( நூற்பா13),

''மூன்றுநான் கொன்பான் உயிர்ப்பின்னும் அல்லாத
ஆன்ற உயிர்ப்பின்னும் ஆவிவரிற் றோன்றும்
யகர வகரம் இறுதியிடத் தோரார்
மகரம் கெடவகரம் ஆம்.''

என்று கூறுகிறது. இதன் பொருள்,

இ - ள்: இகர, ஈகார, ஐகாரம் என்னும் இம்மூன்றுயிரும் நிலைமொழி ஈற்றில் நிற்க, வருமொழிக்கு முதலாக யாதானும் ஓருயிர் வரின், நடுவு யகர வொற்றுத் தோன்றும்; அகர, ஆகார, உகர, ஊகார, ஏகார, ஓகாரம் என்னும் இவ்வாறுயிரும் நிலைமொழி ஈற்றில் நிற்க, வருமொழிக்கு முதலாக யாதானும் ஓருயிர் வரின், நடுவு வகரவொற்றுத் தோன்றும்; உயிர் வரின் நிலைமொழி இறுதியில் நின்ற மகரம் ஒரோவிடத்து அழிந்து வகரந் தோன்றுதலும் உண்டு எ - று.

13 ஆம் நூற்றாண்டு நூலான நன்னூல், என்பதும் இவ்வாறே கூறுகிறது.

உயிர்முன் உயிர் புணர்தல்

''இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்''

ஆறுமுக நாவலர், தம் 'இலக்கணச்சுருக்கம்'எனும் நூலில்,

''21.. இ, ஈ ஏ,,ஐ ஆகிய உயிர்களின்முனுயிர் வந்தால் இடையில் ய் தோன்றும். ஏனை உயிர்களின்முன் உயிர் வந்தால் வ் தோன்று. இந்த யகர வகரங்கள் உடம்படுமெய் எனப்படும்''

என்று இவ்வாறே கூறுகிறார்.

பின்வந்த முனைவர் இரா. திருமுருகனாரும் தம் 'இனிய தமிழைப் பிழையின்றி எழுத எளிய வழிகள்' 20 ,என்ற நூலில் இவ்வாறே தெரிவிக்கிறார். இதே கருத்தைப் பாவலரேறு ச. பாலசுந்தரனாரும் தம் 'வளர் தமிழ் இலக்கணம்' என்ற நூலில், 97, குறிக்கிறார்.

பின்வந்த பெரும்புலவர்களும் பேராசிரியர்களும் இவ்வாறே உடம்படுமெய்யைப் பயன்படுத்தினர்.

எனவே, தொல்காப்பியருக்கு முன்னரும், அவருக்குப் பின்பும் உடம்படுமெய் பின்பற்றப்படுகிறது. மாற்றவிரும்புபவர் தவறாகச் செய்கிறார்கள் எனலாம். 'மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்'.

உடம்படுமெய்---ஒரு விளக்கம்.
இஈ ஐவழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்----நன்.162
எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே
யுடம்படு மெய்யி னுருவுகொளல் வரையார்,----தொல். எழு.140.

இதற்கு நச்சினார்க்கினியர் பழைய உரையைக்காட்டி ''உயிர்களுள் இகர, ஈகார, ஐகார ஈறு யகர உடம்படுமெய் கொள்ளும். ஏகாரம், யகாரமும், வகாரமும் கொள்ளும். அல்லனவெல்லாம் வகர உடம்படுமெய்யே கொள்ளுமென்று உணர்க.'' என்று உரை எழுதினார்; தொல்காப்பியர் சுருங்கக் கூறியதை விரித்துக் கூறினார்.

எடுத்துக்காட்டாக இரண்டு உரைகளிலும் ''விளவழகிது, பலாவழகிது'' என்று காண்கிறோம்.

அதற்குப் பின் வந்த நேமிநாதரும் நன்னூலாரும்(162) இதே இலக்கணம் எழுதினர். தொல்காப்பியர் உடம்படுமெய் பற்றித் தெளிவாகக் குறிப்பிடாததால் எந்த உடம்படுமெய்யும் இடலாம் என்று எழுதுகின்றனர்.

> 140. "கடிசொல் லில்லைக் காலத்துப் படினே"—தொல் சொல்.452
> 462. பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே---நன்னூல்,462

என இலக்கண நூல்கள் பகர்கின்றன. எனவே தொல்காப்பியர் விரிவாகக் கூறாவிட்டாலும் பின் வந்த இலக்கண நூல்களும், தற்காலத் தமிழறிஞர்களும் பின்பற்றுவதை ஏன் ஏற்க மறுக்கிறார்கள் சிலர்?

ஆனால் 'ஆயிடை', 'ஆயிருதிணை', 'மாயிரு ஞாலம்' என்றும் நூல்களில் காண்கிறோம். ஆ என்பதை அடுத்து உயிர்முன் வகரம் தானே வரவேண்டும், ஆனால், இவற்றில் யகர உடம்படுமெய் ஏன் வந்தது என்ற ஐயம் எழுகிறது.

''ஒன்றென முடித்த லென்பதனான் விகாரப்பட்டமொழிக்கண்ணும் உடம்படுமெய் கொள்க. மரவடி, ஆயிருதிணை என வரும். வரையாரென்றதனான் உடம்படுமெய்கோடல் ஒருதலையன்று. கிளி அரிது, மூங்கா இலை எனவும் வரும்.''

என்று தொல்காப்பிய உரையாசிரியர் ஆயிரு திணை என்பதுபற்றி எழுதியுள்ளார். பிரித்து எழுதினால் உடம்படுமெய் தோன்றாது.

"மாயிரு ஞாலம்( மணி 14:32) என உரிச்சொல் ஆகாரவீற்றின் வழி யகர உடம்படுமெய் வந்தது என்னை எனின் அஃது ''இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்''( நூ.239 ) என்னும் சூத்திரத்தான் அமையும் என்க", என நன்னூல் விருத்துயுரை கூறுகிறது.

மேலும் நன்னூல் 163 நூற்பாவைக் காண்க. ''தூக்கிற் சுட்டு/ நீளின் யகரமெய் தோன்றுதல் நெறியே.''. அ-> ஆ+இடை=ஆயிடை, ஆயிருதிணை.---அ->ஆ+இரு= ஆயிருதிணை,

''பொருந்தாது வேறுபட்டு வருவனவும் இலக்கணப்போலி (267) மரூஉ மொழிகளும் ( 267 ) இருவகை வழக்கினும் ( 267 ) நடக்கும் முறைமை அறிந்து அதற்குப் பொருந்துமாறு புணர்க்கை அறிவுடையோர் எல்லார்க்கும் முறைமை''-----என்று நன்னூல் 239 இன் விருத்தியுரை கூறுகிறது.

எனவே ஆயிடை, ஆயிரு, மாயிரு என்பன சரியானவை எனப் போதரும்.

இ,ஈ,ஐ என நிலைமொழி இறுதியில் வந்தால், வருமொழியில் ஒருயிர் வந்தால் அங்கு யகர உடம்படுமெய்தான் தோன்றும். பிற உயிரெழுத்துகளில் நிலைமொழி முடிந்தால் வருமொழியில் ஒருயிர் எழுத்து வந்தால் வகர உடம்படுமெய் தோன்றும். ஆனால் ஏ வில் ஒரு சொல் முடிந்தால் வருமொழியில் ஒருயிர் வந்தால் யகரம் அல்லது வகரம் வரலாம் என்பது தமிழ் இலக்கணம். தொல்காப்பியத்துக்கு முன்னும் தொல்காப்பியக்காலத்திலும் பின்பு தற்போது வரையிலும் இவ்வுடம்படுமெய் இலக்கணம் பின்பற்றப்பட்டு வருகிறது.

# தமிழகத்து போர்த்தளபதிகள் - நரலோக வீரன் !

**டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்,**
**ஆராய்ச்சியாளர், புதுவை**

மூவேந்தர்கள் பெற்ற போர்களின் வெற்றிகளைப்பற்றி நாம், அதிகம் அறிவோம் சங்ககாலத்தில் இருந்து அயலார்தமிழ் நாட்டை முழுதும் வென்று ஆளும் வரை இடைவிடாது தமிழ் மன்னர்களுக்கிடையே தொடர்ந்து பல போர்கள் நடந்துள்ளன . போர் நடைபெறாத காலகட்டமே அந்தக்காலகட்டத்தில் இல்லை எனலாம்

வீரம் தமிழர்களின் உடன் பிறந்த குணமாக இருந்து வந்துள்ளது

ஆயினும் இத்தகைய வெற்றிகளை பெற்றுத் தந்த போர்த்தளபதிகளைப்பற்றி அதிகம் அறியப்படவில்லை

நரசிம்ம பல்லவரிடம் போர்த்தளபதியாக இருந்து அதிக மக்களிடம் போய்ச் சேர்ந்த. சாளுக்கிய வெற்றியை சாத்தியமாக்கிய பரஞ்சோதி [பற்றி அறிவோம் அவரே பின்னாளில் சிறுத்தொண்டர் எனும் சிவன் அடியாராக மாறினார் .

அதுவும் கல்கியின் சிவகாமியின் சபதம் மூலம் அதிக மக்களிடம் போய்சேர்ந்தார் .

கலிங்கப்போரின் மூலம் கருணாகரன் கலிங்கத்துப்பரணியில் போற்றப்பட்டார் .

சங்க இலக்கியங்களில் பல தளபதிகள் அவர்களின் வீரம் , வல்லமை காணக்கிடைக்கிறது

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல். ---குறள் 770

இதற்கு மு.வரதராசன் விளக்கம்:

உலகு நெடுங்காலமாக நிலைத்திருக்கும் வீரர் பலரை உடையதே ஆனாலும், தலைமைதாங்கும் தக்க வலிமையுள்ள தலைவர் இல்லாத போது படைக்குப் பெருமை இல்லையாகும்

இவ்வாறு எந்த ஒரு போருக்கும் அதை வழி நடத்தும் தளபதிகள் அதன் வெற்றிக்குக் காரணமாகிறார்கள்

சங்க இலக்கியத்திலும் மற்றும் வரலாற்றிலும் இத்தகைய புகழ்பெற்ற தளபதிகள் பலர் காணப்படுகிறார்கள்

மேலும் புறநானூறு ஒரு தளபதியின் பெருமை எவ்வாறு இருக்கவேண்டும் என்று அழகாக விவரிக்கிறது

இரும்புமுகம் சிதைய நூறி, ஒன்னார்
இருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிதே;
நல்லரா உறையும் புற்றம் போலவும்,
கொல்ஏறு திரிதரு மன்றம் போலவும்,
மாற்றருந் துப்பின் மாற்றோர்,
"பாசறை உளன் என வெரூஉம்,
ஓர்ஒளி வலன்உயர் நெடுவேல் என்னைகண் ணதுவே.

பாடியவர்: மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார் திணை: தும்பை. துறை: நூழிலாட்டு. புறம்

படைக்கருவிகளின் முனைமழுங்கப் பகைவரைத் தாக்கிக் கொன்று குவித்துப் போரிட்டுப் போரிலே வெல்லுதல் அனைவருக்கும் எளிதேயாம்.

ஆனால், நல்ல பாம்பு வாழும் புற்றைக் கண்டு, கண்ட மாத்திரத்திலேயே பயந்து விலகுவது போன்றும் வலியுடைய மாற்றாரும் இவன் பாசறையின்கண் உள்ளான் என எண்ணி வெருவி நடுங்குகின்றனரேஅத்தகைய புகழானது, வெற்றி வேலினை உயர்த்தி விளங்கும்

எம் தலைவன் ஒருவனிடமே தான் உள்ளதாகும்!---

இவ்வாறு தமிழர் போர்த்தளபதிகளின் உக்கிர வீரம் பகைவர் நாடுகளிலும் பரவியிருந்தது .

அத்தகைய போர்த்தளபதிகளில் நரலோக வீரன் எனும் பெயர் என்னைக்கவர்ந்ததாகும் .அவர் அதிகம் அறியப்படாதவரும் ஆகும் .

அவர் சிதம்பரம் கோவிலுக்கும் ,திருவதிகை கோவிலுக்கும் மிகப்பல

அறச் செயல்கள் திருப்பணிகள் செய்துள்ளார் .

அவைகள் அத்தனையும் வெண்பாக்களாக சிதம்பரம் கோவிலிலே கல்வெட்டுகளாக பொறித்துள்ளனர் .இவருக்கு மணவில் கூத்தன் என்றும் பெயர் இருந்துள்ளது

மணவில் கூத்தன் என்பான் தொண்டை மண்டலத்து மணவில் என்னும் ஊரினன்; "மட்டார் பொழில் மணவில் வாழ் கூத்தன்" என்பது சாசனப் பாடல்.

இவன் வேளாண்குடியிற் பிறந்தவன். இவற்கு அருளாகரன், அரும்பாக்கிழான், நரலோக வீரன், காலிங்கர்கோன், பொன்னம்பலக்கூத்தன் என்ற பெயர்களும் வழங்கலாயின.

இவனுக்கு மானாவதாரன் என்ற விருதுப் பெயரும் இருந்ததெனச் சித்தலிங்கமடம் என்ற ஊரில் கிடைத்த கல்லெழுத்தால் அறியப்பெறுகிறது. (No. 367 of 1909.)

இவன் முதல் குலோத்துங்கன் (1070-1120) காலத்துப் படைத்தலைவனாய் இருந்தவன்;

குலோத்துங்கன் வேணாடு, மலைநாடு, பாண்டி நாடு, வடநாடு முதலிய நாடுகளில் பல போர்கள் நடத்தியபொழுது, இம்மணவில் கூத்தன் படைத்தலைமை பூண்டு வெற்றி பெற்றுத் தன் புகழையும் தன் அரசன் புகழையும் நிலை நிறுத்தினன்

முதற்குலோத்துங்க சோழனுக்குப் பிறகு சோழப் பேரரசனாகத் திகழ்ந்தவன் விக்கிரமசோழன்.

இவ் விக்கிரம சோழனுடைய ஆட்சியின் முற்பகுதியினும் மணவிற்கூத்தன் நிலவியிருந்தான்.

விக்கிரம சோழனது அவைக்களப் புலவராய் வீற்றிருந்தவர் ஒட்டக்கூத்தர். இவ்வொட்டக்கூத்தர் விக்கிரமசோழனுலா என்னும் நூலொன்று விக்கிரமசோழன் பேரில் இயற்றியுள்ளார். இவ்வுலாவில் இம்மணவிற் கூத்தனான காலிங்கர் கோனின் வெற்றிகள் பற்றிப் பின்வருமாறு காணப்பெறுகிறது

வேங்கையினும்

கூடார் விழிஞத்தும் கொல்லத்தும் கொங்கத்தும்
ஓடா விரட்டத்தும் ஒட்டத்தும்-நாடா
தடியெடுத்து வெவ்வே றரசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோன்

(வேங்கை - வேங்கிநாடு : கூடார்- பகைவர்; இரட்டம் - இரட்ட பாடி, ஒட்டம்-ஒட்ரதேசம்)

இத்தகைய பெருவீரனாகிய மணவிற் கூத்தன் பெருஞ் சிவபக்தனாகத் திகழ்ந்தான். இவன் தில்லையிலும் திருவதிகையிலும் செய்த சிவப்பணிகள் அளப்பில.

அவற்றைத் தில்லையம்பதியில் கல்லெழுத்தாக அமைந்துள்ள 36 வெண்பாக்களாலும், திருவதிகை வீரட்டானத்தில் சிலாசாசனம் செய்யப் பெற்றுள்ள இருபத்தைந்து வெண்பாக்களாலும் அறியலாம்.

இவர் செய்த ,தில்லைத் திருப்பணிகள் பற்றியும் அதைக்குறிக்கும் கல்வெட்டு வெண்பாக்களைக்குறித்தும் அடுத்தப்பதிவில் பார்க்கலாம்

இப்போது அண்மையில்நரலோகவீரனால் கட்டப்பட்டு 2016 இல் 30 ஆண்டுகளாக மூடிக்கிடந்த நூறுக்கால் மண்டபம் திறக்கப்பட்டு அதில் இருந்த சோழர் கால ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன .அது குறித்து தமிழ் இந்து இதழில் வந்த செய்தியின் சுருக்கத்தை பார்க்கலாம்

சிதம்பரம் நடராஜர் கோயிலில் 800 ஆண்டுகளுக்கு முந்தைய சோழர் காலத்து அரிய ஓவியங்கள் அழிந்த நிலையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

.சிதம்பரம் நடராஜர் கோயிலின் சிவகங்கை தீர்த்தத்துக்கு மேற்கே சிவகாமி அம்மன் சன்னதிக்கு தெற்கில் இருக்கிறது நூறுகால் மண்டபம். கி.பி. 1118 முதல் 1136 வரை சோழப் பேரரசின் மன்னனாக திகழ்ந்தவன் விக்கிரம சோழன். இவனது காலத்தில் முதன்மை

அமைச்சராகவும், படைத் தளபதியாகவும் விளங்கிய நரலோக வீரன் என்பவன் சிதம்பரம் நடராஜர் கோயிலுக்குப் பல்வேறு திருப்பணிகளைச் செய்துள்ளான்.

மரங்கள் நட்டு, நந்தவனம் அமைத்து, அலங்கார விளக்குகள் அமைத்து தில்லையம்பதியை எழில் நகரமாய் மாற்றிய நரலோக வீரன்தான் நூறுகால் மண்டபத்தையும் எழுப்பினான் என்கிறது கல்வெட்டுச் சான்று.

வழக்கு விவகாரத்தால் 30 ஆண்டுகளாக பூட்டிவைக்கப் பட்டிருந்த இந்த நூறுகால் மண்டபம் சமீபத்தில் திறக்கப்பட்டு அற நிலையத் துறையால் ரூ.2 கோடி செலவில் தற்போது புனரமைக்கப் பட்டு வருகிறது

ஆத்தூர் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி யின் வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியர் ஜெ.ஆர்.சிவராமகிருஷ்ணன், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியர் சு.கண்ணன் ஆகியோர் மேற்கொண்ட ஆய்வில் நூறுகால் மண்டபத்தில் சோழர் காலத்து ஓவியங்கள் அழிந்த நிலையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள் ளது

தஞ்சை பெரிய கோயில், நார்த்தாமலை, மலையடிப்பட்டி ஆகிய 3 இடங்களில் மட்டும்தான் சோழர் கால ஓவியங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

4-வதாக சிதம்பரம் நடராஜர் கோயிலிலும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முதலில் சுண்ணாம்புக் கலவை பூசி, அது காய்வதற்குள் ஓவியங்களை வரையும் பற்றோவிய முறையில் (Mural Paintings) இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

நாயக்கர் காலத்து ஓவியங்களில் நுண்ணிய வேலைப்பாடுகள் இருக்கும். சோழர் கால ஓவியங் களில் ஒப்பனை இருக்காது.

நூறுகால் மண்டபத்தில் உள்ள ஓவியங்களிலும் ஒப்பனை இல்லை. மண்டப விதானத்தில் வட்ட வடிவ கொடிக் கருக்குகளில் 8 இதழ்கள் கொண்ட பூக்கள் வரை யப்பட்டுள்ளன. சில இடங்களில் சாய் சதுரங்களுக்குள் பூக்கள் வரையப்பட்டுள்ளன. ஓரங்களில் கொடிக்கருக்கு ஓவியங்கள் ‘பார்டர்’ போல வரையப்பட்டுள்ளன. மொத்தம் 7 இடங்களில் மட்டுமே ஓவியங்களை அடையாளப்படுத்த முடிந்துள்ளது.

அவை அனைத்துமே அழிந்த நிலையில் உள்ளன.

தஞ்சை பெரிய கோயிலில் உள்ள ஓவியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள அடர் பச்சை, சிவப்பு, மஞ்சள், காவி உள்ளிட்ட வண்ணங்கள்தான் இங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. , சோழ மன்னனுக்காக இவ்வளவு நேர்த் தியான மண்டபத்தை எழுப்பிய நரலோக வீரன் நிச்சயம் சோழப் பேரரசனின் உருவத்தையோ, தில்லை நடராஜரின் திருமேனி யையோ ஓவியமாகத் தீட்டி, காலப்போக்கில் அது அழிந்திருக்க வேண்டும்.

தஞ்சை பெரிய கோயிலின் உள் திருச்சுற்றில் வரையப்பட்டுள்ளவை சோழர் கால ஓவியங்கள் என்பதை யும் 1931-ல் சிதம்பரம் அண்ணா மலைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைபேராசிரியர்எஸ்.கே.கோவிந்தசாமிதான்உறுதிப்படுத்தினார்என்பதுகுறிப்பிடத்தக்கது.

# நூறு ஆண்டுகளுக்கு முன் சேலம் மாவட்டத்தில் நெல் சாகுபடி

**வி.குணசேகரன்**

*ஆங்கிலேயர்கள் திப்புவிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய காலகட்டத்தில் நடந்த நிகழ்வுகளை நமக்காக முதன் முதலாக பதித்து வைத்தவர் கர்னல் ரீடு என்ற ஆங்கிலேயர். 1800ம் வருடம் பாரமகால் மற்றும் சேலத்தின் கண்காணிப்பாளராக இருந்து கொண்டு சர் தாமஸ் மன்றோவிற்காக எழுதப்பட்ட அறிக்கையில் இந்த மண்ணைப் பற்றியும் மக்களைப் பற்றியும் பல அறிய தகவல்களை நம்மிடையே வைக்கின்றார். இதில் அந்தக் காலகட்டத்தில் நடந்த நிகழ்வுகள் எல்லாம் மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறன. அதற்குப் பின் லீ பானோ என்ற ஆங்கிலேயர் எழுதிய சேலம் மேனுவல் என்ற நூலும் அதனை மேலும் மெருகூட்டி 1916ம் ஆண்டு அப்போதைய சேலம் மாவட்ட ஆட்சியர் எப் ஜெ. ரிச்சர்ட்ஸ் எழுதிய சேலம் மேனுவல் என்ற நூலுமே கடந்த கால வரலாற்றினை நாம் அறிந்து கொள்ள உதவியாய் இருப்பவை.*

*சேலம் மாவட்டம் பாலக்காட் (பாலைக்காடு), பாராமகால், தலைக்காடு என்ற மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. மைசூர்ப் பகுதியை ஒத்த பீடபூமி பகுதி பாலக்காட் ஆகும். இது கடல் மட்டத்திலிருந்து 3000அடி உயரமுள்ள தற்போதைய ஒசூர்ப் பகுதியாகும். பாராமகால் என்பது கடல் மட்டத்திலிருந்து 1300அடி உயரமுள்ள தற்போதைய தருமபுரி, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மற்றும் ஒசூரின் சில பகுதிகள். தலைக்காட்டுப் பகுதி 1300 அடி உயரத்திற்கு கிழே உள்ள தற்போதைய ஆத்துார் சேலம் திருச்செங்கோடு பகுதிகளை உள்ளடக்கியது. ஓமலுார்;*

*1320ம் பசலியில் (1910-11) சேலம் மாவட்டத்தில் 1,80,000 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. அதில் 1,02,000 ஏக்கர் தலைக்காட்டு பகுதியிலும் 63,000 ஏக்கர் பாராமகால் பகுதியிலும் மீதம் இதர பகுதியிலும் விளைந்தது. சேலத்தில் மட்டும் 43,000 ஏக்கரிலும் தருமபுரியில் 26,000ஏக்கரிலும் கிருஷ்ணகிரியில் 23,000 ஏக்கரிலும் திருச்செங்கோட்டில் 21,000 ஏக்கரிலும் ஒசூரில் 15,500 ஏக்கரிலும், ஊத்தங்கரையில் 13,400 ஏக்கரிலும் மற்றும் ஓமலுாரில் 8,000 ஏக்கரிலும் நெல் விளைந்தது.*

*புன்செய் நிலத்தில் நெல் விளைந்தன. ஆனிப்பட்டம் முதன்மை பட்டமாகும் இதில் விதைத்து பயிர் செய்யப்பட்டது. இரண்டாவது பட்டத்தில் கையால் விதைத்தோ அல்லது*

ஏருக்குபின்னால் விதைத்தோ அல்லது சால்களில் விதைத்தோ பயிர் செய்யப்பட்டது. கிடைத்துள்ள தண்ணீரின் அளவினை பொறுத்தே நெவ் சாகுபடி தேர்ந்தெடுக்கப்பட்டது என ரீடு குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் ரிச்சர்ட்ஸின் குறிப்புகளில் நூறு ஆண்டுகளுக்கு முன் 3 பருவங்கள் இருந்தன. வைகாசி முதல் ஆடி மாதம் வரையான காலவடி அல்லது சரியான பருவம். நடுப்பட்டம் ஆடியிலிருந்து புரட்டாசி வரை மற்றும் கோடைப்பருவம் கார்த்திகையிலிருந்து தை மாதம் வரை. ஐப்பசி மாதம் ராசியற்ற மாதமாக கருதப்படுவதால் இம்மாதத்தில் விதைப்பு செய்யப்படுவதில்லை. **ஐப்பசியில் நெல் விளைந்தால் அவலுக்கும் ஆகாது** என்ற பழமொழி இன்றளவும் உண்மை. ஐப்பசி மாதம் நெல் விதைத்தால் பயிர் பூக்கும் போது கடுமையான பனி நிலவுவதால் பூக்கள் திறக்காமலும் மகரந்த சேர்க்கை நடக்காமலும் இருப்பதால் கதிர்கள் பதர்களாகும் என்பது தான் அறிவியல் உண்மை. இது இன்றளவும் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினை.

சம்பா, கார், குறுவை என்று மூன்று பட்டங்கள் நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தன. சம்பா பயிர் 5-8 மாதங்களிலும், கார் குறுவை 3 மாத காலத்திலும் அறுவடைக்கு வரும். 4 மாத காலத்திலும்,

கார், குறுவைப் பயிர்கள் சித்திரைப் பட்டத்திலும், சம்பா பயிர் ஆனி, . ஆவளிப்பட்டத்திலும், சாகுபடி செய்யப்பட்டு வந்தது, தலைக்காட்டு பகுதியில் கோடைப் பயிராக மாசிக்கார் என்ற பட்டமும், வடக்கு பாராமகால் பகுதியில் முன் கார், பின் கார் என்ற பட்டங்களும் இருந்தன.

இருநூறு ஆண்டுகளுக்கு முன் வழக்கில் இருந்த ரகங்களை பற்றி ரீடு குறிப்பிடுள்ளார். அதில் தேன்மலை, சம்பா, சூரியகண்டி, கார்த்திகை சம்பா, குள்ளன் சம்பா, மூலிகை சம்பா, ஆனைக்கொம்பு சம்பா பக்கீர் சம்பா, சீரசு சம்பா போன்ற ரகங்கள் 5 முதல் 6 மாதங்கள் வரை விளைவதற்கு எடுத்துக்கொண்டது என்றும் நல்ல சுவையுடனும் சத்துடனும் இருந்தது.

கார்குள்ளட்டான், சொர்ளவாரி, ராமபானம் போன்ற ரகங்கள் 4-5 மாதங்கள் வயதுடையவை என்றும் ஆனால் தரத்தில் சற்று குறைந்தவை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 3-4 மாதங்கள் வயதுடைய கம்பங்குறி, முனகுட்டா, குரடபச்சை போன்றவை தரத்தில் மிகவும் குறைந்தவை.

கார் பயிருக்கு ஒரு மாதத்திற்கு முன்பு குறுவையானது விதைக்கப்படுகிறது. ஆனால் மிக விரைவில் அறுவடைக்கு வரும். அறுவதாம் குறு என்ற ரகம் நடவு செய்த 60 வது நாளில் அறுவடைக்கு வரும். நல்ல வளமான பருவ கால சூழ்நிலையில் நீர்ப்பாசன வசதி நன்கு உள்ள ஆத்துார், திருச்செங்கோடு சேலம் மற்றும் பென்னையாறு வடி நிலப்பகுதிகளில் இரண்டு போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. பென்னாகரம் பகுதியில் சில சமயங்களில் வருடத்திற்கு 2-3 போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. பிலன் சம்பா என்ற ரகம் 4 மாத வயதுடையது. முதல் போகம் வைகாசியிலும் இரண்டாம் போகம் கார்த்திகை அல்லது மார்கழியிலும் செய்யப் பட்டு வந்தது.

புழுதிக்கால் என்ற நெல் மாவட்டத்தின் பல பகுதிகளில் சாகுபடியில் இருந்தது. சேர்வராயன் மலைப் பகுதியில் சித்திரையில் நெல் விதைப்பு செய்தால் 4 மாதத்தில் இந்த நெல் அறுவடைக்கு வந்தது. ஆத்துாரில் களர் நிலத்தில் ஆடியில் விதைத்த புழுதிக்கால் நெல் 8 மாதத்தில் அறுவடைக்கு வந்தது. பாராமகால் பகுதியில் வைகாசியில் விதைத்த நெல் மார்கழியில் அறுவடையானது.

ஒசூர் பகுதியில் பெத்த பயறு ஒட்லு (பெரிய நெல் ரகம்) என்ற 6-7 மாத வயதுடைய ரகம் களிமண் நிலங்களிலும், பாசன வசதியுள்ள இடங்களில் சூன் மாதமும் சாகுபடி செய்யப்ட்டு வந்தது. நல்ல ஒட்லு என்ற மானாவாரி கருப்பு நெல் வளர அடிமண் ஈரம் தேவையில்லை. 6 மாத வயதான இந்த நெல் ஏப்ரல், மே மாதங்களில் விதைப்பு செய்யப்பட்டது.

அனைத்து மானாவாரி நெல் ரகங்களும் கைவிதைப்பு செய்யப்பட்டு 2 மாதத்திற்கு பின் முதல் களை எடுக்கப்பட்டு பின் ஒரு மாத இடைவெளியில் அடுத்த களை எடுக்கப்பட்டு வந்தது. பெத்த பயறு ஒட்லு மற்றும் நல்ல ஓட்லு ரசுத்தின் அரிசியும் சமைத்தால் சிகப்பு நிறத்தினை கொண்டிருக்கும். சுப காரியங்களுக்கு இந்த நெல் பயன்படுவதுடன் தருமபுரி, கிருஷ்ணகிரி பகுதியில் பொரி செய்ய இந்த ரகங்கள் பெயர் பெற்றவை.

முழுவதும் நீர்ப்பாசனத்தை நம்பியிருப்பது சேற்றுக்கால், பகுதி நீர்ப்பாசனத்தை நம்பியிருப்பது புழுதிக்கால் என்றும் முழுவதும் மழையை நம்பிருப்பது மானாவாரி என்றும் அழைக்கப்பட்டது. பெரும்பாலும் நேரடி நெல் விதைப்பும் சில சமயங்களில் நாற்று விட்டும் மானாவாரி நிலங்களில் வர விதைப்பாகவும் பயிரிடப்பட்டு வந்தது.

ஒரு பயிர் செய்து பயனடைய விவசாயி குறைந்தது 6 மாத காலம் காத்திருக்க வேண்டும். கால்நடைகளின் கழிவுகளை உரமாக சேமித்து காட்டிலிருந்த தழைகளை வெட்டி பொலி போட்டு மண்ணை வளமாக்கி விட்டுதான் பயிர்கள் விளைவித்தார்கள்.

இவை சுத்தமான நீரையும், மாசில்லா இயற்கை சத்துக்களையும் உண்டு பல காலம் சூரிய சத்தியை பெற்று நெடுந்தவம் புரிந்து நம் முன்னோர்களுக்கு உயிர் அளித்த உன்னத ரகங்கள். இவை இன்று நம்மிடையே இல்லை. அழித்தது யார்? எதற்காக?.

நமது முன்னோர்கள் சுத்தமான சத்தான உணவினை உண்டு தான் பல காலம் வாழ்ந்து அனுபவங்களை படைத்து அவர்கள் தாம் வாழ்ந்த பூமியையும் காற்றையும் மட்டுமன்றி அனுபவத்தையும் நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். உரமான கால்நடைகளுக்கும் பயிருக்கும் இருந்த மெல்லிய வலைப்பின்னல் இன்று சிதைந்து விட்டது. கால்நடைகள் லாரிகளில் கசாப்பு கடைக்கு சென்றுவிட்டது. கால்நடைகளுக்கு பதில் இயந்திரங்கள் கால் பதித்துள்ளது. எருக்களுக்கு பதில் உப்புக்கள் உரங்கள் ஆயின. அதன் விளைவு மருத்துவ மனைகள் பெருகியுள்ளன. மக்கள் தேடுவாரின்றி முதியோர் காப்பகங்களுக்கு ஏங்குகின்றனர். மண்ணை மதிக்க வேண்டும் வாழும் சுற்றுப்புறத்தை மதிக்க வேண்டும். கடந்த கால அனுபவங்களையும், நிகழ்கால அறிவியல் அறிவையும் ஒன்றினைத்து வளமான சந்ததியை உருவாக்க வேண்டும்.

# நூல்: "பயணம் போகலாம் வாங்க"(பயண இலக்கியம்)

**வித்யா மனோகரன்**
புதுவை



ஆசிரியர்: திருமதி இலலிதா மோகன்
வெளியீடு: ஒரு துளிக்கவிதை புதுச்சேரி

பயணம் மேற்கொள்பவர்கள் தங்களுடைய பயண அனுபவங்களைப் பதிவு செய்து கட்டுரைகளாகவும், நூல் வடிவத்திலும், படங்களாகவும் பிறரோடு பகிர்ந்து கொள்வது வழக்கம்.

சாமிநாத சர்மா எழுதிய "பர்மா நடைப்பயணம்" தி. ஜானகிராமன் எழுதிய "ஜப்பானியப் பயணம்", ஏ. கே. செட்டியார் படைத்தளித்துள்ள பயண நூல்கள் போன்றவை தமிழில் வெளிவந்துள்ள குறிப்பிடத்தக்க பயண நூல்களில் சில. இன்றைய காலகட்டத்தில் பயண நூல்களின் வரவு அதிகரித்துள்ளது.



பயணங்கள் எப்போதும் அறிவை, உணர்வை வளர்ப்பவையாக, பார்வைகளில் பல்வேறு பரிமாணங்களை நல்கி புதியதொரு அனுபவத்தை வழங்கும் வல்லமை மிக்கவையாக விளங்குகின்றன. வெவ்வேறு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் பயணங்களைப் பதிவு செய்தால் பிற்காலத்தில் அது பலருக்கும் பயன்தருவதாக அமையும். சங்க காலத்தில் தலைவன் பொருள் ஈட்டுவதற்காகத் தலைவியைப் பிரிந்து பயணம் மேற்கொண்ட செய்திகளை சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. அவ்வாறு மேற்கொள்ளப்படும் பயணங்களில் பயணப் பாதைகள் குறித்த செய்திகள், மேலும் வழியில் காணக்கூடிய விலங்குகள், பறவைகள், மரங்கள், மலைகள் இவற்றைப் பற்றிய குறிப்புகள் அறியக்கிடைக்கின்றன.

பயண அனுபவங்களைக் கவிதைகளாகப் படைத்தளிக்கும் புதிய உத்தி தனித்துவம் வாய்ந்தது. மகாகவி ஈரோடு தமிழன்பன் அவர்கள் இருமுறை அமெரிக்கப் பயணம், அங்குள்ள தமிழ் அமைப்பினரின் அழைப்பின் பேரில் மேற்கொண்டு பயண நூல்கள் எழுதினார். ஒன்று உரைநடையில் எழுதிய 'அணைக்கவா என்ற அமெரிக்கா' மற்றது புதுக்கவிதை நடையில் எழுதிய 'உன் வீட்டிற்கு நான் வந்திருந்தேன் வால்ட் விட்மன்' என்ற இரு நூல்களாகும் . இரண்டாவது கவிதை நூல் தமிழில் முதல் முதலாக வெளிவந்த பயணக் கவிதை

நூலாகும். அவரைத் தொடர்ந்து புதுச்சேரி கவிஞர் அமிர்தகணேசன் அவர்கள் 'அன்று அந்த நிலத்தின் நிறம் சிவப்பு' 'வருவதும் போவதும்' 'ஏன் விரட்டினீர்கள் எங்களை?' என்று மூன்று பயணக் கவிதை நூல்களைப் படைத்துள்ளார்.

பயணங்கள் மீதான படைப்புகள் வரிசையில் திருமதி இலலிதா மோகன் அவர்கள் எழுதியுள்ள 'பயணம் போகலாம் வாங்க' என்ற நூலும் தக்க இடத்தில் தன்னை நிறுவிக் கொண்டுள்ளது. நூல் ஆசிரியருக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

12 பேர் கொண்ட குழுவாகத் தன் கணவருடன் இணைந்து 12 நாட்கள் பயணம் செய்த அனுபவத்தை 24 பக்கங்களில் அழகான நூலாக தொகுத்து இருக்கிறார் ஆசிரியர். தங்குமிடம், அடுத்தடுத்து பார்க்க வேண்டிய இடங்கள் இப்படி எல்லாவற்றையும் பயண ஏற்பாட்டாளர்கள் கவனித்துக் கொண்டதால் இன்பச் சுற்றுலாவாக இப் பயணத்தை அமைத்துக் கொண்டு, தான் கண்ட காட்சிகளைத் தனக்குக் கிடைத்த அனுபவங்களை மிக அழகாக,எளிமையாக, எதார்த்தமாகப் பதிவு செய்திருக்கிறார்.எழுத்தாளர் பிரேமா இரவிச்சந்திரன் அவர்கள் இந்நூலுக்கு அற்புதமான முன்னுரை அளித்திருக்கிறார். அவரும் பயணக் கட்டுரைகள் எழுதுவதில் தேர்ந்தவர் என்பதால் இந்நூலின் முக்கியமான கருத்துகளை எடுத்துக்காட்டி நூலுக்குச் சிறப்பு சேர்த்திருக்கிறார்.

நூல் ஆசிரியர் வரலாறு படித்தவர். அதனால் இயற்கைக் காட்சிகளை இரசித்து எழுதிய அதே நேரத்தில் உலக அதிசயங்களாக வானுயர எழும்பி நிற்கும் கட்டிடங்கள் குறித்தும் வியந்து எழுதியிருக்கிறார்.

ஜெர்மனியில் இந்திய உணவகத்தில் மதிய உணவினை முடித்துவிட்டு இரவு உணவினை பெல்ஜியம் தலைநகரில் உண்டோம் என்ற தகவலை நமக்கு அளித்த ஆசிரியர் அழகியல் ததும்ப அடுத்த வரியை எழுதுகிறார் "காலை ஜப்பானில் காபி" இந்த பாடல் உங்களுக்கு நினைவு வந்திருக்குமே என்கிறார். அது உண்மைதான் என்பதை வாசிப்போர் உணரக்கூடும்.

உணவக அறையில் தான் அதிசயித்த ஒரு நிகழ்வைப் பதிவு செய்துள்ளார் . சன்னலில் பாதி அளவுக்கு மட்டுமே கண்ணாடி இருந்தது. கீழே திறந்த நிலையில் இருந்தது.இப்படி பாதுகாப்பற்றதாக இருக்கிறதே என்று நினைத்துக் கொண்டு அருகில் சென்று பார்த்தபோது மிக மெல்லிய கண்ணாடி இருப்பது உணர முடிந்தது .பெல்ஜியம் கண்ணாடி குறித்து கேள்விப்பட்டதை நேரில் பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது என்கிறார் ஆசிரியர்.

கண்ணாடிக்கதவில்ஒருவர்நீர்ஊற்றும்விளம்பரத்தையும்நினைவுபடுத்துகிறார்.

வண்ணமயமான உலகம் சிறுவர்கள் விரும்பி கொண்டாடும் டிஸ்னி லேண்ட் குறித்த செய்திகளைப் பதிவு செய்திருக்கிறார் ஆசிரியர்.

பாரிஸ் நகரின் முக்கிய குறியீடு ஐபில் டவர் என்பதை நாம் அறிவோம். நூல் ஆசிரியர் அதனை நேரில் கண்டு அதிசயித்திருக்கிறார். "984 அடிகள் உயரம்

கொண்ட கோபுரத்தில் மூன்று மாடிகள் உள்ளன. இதில் சென்று பார்வையிடுவதற்கு மின் தூக்கி வசதி உண்டு. இரண்டாவது மாடியிலிருந்து பாரிஸ் நகரின் முழுத் தோற்றத்தையும் பறவை பார்வையில் கண்டு மகிழ்ந்தோம். மாலை மங்கி இரவு ஆரம்பிக்கும் போது ஒட்டுமொத்த கோபுரமும் ஐந்து நிமிடங்கள் ஒளிப்பொறிகளால் தெறிக்க வைக்கும். அங்கு பகல் நேரம் அதிகம். இரவு தாமதமாக வரும் என்பதால் நாங்கள் சென்றபோது இரவு10 மணிக்கு ஒளிரும் கோபுரத்தைக் கண்டு களித்தோம்" என்று மகிழ்வுடன் பதிவு செய்துள்ளார்.

உலகையே ஆள நினைத்த மாவீரன் நெப்போலியன் தனது 51 வது வயதில் இறந்தார். அவரது உடல் பிரான்ஸ்க்கு எடுத்து வரப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட இடத்தைப் பார்வையிட்டதையும் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

பயண இலக்கியம் என்பது தகவல்களைப் பதிவு செய்வதற்கான களம் என்றாலும், தான் கண்டவற்றையும், தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் உணர்வுப் பூர்வமாக வாசகர்களுக்குக் கடத்துவதில் படைப்பாளியின் தனித்திறன் என்பது மிளிரும். நூலாசிரியருக்கு அத்திறன் வாய்த்திருக்கிறது என்று நான் உணர்கிறேன். நூலின் 22 ஆவது பக்கத்தில் பாஸ்போர்ட் ,விசா விமான டிக்கெட் விமான பரிசோதனை எதுவுமே இல்லாமல் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு செல்லும் போது மிகவும் இரசித்த ஒன்று, எல்லையை கடப்பதாகும். பிரான்சில் இருந்து கிளம்பிச் சோதனைச்சாலையை கடக்கும்போது ஒன்றிலிருந்து பத்து எண்ணுவதற்குள் ஸ்விட்சர்லாந்து எல்லையை தொட்டபோது அளவில்லா உற்சாகமடைந்தோம் என்று எழுதி இருக்கிறார் ஆசிரியர் . இவ்வரிகள் நம் கண் முன்னே காட்சியாக விரிகிறது. நமக்குள் இருக்கும் குழந்தை மனம், ஒன்று முதல் பத்து வரை எண்ணி குதூகலிக்கிறது. நான் அப்படித்தான் உணர்ந்தேன்..

இப்படி இன்னும் பல செய்திகளைச் சுவைபடப் பகிர்ந்திருக்கிறார் ஆசிரியர். அவர் இதுபோல் மேலும் பல பயணங்கள் மேற்கொள்ளவும் அவற்றை ஆவணப்படுத்தவும் அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். மீண்டும் சந்திப்போம் அடுத்த கட்டுரையில். நன்றி

# மாற்றங்கள் தரும் பாடங்கள்

**ச.அய்யம்பிள்ளை,**
**மேனாள் பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி**

இந்த ஆண்டு சுதந்திர தின (15.08.2025) உரையில் நம் பாரதப் பிரதமர் அவர்கள் நமக்கெல்லாம் தீபாவளிக் கொடையாக (இனிப்பாக) பண்டங்கள் மற்றும் பணிகளின் மீது 0.25%, 3%, 5%, 12%, 18%, 28% என 2017ஆம் ஆண்டு அவர் கொண்டுவந்த வரி (GST: Goods and Services Tax) விகிதங்களைக் குறைப்பதான உத்தேசத்தை அறிவித்தார். அன்றிலிருந்தே, பலர், ஆகா, ஓஹோ என்று பிரதமருக்குப் புகழ் மாலைகள் சூட்ட ஆரம்பித்தனர்; பஜனைகள் பாட ஆரம்பித்தனர். வரிச் சீர்திருத்தத்தைப் புகழ்ந்து "வானதிரும் வாழ்த்துக்கள்" என வாய் கிழியும் அளவிற்குக் கத்தினார்கள் பிரதமர் நமக்கு வழங்கிய தீபாவளி இனிப்பு மூட்டை இது அன்று பலர் அவிழ்த்து விட்டார்கள்.

முதலில் விதிக்கப்பட்ட உயர் மற்றும் பல நிலை வரி (GST) விகிதங்கள் மிகக் குழப்பங்கள் நிறைந்தவை எனவும், அவை மக்களை மிகவும் பாதித்தன எனவும், மக்களின் வாங்கும் திறன் பாதிக்கப்பட்டு நுகர்வு குறைந்தது எனவும், சிறு, குறு தொழில்கள் பாதிக்கப்பட்டன, மூடப்பட்டன எனவும், அவற்றில் இருந்து மீளத்தான் இந்த வரிச் சீர்திருத்தம் எனவும் புகழ்ந்து தள்ளினார்கள் பலர்.

இப்போது கொண்டுவரப்பட்டுள்ள வரிச்சீர்த்திருத்தம், வரி செலுத்துவோருக்கு வசதி செய்யும் எனவும், எனவே, மேலும் பலர் வரி செலுத்த முன்வருவர் எனவும், நுகர்வும், தேசிய உற்பத்தியும் அதிகரிக்கும் எனவும் சாதாரண மக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களின் விலை குறையும் எனவும் சிறு குறு தொழில்கள் உத்வேகம் பெறும் எனவும் ("GST 2.0 will boost MSMEs, says Finance Minister", The New Indian Express, 03.09.2025, p.04) மூச்சு விடாமல் முழங்கிவருகின்றனர் பலர்.

இந்த பாராட்டுக்களும், முழக்கங்களும்தான் என்னை இந்தக் கட்டுரையை எழுதத் தூண்டின. அத்தோடு, வேறு சில மாற்றங்களைப் பற்றிய சில செய்திகளையும் இங்கு காணலாம்.

முதலில், என்ன வரிச் சீர்திருத்தம் நடந்துள்ளது எனப் பார்ப்போம். பிரதமர் அவர்கள் சுதந்திர (15.08.2025) தின உரையில் வரிச் சீர்திருத்தம் அறிவித்த பின்னர்,

செப்டம்பர் மாதம் 3ஆம் தேதி GSTகுழு கூடியது; அதே மாதம் புதிய வரிகள் 22ஆம் தேதியே நடைமுறைக்கு வந்துவிட்டன. எல்லாமே வேக வேகமாக நடந்துவிட்டது. முன்பு 0.25%, 3% என விலை உயர்ந்த ஆபரண கற்கள் (வைரம்) மற்றும் உலோகங்களுக்கான வரி விகிதம் 1%ஆக மாற்றப்பட்டுவிட்டது. மீதமுள்ள சாதாரணப் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு (இனி பொருள்களுக்கு), வரி விகிதம் 5%, 18% என ஆகிவிட்டது. 12% வரியாக ஆக இருந்த 99 சதவீதப் பொருள்களுக்கு வரி 5%ஆகக் குறைந்துவிட்டது. அதுபோல, 28% வரியாக இருந்த 90 சதவீதப் பொருள்களுக்கு வரி 18%ஆகக் குறைந்துவிட்டது. புகையிலைப் பொருள்கள், இணையதளச் சூதாட்டம் போன்ற பாவப் பொருள்களுக்கு (sin goods) முன்பு 28% வரி விதிக்கப்பட்டது. இப்போது அது 40%ஆக உயர்ந்துவிட்டது. சுருங்கக் கூறின், அநேகப் பொருள்களின் மீதான வரி 5%, 18%ஆகக் குறைந்துவிட்டது. இது ஒரு சுவையான செய்தி என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. ஆனால், பலர் சொல்லியும் கேட்காமல் முன்பு உயர் விகித வரிகளை விதித்த இதே அரசு, இப்போது குறைத்ததன் மர்மம் என்ன என்பதே பலரின் வினாவாக உள்ளது. "ஆதாயம் இல்லாமல் ...... ஆற்றைக்கட்டி அழமாட்டாரே" என்கிற பழமொழி என் காதுகளில் ஒலிக்கிறது.

அதிகாரத்தில் உள்ளவர்கள் என்ன (தவறு) செய்தாலும் அவர்களைப் புகழ்ந்து பணம், பதவி பெறுவதே பலரின் முழு நேரப் பணியாக இன்றும் தொடர்கிறது அவர்கள் தவறை அறிந்திருந்தாலும், உண்மையைச் சொல்ல மாட்டார்கள். வசதி, வாய்ப்பு கிடைக்கிறது எனில் பொய்யைச் சொல்லவும் தயங்க மாட்டார்கள் "பொய்ம்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்" என்கிற திருக்குறளையும் (வரிசை எண் 292) மேற்கோள் காட்டுவார்கள். பழங்காலத்தில், மன்னர்களை அதிகமாகப் புகழ்ந்து பாடி, பெரிய பரிசுகளை வென்ற புலவர்கள் பரம்பரையில் வந்தவர்கள் நாங்கள் என்று கூறிக்கொள்வார்கள் அவர்கள். அதுதான் நேரிடையான சிந்தனை (Positive thinking) என்பார்கள். அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் அவர்களைத்தான் பிடிக்கும்; அவர்களுக்குத்தான் எல்லா சௌகர்யங்களும் செய்து கொடுக்கப்படும்.

உண்மையைச் சொல்பவர்களை எதிரிடைச் சிந்தனையாளர்கள் (Negative thinkers) என்று வர்ணிப்பார்கள். தேசத்துரோகிகள் என்றும் தூற்றுவார்கள். பொருளாதார வசதியில் குறைந்து இருந்தாலும், தூற்றுவார் தூற்றினாலும், நெஞ்சுக்கு ஏற்றதொரு கருத்தை, "நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே" என்று கூறி வருபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், அவர்களை ஆள்பவர்களுக்குப் பிடிக்காது.

இப்போது இன்றைய கதைக்கு வருவோம். பழைய வரி முறைகளின் பாதிப்புக்கள் பற்றியும் புது வரி முறைகளின் பலன்கள் பற்றியும் எந்தவித ஐயமும் இல்லை. அவை அனைத்தும் உண்மைதான். ஆனால், நம் கேள்விகள் என்னவென்றால், எட்டு ஆண்டுகளுக்கும் முன்பு, 2017 ஆம் ஆண்டு, மக்களைப் பாதித்த அந்த உயர் வரிகள் ஏன் விதிக்கப்பட்டன? பாதக விளைவுகள்

*புரியவில்லையா? அல்லது மக்களைப் பற்றிய கவலை இல்லையா? விதித்தவர்கள் யார்? அன்னியர்களா, இல்லை, ஆங்கிலேயர்களா? இப்போதிருக்கிற, இப்போது வரிக்குறைப்பு செய்திருக்கிற, இதே அரசுதானே! தொட்டால் சுடுவது நெருப்பு என்று சுட்ட பின்புதான் தெரியுமா? மக்களை முதலில் அவஸ்தைக்கு உள்ளாக்கிவிட்டு, புண்ணாக்கிவிட்டு, பின்னர் மருந்து பூசுவது சரியா? இது புத்திசாலித்தனமா? இல்லை, சூழ்ச்சியா? அந்த உயர் வரியின் பாதக விளைவுகள் பற்றிப் பலர் அப்போதே சொன்னபோதும், எழுதியபோதும், அவர்கள் அரசுக்கும், நம் நாட்டுக்கும் துரோகம் செய்பவர்கள் என ஏன் சித்தரிக்கப்பட்டார்கள்? இப்போது மக்கள் மீது திடீரெனக் கரிசனம் வரக் காரணம் என்ன?,*

*இவ்வினாக்கள் தொடர்பாக எனக்குக் கிடைத்துள்ள அனைத்துக் கட்டுரைகளையும் உரையாடல்களையும் பதிவிடுவதற்கு இங்கு இடமில்லாததால், அவற்றின் சுருக்கத்தை முதலில் தந்துவிட்டு, பின்னர் பிற மாற்றங்கள் பற்றிப் பார்க்கலாம்.*

*மேலே சொல்லப்பட்ட கொள்கை மாற்றங்களுக்குக் காரணம், புரிதலில் ஏற்பட்ட சிக்கல்கள் அல்ல என்றும், அமெரிக்க ஜனாதிபதி Mr. Donald Trump சமீபத்தில் கொண்டுவந்த குழப்பங்கள் மிகுந்த கொள்கைகளினால் இந்தியா பாதிக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்ற நல்ல எண்ணம்தான் என்றும் அரசின் பலன்களை அனுபவித்துவரும் அறிவு மிக்க ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அப்படி இல்லை, வரப்போகிற தேர்தல்களில் தோற்றுவிடக் கூடாதே என்பதற்கான எச்சரிக்கை ஏற்பாடுதான் என்று அரசை அண்டாமல் இருப்பவர்கள் எடுத்துரைக்கின்றனர். "வயது அதிகம் ஆனாலும் பதவி ஆசை யாரையும் விடாது" என்பதுதானே நாம் நம்மவர்களிடம் இருந்து கற்ற பாடம். முதலில் அடித்து நொறுக்கியவர்கள், இப்போது ஐயோ பாவம் என்று கருணை காட்டுவதாகக் கூறுகிறார்கள். எது எப்படியோ, வரி விகிதங்கள் இப்போவதாவது குறைந்தனவே! வரிச்சுமை குறைந்தால் நுகர்வோராகிய நமக்கு நல்லதுதானே! Better late than never என்பார்களல்லவா?*

*இப்படிப்பட்ட கொள்கை மாற்றங்கள் புதிதல்ல. ஆனால் நிலைமையை நன்கு ஆராய்ந்து உண்மையை உரைப்பவர்களைத் துணைக்கு வைத்துக்கொள்ளாமல் தண்டிக்கும் போக்கும், பணத்திற்காக, அதிகாரத்திற்காக முகஸ்துதி செய்பவர்களை அருகில் வைத்துக்கொள்ள்ளும் போக்கும் இருந்தால் மக்களுக்கு நல்லது நடக்குமா?*

*2016ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் தேதி இரவு மக்கள் பாடுபட்டுச் சேர்த்த பணம் (ரூபாய் 500 மற்றும் ரூபாய் 1,000) செல்லாது என்று அறிவிக்கப்பட்டது. அந்தப் பணத்தாள்கள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டு எங்கோ முடக்கி வைக்கப்பட்டன. பின்னர், புதிய 2,000 ரூபாய் பணத் தாள்கள் நிறையச் செலவில் அச்சிடப்பட்டுப் புழக்கத்தில் விடப்பட்டன; சிறிது காலம் கழித்து, அவையும் திரும்பப் பெறப்பட்டு எங்கோ புதைக்கப்பட்டன. இந்த திருவிளையாடல்களால்,*

பல மாதங்கள் பல கோடி இந்திய மக்கள் எந்தவகைப் பலனும் இன்றி, அவர்கள் அதுவரை அனுபவித்திராத அளவுக்கு அவதிக்குள்ளானார்கள். (ஆனாலும், அடுத்த தேர்தலில் மக்களைச் சிரமத்திற்கு உள்ளாக்கிய அவர்களே வெற்றி பெற்றனர். இது இந்தியர்கள் பொறுமைசாலிகள், வெள்ளந்திகள் என்பதையே காட்டுகிறது.)

அந்தப் பண மதிப்பழிப்பால், இந்தியா வல்லரசு (super power) ஆகிவிடும் என்றும்; கறுப்புப் பணம் முற்றிலுமாக ஒழிந்துவிடும் என்றும்; இலஞ்ச இலாவண்யம் குறைந்துவிடும் என்றும்; கறுப்புச் சந்தை, கள்ளக்கடத்தல் ஆகியவை காணாமல் போய்விடும் என்றும்; தீவிரவாதம் தீர்ந்துவிடும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் என்ன நடந்தது? பாவப்பட்ட மக்கள் அவதிப்பட்டார்கள்; அதிகாரத்தில் இருந்தவர்கள் ஆனந்தம் அடைந்தார்கள்; தலைவீத வருமானத்தில் ஏற்றம் இல்லை; இந்தியப் பணத்தின் மதிப்பு (இக்கட்டுரை எழுதும்வரை) சரிந்துகொண்டேதான் உள்ளது; கறுப்புப்பணம், கள்ளக் கடத்தல்கள், ஊழல்கள் தொடரத்தான் செய்கின்றன. பெரிய முன்னேற்றம் ஏதும் வந்ததாகத் தெரியவில்லை; பண மதிப்பு அழிப்பு மக்களுக்கு சிரமங்களைத் தந்ததைத் தவிர நல்லது ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. இப்போதுள்ள இந்திய அரசியல், சமூக, பொருளாதார அமைப்பில் பெரிய மாற்றங்கள் கொண்டுவருவது சிரமம் என்று “ஆசிய நாடகம்” (Asian Drama) என்ற நூலை எழுதிய, பொருளியலில் நோபெல் பரிசு பெற்ற, இந்தியாவைப் பற்றி நீண்டதொரு ஆய்வு செய்த, குன்னார் மிர்தால் (Gunnar Myrdal) எழுபத்து ஐந்து ஆண்டுகளுக்கும் முன்பே சொல்லியுள்ளார்.

மற்றொரு சீர்திருத்தம் பற்றி இனிக் காணலாம். 1990களில் கல்வி, மருத்துவச் சேவை, ஆகியவற்றில் தனியார் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, பொதுத் துறைகளைச் சுருக்கி வந்தோம். அளிப்பு அதிகரித்தது; ஆனாலும், விலைவாசி கூடிவிட்டது; அரசு வேலை வாய்ப்பு குறைந்துவிட்டது; எல்லாம் இருந்தும் அநேக இந்தியருக்கு அனுபவிக்க முடியாமல் ஆகிவருகிறது. உலகமயம் என்று சொல்லி உலகில் உள்ள பெருத்த வியாபாரிகளுக்கு நம் சந்தையைத் திறந்துவிட்டோம்; இன்று அவர்களின் ஆதிக்கம் பெருகிவிட்டது. அவர்களை நயந்து நாம் வாழவேண்டி உள்ளது. Mr. Donald Trump போன்றவர்கள் ஆடுவதற்கு வசதியாகிவிட்டது. இயற்கை வளப் பயன்பாடு, சொத்துரிமை தனியாருக்குக் கொடுக்கப்பட்டது; வளங்களின் அளவும் தரமும் குறைந்துவிட்டது. பிரச்சனைகள் புரிகின்றன; வேறு வழிகள் தெரியவில்லை.

அடுத்த நடவடிக்கை. 1970களில் மக்கள்தொகை வளர்ச்சிதான் எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணம் என்று பேசப்பட்டது. அதை இளைஞர்கள் நம்பினார்கள்; மக்கள்தொகை வளர்ச்சியினை வெறுத்தோம்; குறைத்தோம். மக்களின் இறப்பு விகிதம் குறைந்து, பிறப்பு விகிதம் அதைவிடக் குறைந்து, மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் வேகமாகக் குறைந்து வருகிறது. இப்போதைக்கு, இந்த போக்கு, சரியெனத் தோன்றுகிறது. ஆனால் கூடிய சீக்கிரம் மனித சக்தியின் முக்கியத்துவம் புரியும்; அப்போது மக்கள் குறைப்பு தவறெனத் தெரியவரும்;

ஆனால், அப்போது ஏதும் செய்ய இயலாத நிலைமைக்கு நாம் தள்ளப்பட்டுவிடுவோம். தேவையில்லாத பிரச்சனைகளைத் தரும் சுமை என கருப்பையை இளைஞர்கள் நினைக்க ஆரம்பித்துவிட்டார்கள். பொருளாதாரத்தில் வளர்ந்த நாடுகள் வெற்றிகரமாக மக்கள்தொகை வளர்ச்சியினைக் கட்டுப்படுத்திவிட்டார்கள். நம் அருகில் உள்ள சீன அரசும் வெற்றிகரமாக மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுக்குள் கொண்டுவந்தது; இப்போது அது தவறு என்று அறிகிறது; மாற்றம் கொண்டுவர முனைகிறது; அதிகக் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள மக்களை வலியுறுத்தியும், மக்கள் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை; பெரிய வெற்றி இன்னும் கிட்டவில்லை. இப்போது இயந்திரங்கள் மூலம் பிள்ளைகள் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இன்னுமொரு மாற்றம். 1960களில் நம் மக்களுக்கு போதுமான உணவுப் பொருள்களை வழங்க அதிக விளைச்சல் தரும் நெல், கோதுமைப் பயிர்களைப் பயிரிட்டு, அதிக நீர்ப்பாய்ச்சி, இரசாயன உரங்கள் இட்டு, பூச்சி மருந்துகள் தெளித்து, உற்பத்தியைப் பெருக்கி சாதனை படைத்தோம். இன்று நம் மக்களுக்குத் தேவைப்படுகிற அளவிற்கும் மேலாக நாம் உற்பத்தி செய்கிறோம். ஆனால், தண்ணீர் பெற அதிக ஆழம் செல்ல வேண்டியுள்ளது; நிலமும் நீரும் காற்றும் தரமிழந்து விட்டன. மக்களின் இரத்தத்தில் சர்க்கரை அளவு கூடிவிட்டது. இப்போது, வேறு சிறு தானிய உணவு வகைகளை நாடுகிறோம்; இரசாயனக் கலப்பு இல்லாத பயிரிடும் முறைகளைத் தேடுகிறோம். முட்டிய பின்தான் குனிகின்றோம்.

தமிழகத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மாற்றம் கொண்டுவரப்பட்டது. பதினோராம் வகுப்பு மாணவர்களுக்குப் புதிதாக ஒரு பொதுத்தேர்வு ஒன்று புகுத்தப்பட்டது. இது தேவையற்ற பிரச்சனைகளைக் கொண்டுவரும் என அப்போதே பலர் கூறினர். ஆனால், கொள்கையாளர்கள் கண்டுகொள்ளவில்லை. இப்போது அது தவறு எனப் புரியப்பட்டு இந்த ஆண்டு முதல், அந்த பொதுத்தேர்வு ரத்தாகிறது என அறிவிப்பு வந்துள்ளது. இந்த மாற்றத்திற்குப் பின், பனிரண்டாம் வகுப்புத் தேர்வுக்கே பாடம் நடத்துகிறார்கள்; பதினோராம் வகுப்புப் பாடத்தை விட்டுவிடுகிறார்கள் எனச் சொல்லப்படுகிறது. அதுபோல, பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வுக்கே பாடம் நடத்துகிறார்கள்; ஒன்பதாம் வகுப்புப் பாடத்தை கற்பிக்காமல் விட்டுவிடுகிறார்கள் எனச் சொல்லப்படுகிறது. இப்படிச் செய்வது தவறு என்றாலும், இதைத் தடுப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் எல்லா வகுப்புக்களுக்கும் பொதுத் தேர்வு நடத்த முடியுமா? முந்தைய வகுப்புப் பாடங்களில் இருந்தும் வினாக்கள் இருக்கவேண்டும் எனக் கொண்டுவந்தால், இந்தப் பிரச்சனையைத் தவிர்க்கலாம் அல்லவா?

பள்ளிப் பாடங்களில் இந்தப் பாடம் முதல் தரம், இது இரண்டாம் தரம், இது கடைசித்தரம் என்று பிரிக்க முடியுமா? கணிதம், இயற்பியல், வேதியல், பொறியல்,

பொருளியல், வரலாற்றியல், புவியியல், மானுடவியல், சமூகவியல், மருத்துவம், விளையாட்டு, நடனம், இசை.....என எவ்வளவோ பாடங்கள் இருக்கின்றன. அவற்றுள்கணிதம், இயற்பியல், வேதியல்ஆகியவை *I group* எனவும், பொருளியல், அரசியல், வரலாற்றியல், புவியியல், மானுடவியல், சமூகவியல் போன்றவை எல்லாம் *III group* எனவும் பதினோராம், பனிரெண்டாம் வகுப்பு மாணவர்களைச் சில ஆண்டுகளுக்கு முன்பு பிரித்தார்கள். அதன் விளைவு, பெற்றோர் *I group, II group* மட்டுமே மதிப்பு மிகுந்ததாக எண்ணி தம் குழந்தைகளை அந்த வகுப்புகளிலேயே சேர்த்தனர்; சேர்க்கச் சொல்லி தலைமை ஆசிரியர்களை வற்புறுத்தினர்; அழுத்தம் கொடுத்தனர். அந்த வகுப்புகளில் உள்ள பாடங்களைத் தம் பிள்ளைகளால் படிக்க முடியுமா, தம் பிள்ளைகளுக்கு விருப்பம் இருக்கிறதா என்றெல்லாம் பெற்றோர் யோசிக்கவில்லை; கண்களை மூடிக்கொண்டு, கிளிப்பிள்ளைகள் போல *I group*தான் வேண்டும் என்று சொன்னார்கள்; பிள்ளைகளைச் சேர்த்தார்கள்; மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகள் மிகுந்தன;. *III group* என்பது பிரயோசனம் இல்லாத *group* என்று புறம் தள்ளப்பட்டது. அந்த *group*இல் பெரும்பாலும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களே சேர்ந்தனர். குடிமைப் பணிக்கான தேர்வுகளில் நிறைய வினாக்கள் *III group*இல் உள்ள பாடங்களில் இருந்து வருகின்றன; அத்தேர்வுகளில் தேர்ச்சி அடையும் தமிழக மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. இது தமிழகத்திற்கு ஒரு பேரிழப்பு என்பதை பலர் அறியாமல் இருக்கிறார்கள். எல்லோரும் மருத்துவர்களாக ஆசைப்பட்டு ஏகப்பட்டோர் மன நோயாளிகளாக மாறிவருகின்றனர்.

1930 முதலாகவே, நம் தலைவர்களுக்குள்ளும் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன என்பதை நாம் அறிவோம். காந்தி, நேரு, சுபாஷ் சந்திர போஸ், பெரியார், அம்பேத்கர் போன்றவர்கள் மற்றவர்கள் கருத்துக்களையும் மதித்தனர். மற்றவர்களைக் குறை கூறும் முன்னர் தம்மைத் தாமே சோதனை செய்துகொள்வதுதான் நல்லது என்று அறிந்து வைத்து இருந்தனர். நம் அந்த பாரம்பரியம் இன்றும் தொடர்ந்தால் நாட்டுக்கும், வீட்டுக்கும் நமக்கும் நல்லது என்பதே இக்கட்டுரை சொல்ல விரும்பும் செய்தி..

# உலகத் தமிழரின் ஒரே நூல் திருக்குறள்

**டாக்டர் புதேரி தானப்பன்**
**டில்லி**

*நூல் பெயர்: உலகத் தமிழரின் ஒரே நூல் திருக்குறள்*

*கட்டுரைத் தலைப்பு: வள்ளுவர் கற்பிக்கும் அறிவின் பெருமை.*

*ஆசிரியர்: முனைவர் செ. இராஜேஸ்வரி*

*சந்திரோதயம் பதிப்பகம்*

*தொடர்பு எண்: 7010997639*

*110 பக்கங்கள்; விலை ₹. 250/-*

"குறள் காட்டும் இன்பம்" என்பது இந்த நூலில் ஆறாவது கட்டுரையாக இருக்கிறது. தனிமனித இன்பம், குடும்பத்தினரின் இன்பம், சமூகத்திற்கு இன்பம், உடல் நலமும் இன்பமும், முனிவும் இணைவும், சிற்றின்பம் மற்றின்பம், மெய்யறிவும் இன்பமும் என்னும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத உட் தலைப்புகளைக் கொண்டு இக் கட்டுரை ஆக்கப்பட்டுள்ளது.

உலகப் புகழ் பெற்ற நூலாக திருக்குறள் திகழ்கிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. தமிழகத்தில் இந்நூலைப் போற்றாத புலவரும் இல்லை; இந்நூற் கருத்துகளைக் கையாளாத நூலும் இல்லை. அவ்வாறே இந்நூல் மொழிபெயர்க்கப்படாத மொழியும் இல்லை.

இன்பம் என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவான ஒரு தன்மையாகும். இந்த இன்பத்தை மனிதனால் மட்டுமே வெளிப்படுத்த முடியும். எது உண்மையான இன்பம் என்றால் அறத்தின் மூலம் கிடைக்கக்கூடியதே உண்மையான இன்பம் ஆகும்; மற்றவை யாவும் இன்பம் போல் தோன்றினாலும் அவை இன்பம் ஆகா என்பது வள்ளுவர் கூற்று. இக் கூற்றினைத் தெளிவுபடுத்தும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

அறம் என்பது சிறப்பையும் கொடுக்கும்; செல்வத்தையும் கொடுக்கும் என்பதையும் அந்த அறமே ஒருவனுடைய தகுதியைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது என்பதையும் ஒரு குடும்பத்திற்கு குழந்தைகள் மிகவும் இன்றியமையாதவர்களாக

விளங்குகிறார்கள்; அவர்களே அக் குடும்பத்தின் இன்பத்தை மிகுதியாக்குகிறார்கள் என்பதையும் திருக்குறள் வாயிலாக ஆசிரியர் எடுத்துச் சொல்லுகிறார்.

இக்காலத்து மக்களில் பலரும் அறத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அறத்தினால் வரும் சிறப்பையும் அறத்தினால் வரும் செல்வத்தையும் யாரும் பொருட்படுத்துவதில்லை. பணம் கொடுத்துச் சிறப்பைத் தேடிச் செல்கின்றனர். எந்த வழியில் செல்வம் சேர்ந்தாலும் மகிழ்ச்சியே கொள்கின்றனர். அத்தகையோர் இந்தச் சமுதாயத்தைப் பற்றியும் பொதுநலத்தைப் பற்றியும் கிஞ்சிற்றும் கவலைப்படுவதில்லை. தன்னலமுற்றோரே இச்சமுதாயத்தில் நிறைந்துள்ளனர். அவர்களே இச்சமுதாயத்தை ஆட்டிப் படைப்போராய் விளங்குகின்றனர்.

ஒரு தனி மனிதனுக்கும் குடும்பத்துக்கும் இன்பம் என்பது மிகவும் இன்றியமையாதது. அதேபோல் ஒரு சமுதாயத்திற்கும் அஃது இன்றியமையாத ஒன்றாக அமைகிறது. ஒரு சமுதாயத்தின் இன்பம் என்பது வறியார்க்கு ஒன்று ஈவதில் அடங்கியுள்ளது. இங்கே கொடுப்போர்க்கும் இன்பம்; பெறுவோர்க்கும் இன்பம். இதனை "ஈத்துவக்கும் இன்பம்" என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுவதை எடுத்துச் சொல்லி உலகில் உள்ள அனைத்து மதங்களிலும் இது பின்பற்றப்படுகிறது என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

அதுமட்டுமின்றி இன்பம் என்பது வயிறு புடைக்க உண்ணாமல் குறைவாக உணவு உண்ணுதலாலும் ஏற்படுகிறது என்றும் ஒரு பெண் தன் கணவனிடம் பொய்க் கோபம் கொள்வதிலும் இனிமையான சொற்களைக் கூறுவதிலும் இன்பம் ஏற்படுகிறது என்றும் அந்த இன்பம் மறு பிறவியிலும் தொடரும் என்றும் கூறுகிறார்.

மூன்று வேளையும் மூக்கைப் பிடிக்க உண்பதையும் எந்நேரமும் பணத்தைப் பற்றியே சிந்திப்பதையும் மக்களை ஏமாற்றிப் பணம் சேர்ப்பதையுமே 99 விழுக்காடு மக்களுக்கு வாழ்நாள் நோக்கமாக உள்ளது. இவற்றை யெல்லாம் சிற்றின்பம் என்று பெரியோர் கூறுகின்றனர். வாழ்நாள் முழுவதும் அறச் சிந்தனையுடன் வாழ்க்கை நடத்துவதுதான் உண்மையான இன்பமாகும் என்று வள்ளுவர் கூறுகிறார்; அதுவே பேரின்பமாகும்.

இவ்வாறு வள்ளுவர் கூறும் இன்பத்தின் பல வகைகளை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது . இன்றைய இளைஞர்கள் இத்தகைய கட்டுரைகளைப் படித்து, வள்ளுவர் கூறும் அறச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதற்கு இந்நூல் வழிவகுக்கிறது..

இந்த நூலின் ஏழாவது கட்டுரையாக , “திருக்குறள் மொழிபெயர்ப்பில் சமயப் பின்னணி" என்பது இடம்பெற்றுள்ளது. திருக்குறளைப் பலரும் பல மொழிகளில் பல்வேறு காலங்களில் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகையாக மொழிபெயர்த்துள்ளனர்.

“மொழிபெயர்ப்பு என்பது மூலச் சொற்களை அப்படியே வேற்று மொழிக்குக் கொண்டுவருவது அல்ல; மூல மொழியின் கருத்துக்களைக் கொண்டுவருவது ஆகும்" என்னும் இந் நூலாசிரியரின் கருத்து மிகவும் சரி.

அந்த மொழிபெயர்ப்புகளில் ஒவ்வொருவரும் அவரவரது அறிவுக்கேற்பவும் அனுபவத்துக்கு ஏற்பவும் கலாசாரம், பண்பாட்டுக்கு ஏற்பவும் தங்களது கருத்துகளைத்

தெரிவித்துள்ளனர். கடவுள் ஏற்பாளர்கள் ஆன்மீகக் கண்ணோட்டத்திலும் கடவுள் மறுப்பாளர்கள் நாத்திகக் கண்ணோட்டத்திலும் மொழிபெயர்த்துள்ளனர். அந்த வகையில் இங்கே, இந்தக் கட்டுரையில் திருக்குறள் மொழிபெயர்ப்பில் அமைந்துள்ள சமயப் பின்னணி குறித்து கட்டுரை ஆசிரியர் தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இது ஒரு சிறிய அளவிலான, மூன்று பக்கங்கள் மட்டுமே கொண்ட ஒரு கட்டுரை. இக் கட்டுரையில், திருக்குறளின் "கடவுள் வாழ்த்து" அதிகாரத்தில் உள்ள 'சேர்ந்தார்' என்னும் ஒரு சொல்லை மட்டும் இவர் ஆராய்கிறார்.

அதாவது, ஆங்கிலேய மொழிபெயர்ப்பாளர்களான ட்ரூ, ஜி. யூ. போப், எல்லீசு ஆகியோரின் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியுள்ள சொற்களை ஆராயும்போது அவற்றில் சமயப் பின்னணியின் தலையீடு இருப்பதாக அம்மையார் கருதுகிறார்.

சேர்ந்தார் என்னும் சொல் நான்கு குறள்களில் வள்ளுவர் கையாள்கிறார். அவை,

1. "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் " - (குறள் - 3)
2. "வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்" - (குறள் - 4)
3. "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார் " - (குறள் - 7)
4. "அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார் " - (குறள் - 8)

என்பனவாகும்.

இந்தச் சேர்ந்தார் என்னும் சொல்லுக்கு ஜி. யூ. போப், எஃப். டபிள்யூ. எல்லீசு, ட்ரூ ஆகியோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருள் சொல்லுகின்றனர். ஆம்.

'சேர்ந்தார்' என்னும் இச் சொல்லுக்கு,

ஜி. யூ. போப் அவர்கள், *Gain* என்றும்,

எல்லீசு அவர்கள், *adore* என்றும்,

ட்ரூ அவர்கள், *United* என்றும்,

மொழிபெயர்க்கிறார்கள் என்பதை அம்மையார் எடுத்துச் சொல்லுகிறார். இந்த ஒவ்வொன்றுக்குமான விளக்கத்தையும் தருகிறார். எல்லீசும் ட்ரூ வும் சமயப் பின்னணி உள்ள பொதுச் சொல்லைப் பயன்படுத்தி உள்ளனர். ஜி. யூ. போப், சமயப் பின்னணி இல்லாத பொதுச் சொல்லைப் பயன்படுத்தி உள்ளார் என்கிறார் நூலாசிரியர்.

அப் பொருள்களை அம்மையார் விளக்கிச் சொல்வது ஏற்புடைத்து எனலாம். அப் பொருள்களின் மூல வடிவம் இலத்தீன் மொழியில் என்னவாக இருக்கிறது; எபிரேய மொழியில் என்னவாக இருக்கிறது; கிரேக்க மொழியில் என்னவாக இருக்கிறது என்று எடுத்துச் சொல்லுகிறார். அந்த மொழிகளைத் தெரிந்தவர்களால் மட்டுமே இவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

திருக்குறளில் ஆர்வம் கொண்ட இளைஞர்கள் அந்த மொழிகளைப் பயின்று மேலும் ஆய்வு செய்ய இக் கட்டுரை ஓர் உந்துதல் சக்தியாக விளங்கும் என்பது திண்ணம்.

இது ஒரு சிறிய கட்டுரைதான். ஆனால் ஆழமான பொருள் பொதிந்த கட்டுரையாக விளங்குகிறது.

அடுத்த எட்டாவது கட்டுரை, “அறிவியல் நோக்கில் காமத்துப்பால்" என்பதாகும். வள்ளுவரின் காமத்துப்பால் என்பது இன்பத்துப்பால் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தக் காமம் என்ற சொல் இக்காலத்தில் விரும்பத்தகாத ஒரு சொல்லாகப் பார்க்கப்படுகிறது. உண்மையில் இது ஓர் அழகான சொல்லாகும். இந்தக் காமம் அல்லது இன்பம் அல்லது காதல் இல்லாவிடில் இவ்வுலகு இயங்காது. இந்த உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களும் தோன்றுவதற்கு இந்த இன்பம்தான் அடிப்படைக் காரணமாக விளங்குகிறது. அதனால்தான் ஆண் பெண் உறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு நமது முன்னோர்கள் சிவலிங்கம் என்னும் உருவ வழிபாட்டை நாம் வணங்கும் கடவுளாக வடிவமைத்துள்ளனர் என்பதை நாம் உணர வேண்டும்.




இந்நூலாசிரியர் முனைவர் இராசேசுவரி அம்மையார் பேராசிரியராகப் பணியாற்றியவர்; நிறைய கட்டுரைகளை எழுதியுள்ளார்; நல்ல கவிஞராக விளங்கும் இவர், நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை

எழுதியுள்ளார்; பல ஆங்கிலக் கவிதைகளை மோழி பெயர்த்திருக்கும் இவர், பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். கடந்த இரண்டாண்டுகளாக, “தமிழணங்கு" என்னும் மாத இதழைச் செவ்வனே நடத்திவருவதோடு, “சக்தி" என்னும் இணைய இதழையும் நடத்திவருவதனால் இதழாசிரியராகவும் விளங்குகிறார். பல நூல்களைப் பதிப்பித்துள்ளார்; இவை அனைத்தையும் கடந்து இவர் ஒரு சோதிடராகவும் திகழ்கிறார் என்பது சிறப்பு.

இத்தகைய சிறப்பான தகுதிகளுக்கு ஆரம் அணிவித்து அழகு படுத்துவதுபோல பல விருதுகளும் இவரைத் தேடி வந்து அழகுக்கு அழகு சேர்க்கின்றன.

அம்மையார், இக்கட்டுரை தொடர்பாக, “உளவியல் அறிஞர்களின் கருத்துகளையும் சுரப்பிகளின் செயற்பாடுகளையும் அவற்றிற்கேற்ப உள்ள திருக்குறள் காட்சிகளையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார். இதுவரை யாரும் காமத்துப்பாலை உளவியல் நோக்கிலும் உடலியல் நோக்கிலும் இவ்வளவு அருமையாக எழுதியதில்லை. திருக்குறளை அறநூலாக மட்டுமல்லாமல் சுரப்பிகளின் அறிவியல் இயல்பை உணர்ந்து அதற்கேற்பத் திருவள்ளுவர் தந்துள்ளார் என்னும் வியப்பான செய்திகளை எடுத்துரைத்தமைக்கு முனைவர் இராசேசுவரிக்குப் பாராட்டுகள்" என்று இலக்குவனார் திருவள்ளுவன் தனது அணிந்துரையில் பாராட்டுவது சாலப் பொருத்தமாகும்.

பாலியல் வக்கிரத்தைத் தடுப்பதில் நமது உடலில் உள்ள ஒருவகைச் சுரப்புகளின் பங்கு என்ன என்பதை இக்கட்டுரை எடுத்துச் சொல்லுகிறது. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் ஈர்ப்புக்கும் காதல் நடவடிக்கைகளுக்கும் குறிப்பிட்ட சுரப்பிகளே காரணமாகும்; பாலியல் வக்கிரம், வன்முறை போன்ற செயற்பாடுகளுக்கும் இச் சுரப்பிகளே காரணமாகும்; பாலுணர்வுச் சுரப்பி என்ற சுரப்பு காதல் வேட்கையைத் தோற்றுவிக்கிறது என்னும் அறிவியல் உண்மையை இங்கே நாம் காண்கிறோம். மையல் சுரப்பி என்னும் சுரப்பி சுரக்கும் போது நமக்கு மிகவும் மகிழ்ச்சியான உணர்வு ஏற்படுகிறது என்கிறார். இதைத்தான் தொல்காப்பியர் இயற்கைப் புணர்ச்சி என்றும் மெய்யுறு புணர்ச்சி என்றும் அழைப்பதாக அம்மையார் கூறுகிறார். வள்ளுவரும் இதனையே,

> “அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
> செறிதோறும் சேயிழை மாட்டு

என்று கூறுவதாகவும் சொல்லுகிறார். ஆக, பாலுணர்வுச் சுரப்பி, மையல் சுரப்பி, களிப்புச் சுரப்பி, வளர்சிதைச் சுரப்பி, கடத்து அண்ணீரகச் சுரப்பி போன்ற பல்வேறு சுரப்பிகள் மனித உடலில் சுரக்கின்றன என்றும் அச் சுரப்பிகளின் சுரப்பால் ஆண், பெண் உடலில் காமம் தொடர்பான பல்வேறு உந்து சக்திகள் உடலில் ஏற்பட்டு அச் சக்திகளுக்கு ஏற்பப் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன என்றும் இந்நூலாசிரியர் எடுத்துச் சொல்வதைக் காண்கிறோம்.

வள்ளுவரின் காமத்துப்பால் ஆண் பெண் உளவியலையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இந்த உளவியலை ஒவ்வொரு தலைவன், தலைவி வாயிலாகவும் நாம் காணமுடியும் என்பதை வெவ்வேறு குறள்கள் மூலம் ஆசிரியர் விளக்கிச் செல்வது பாராட்டக் கூடியதாக உள்ளது. "காதல் என்பது விருப்பத்தின் காரணமாக மனதில் தோன்றி

உடம்பில் பரவி உறுப்புகளைத் தூண்டிவிட்டு, கலவியில் நிறைவுறும் ஓர் உணர்ச்சிப் பயணம் ஆகும்" என்ற கருத்துடன் இக்கட்டுரையை முடிப்பது அழகாக உள்ளது.

“வள்ளுவர் காட்டும் காதல் வாழ்க்கை" என்னும் ஒன்பதாவது கட்டுரை பழந்தமிழரின் காதற் சிறப்புகளை எடுத்துரைக்கிறது. நமது அக வாழ்க்கையில் நிகழும் ஒழுக்கங்கள் என்னும் செயற்பாடுகளை ஐந்து பெரும் பிரிவுகளாக நமது முன்னோர் பிரித்து, அவற்றை நில அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று பகுத்துள்ளனர்.

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படுகிறது; காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படுகிறது; வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படுகிறது; கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படுகிறது; வறண்ட நிலம் பாலை எனப்படுகிறது.

அந்தந்த நிலங்களுக்கு எனத் தனித்தனியே மக்களும் அந்த மக்களுக்கான தொழிலும் அவர்கள் வணங்குதற்குரிய தெய்வமும் அவர்கள் உண்ணும் உணவு, பருகும் நீர், அடிக்கும் பறை, இசைக்கும் யாழ், யாழுக்குரிய பண், அந்த நிலங்களுக்குரிய மரங்கள், பூக்கள், பறவைகள் முதலியனவும் விலங்குகளும் ஊர்களும் இன்ன பிறவும் பிரித்து வைக்கப்பட்டுள்ளன.

திருக்குறளின் காமத்துப்பால் அகவாழ்வைப்பற்றி எடுத்துரைக்கிறது. தலைவன் தலைவியின் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் பகுதியாக விளங்கி இது தமிழ் நாட்டு மக்களின் பண்பாட்டை பறைசாற்றுகிறது என்பதை ஆசிரியர் பல்வேறு குறள்களை எடுத்துக் காட்டி விளக்குகிறார்.

இப்பகுதியின் 25 அதிகாரங்களையும் அறிஞர் பெருமக்கள் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்தைந்து அதிகாரங்களாகப் பிரித்துக் காண்பதைச் சுட்டிக் காட்டுகிறார். அடுத்து, புணர்தலின் பாற்படும் குறள்களின் அதிகாரங்களையும் பபிரிதலின் பால்டும் குறள்களின அதிகாரங்களையும் இருத்தலின் பாற்படும் குறள்களின் அதிகாரங்களையும் இரங்கலுக்குரிய குறள்களின் அதிகாரங்களையும் ஊடலுக்குரிய குறள்களின் அதிகாரங்களையும் ஐந்தைந்து அதிகாரங்களாக எடுத்துச் சொல்லுகிறார்.

வள்ளுவத்தில் சில குறள்கள் பெண்ணியம் சார்ந்த குரலாக ஒலிப்பதையும் அவற்றுக்குத் துணாகத் தொல்காப்பியரின் நூற்பாவையும் எடுத்துக் காட்டுவது ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகிறது.

# *A Milestone in Dravidian Language Translations of the Thirukkural (2025)*

**Bp Dr J Ravikumar Stephen G.**
**Founder, Thirukkural for the World**

The year **2025** has been a promising one, marking a significant milestone in my long search for collaborators to translate the Thirukkural into the Dravidian languages of North and Central India.

On **26th April, Mr George Edward** collected three books from the **Central Institute of Classical Tamil (CICT)** and began the translation work into the **Malto** language. Subsequently, on **23rd May, Mr Mahesh Minz** and **Mr Varaprasad** Sidam received sanction orders from CICT to undertake Thirukkural translations in **Kurukh** and **Gondi (Adilabad dialect)**, respectively.

The Malto translation required only the Devanagari script, with no need for additional transliterations. However, the Kurukh and Gondi projects demanded parallel renderings in their exclusive indigenous scripts — Tolong Siki for Kurukh and Gunjala Gondi for Gondi — in addition to the Devanagari versions. Hence, transliteration into these native scripts was also an essential part of their work.

Mr **Varaprasad Sidam** possesses rare expertise in all four scripts used for **Gondi — Devanagari, Gunjala, Masaram, and Telugu**. Nevertheless, I advised him to limit his work to the **Telugu** and **Gunjala** scripts, as these are the ones widely used in **Andhra Pradesh and Telangana.**

Today, I am delighted to announce that **Mr Varaprasad Sidam has successfully completed the translation of the entire Thirukkural into the Gondi language.**

The project duration was set for ten months, within which the translation was to be completed. During my discussion with Prof. **Dr R Chandrashekhar**, Director of CICT, he mentioned that some translators had completed their assignments within just three to four months. I must admit, I found that difficult to believe at the time. But after witnessing the speed and dedication with which Mr Varaprasad Sidam worked, I was confident he would finish his translation in about **six to seven months**, despite the added complexity of two scripts and corresponding transliterations. To my amazement, he completed it i**n just five months.**

What makes his achievement even more remarkable is that he accomplished the entire task **without a laptop**, using **Microsoft 365 on his mobile phone** to type and edit the translation.

When he began, I often reminded him to "keep the end in mind and work toward it." Today, I am deeply proud that he has fulfilled that goal with such discipline and determination, aligning with the following NitineriVilakkam 52th stanza:

"They do not take delight in sensual pleasures, Nor covet food even when hungry; They never take up deeds of evil, whatever the cause. Unmoved by praise or blame, They see only duty — and duty alone — as their guiding eye."[1]

Mr Varaprasad Sidam embodies a **military-style precision and commitment** — he follows instructions meticulously and works with unwavering focus. I am confident that his translation will bring great pride to the **Gondi-speaking communities of Andhra Pradesh and Telangana**. This Gondi translation of Thirukkural is scheduled for release during the Tamil Harvest Festival — **Pongal 2026**, which falls in mid-January.

Kudos to him

This verse describes the qualities of the truly virtuous person ( ār) —one who is detached from bodily pleasure and desire,steadfast against both temptation and criticism,and guided solely by the moral vision of righteous action ( karumam).

Original Text in Tamil:

*மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார் எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் - செவ்வி அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார் கருமமே கண்ணாயி னார்*

# *TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor*

**Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D**
**Translator, Publisher, Madurai**

## Chapter 9

Saravanan tried his best to collect all the news about John Keiser from American journals and newspapers and contacted his friend Murgosh. Swapna's uncle in the US helped him in this regard. When Murgosh came to Chennai, he met Saravanan and talked to him about his roommate John Keiser and handed him his diary.

MurGosh's wife didn't like John Keiser because he was always talking about Tamil Nadu, its history, and its culture. She didn't want to entertain him. She had put aside all her Indian dresses and moved to mini skirts. She had completely changed to American culture. She was afraid that due to John's madness, she may have to change back to Indian costumes and culture.

MurGosh's dad advised his son to forget all about Tamils and do his job. His father was tired of explaining the reason for naming as Murugesan to his friends and relatives. His first son died in an accident near Thiruchendur, a Murugan temple. He prayed to the Lord to bless him with another son and he will call him in the name of Muruga. Although it is not in practice among the Brahmins since he prayed to Murugan, he had to name his only son Murugesan. When Murugesan became a devotee of Aravind Gosh, he changed his name to MuruGosh.

MuruGosh wanted to help John Keiser. He hesitated to leave him uncared for the advice of his dad and wife. At this point, Saravanan came in contact and MurGosh shared about his friend. This sharing helped him to reduce his stress.

Actually, John wanted to go for the list of Greeks to identify his forefather. One of his forefathers worked under Karikal Chola and promised to find out the archives on the origin of the Tamils. Keiser tried to find out his name.

Saravanan felt it was a tedious job that John wanted to do. MurGosh arranged a conference call with John to Sarvanan.

Information registered in the brain for many centuries had been retrieved now. It cannot be ignored. If so, it would be a historical error. History is more important than literature.

John Keiser told he cannot remember the promise of the Greeks to the king. But he can remember a city called Koliyur [a city named after hens] near Thuraiyur. Saravanan had a doubt whether John was blabbering all these after reading from any book. John could read

Sarvanan's mind. He answered, 'A race which rendered the first language to this world, feeling proud of that, cannot be treated as self-boasting.' John sometimes told some unrelated statements. Although Saravanan could not get everything at that moment, he believed that he will get them later, so he recorded everything.

It was difficult for Sarvanan to get John as a Dravidian. His looks and behavior are of an American and also his explanation of Koliyur cannot be ignored. He told that he had seen the Aayars [shepherds in Tamil] who moved from the banks of Sindhu to Egypt. The so-called Aayars are called Nuuyars in Egypt. Similarly, roasting in fire is called 'nep' [neruppu is the fire in Tamil], the rainwater as 'pey' [pour in Tamil], and so on.



Maybe Cleopatra, the dark-complexioned lady with a different nose, belongs to these Aayars from Tamil Nadu.

John told Tamil kings ruled Egypt and there were many words similar to Tamil in the Semantic languages spoken in Egypt. John reminded of kol [kill] and poer [war] being used with the same meaning in Europe. He listed a hundred essential words like fire, water, dwelling place, eyes, cattle, and fish being the same in all languages, having their roots in Tamil.

Saravanan could not believe this, but John said, 'Look in Tamil you have dialects within a few hundreds of kilometres. Tamils have spread to thousands of kilometres to Egypt and Africa. Naturally, their language would have undergone a few changes.' Saravanan cannot argue with him.

John added, Tamil has changed as Telugu, Malayalam, Kannadam, Tulu in South India whereas in Baluchisthan it is Brahui, in Central India is Kondu, Gonda and others. In Pakisthan and Afganisthan, the names of places called as Kunru, Kurinji, Aamuur, Mathrai, Korkai, Paalai, Vanji, Paandiyan, Killi, Nhochi and Kaavri remind us of Tamil names . An IAS officer, Mr. Balakrishnan, has written a book on this.

Saravanan was simply listening to John. It was too much for him to digest.

'Whenever cock fight took place in Koeliyur, elder men among the spectators used to share the trade links with Egypt. They speak about people who took their cattle herd to the banks of the River Nile. A race that worshipped the bulls moved to the grazing grounds. At the same time, a hunter group from the west with a fair complexion, long hair, and peculiar behavior came here. They reared horses; wore the hides of horses; ride on horses to long distances and had chariots drawn by them. They were nomads. Both men and women moved their cattle in search of pastures. Once they stayed in the suburbs and didn't move for a long time. It seems that they loved that fertile place where five rivers flow. Sometimes they entered the city and looted the paddy and cotton clothes. In a few places, some quarrels arose but the king didn't take any serious action against them. He told they are nomads and there are a lot of differences between both lifestyles.

The nomads didn't move from that place as the king and people expected. They made tents in the woods and stayed longer. They became friends with the villagers. The shepherds got in touch with the fair girls and a few men brought them to their homes.

A young man, Murugu, brought Ashwini to his house. She asked him,

Your language is so sweet. What is it called?

Thamizhi. Tham moli [means our language] has changed to Thamili.

What is uur?

A place where people live together.

Why do you differentiate Uur as Maeluur and keelluur.?

Mael is the uur in the high ground and keel uur is at the lower level. That's it.

Why do you use the letter mae and kii to refer to the west and east?

Initially, we lived in the south. Due to the deluge [or tsunami], we moved to the north. Since we traveled on the sea route, we called the highland or the mountain in our west as mae and the lower land as kii. Mae is high and refers to the west; kii is low and refers to the east.

He was happily answering her questions. She is good at astronomy. She could read the sky, watch the position of the stars and predict certain things. She told,

'We follow the stars and travel. My name Ashwini also refers to a star.'




Murugu was admiring her. He loved her so much. Her skin was fair and shining that night. He embraced her and whispered in her ears, 'Your star name suits you. You are shining like a star.'

Aren't you interested in knowing about me?

Come on, speak out.

We won't stay permanently in any place. We will be roaming around. We have our army to protect us. Wherever we find our food and pastures, we stay there and then move on.

Our scripture says that if we build a house to stay in a place, we will face dangers and demolition.

Scripture?

Yes. Our forefathers have defined the rules for our life. That is our scripture. It is orally transmitted to generations. We don't write anything. We pray to Agni [Fire God] and Indra [Rain God]. We listen to our elders' words.

So you are following the words of your elders?

Ashwini understood the nuance in his words and showed a broad smile of acceptance. She then asked, Do you follow any such things

Yes. We do have. We don't kill any life.

At any cost?

Yes, no doubt at all.

Why?

In all men, there is a seevan–a soul, a matter. In all women, there is shakthi–the power or energy. How can we kill the soul or the power? They are the matter and energy of this world.

Ashwini wondered, 'It's good, why do you store the running water and do farming? You build huge ships and sail on the seas. You build big houses to live in. You worship the genitals. All these develop an aversion to you.'

She liked all of those but her people didn't like any of them. They called the Murugu's people The Thiramidas a thasyus which means slaves or demons [asuras]. It is their duty to kill these demons. It is an order from the celestials for them. Their god Indra always demolishes forts. He is against Rudras who build dams and involve in agriculture. Indra and Rudra are enemies. They fight against each other.

Ashwini told 'If anyone crosses the sea, we will expel him from our group. We travel in the land but you sail on the seas.'

Do you expel me?, asked Murugu.

When Saravanan was talking in the video call with John Keiser, Dev was lingering in another world where Murugu and Ashwini were chatting. Dev felt that it should not be another tale of Don Quixote. After watching the document of anti-Hindi agitation, Dev's thoughts seem to be an entangled ball of thread severely intricated. He couldn't resolve it. He didn't erase that documentary from his All Tab.

அருந்தமிழ் வளர்த்த அருளாளர்கள் – *XI*

# திருப்புமுனைப் பணியாற்றிய தியாகசீலர் திரிங்கால் அருளப்பர்

**பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே**
**மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்**

காலத்தால் மூத்து ஞாலத்தின் மூத்த முதல் மொழியாய் புகழ்சூடி நிற்கும் நம் தாய்த்தமிழுக்கு, காலத்தால் அழியாத அரும்பெரும் பணிகளை ஆற்றி - பங்களிப்புகளை நல்கிய ஐரோப்பிய அருள்தொண்டர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் தனித்துவம் உடையோர். அவருள் இக்கட்டுரையில் நாம் அறியப் போகும் அருளாளரோ, பலராலும் பெரிதும் அறியப்படாத அதிசயப் புரட்சியாளர் என அழைக்கப்படத்தக்கவர். ஆங்கிலத்தில் 'பாடப்படாத மாவீரன்' (*Unsung hero*) என்பார்களே அத்தகு ஒருவர். இவ்வுரைத் தொடருக்காக, கிறித்தவத்தின் ஒருபெரும் பிரிவான கத்தோலிக்கத் திருச்சபை சார்ந்த, அருள் தொண்டர்களைத் தேர்வு செய்ய ஆய்ந்தபோது சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் *10* ஆண்டுகட்குமுன் *(2014)* வெளியிட்ட - அறிஞர் முனைவர் எம்.ஏ. சவேரியார் எழுதிய 'மேலை நாட்டறிஞர்களின் தமிழ்த் தொண்டு' என்ற நூல்வழி இவரைப் பற்றிப் படித்து வியந்தேன். பின்னர் புகழ்மிகு நாவலாசிரியரும் என் பழைய நண்பருமான அருட்தந்தை மாற்கு அவர்கள் இவரை மையமாக வைத்தே, 'முன்னத்தி' என்ற அற்புதமான நாவலை எழுதியிருப்பதாகத் தெரிவித்ததோடு, அதைப் பற்றிய தமது சிறந்த திறனாய்வை, சிவகாசியைச் சேர்ந்த என் நண்பர் அருள்பணியாளர் டேவிஸ் எனக்கு அனுப்பி வைத்த போது, கூடுதல் விவரங்கள் அறிந்து மலைப்பும் ஆர்வமும் மேலிட, உடனே அருள் தந்தை மாற்கு அவர்களோடு தொடர்பு கொண்டு, அந்நாவலற்படியைப் பெற்றதோடு, அம்மாமனிதரைப் பற்றிய - அவரது அதிசயத்தக்க அரும்பணிகள் பற்றிய பல்வேறு செய்திகளை அறிந்து பிரமித்துப் போனேன். அம்மாமனிதரின் அற்புதத் தியாக வாழ்வைத்தான் தொடரும் வரிகளில் உங்களோடு, பரவசத்தோடு பகிரப்போகிறேன். அம்மாமனிதர்தான் கட்டுரைத் தலைப்பில் குறித்துள்ளவாறு, தமிழகச் சமய, சமுதாய வரலாற்றில், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் திருப்புமுனைப் பணியாற்றிய தியாகசீலர் திரிங்கால் அருளப்பர் எனப்படும் அருளாளராவார்.

## *I.* பிறப்பும் இளமை வாழ்வும்

இப்பெருமகனார், இறைப்பற்று மிக்க பெற்றோருக்கு, பிரான்ஸ் நாட்டின் கோத்துவார் மாநிலத்திலுள்ள சோவ்கல் என்ற சிற்றூரில், 1815 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8ஆம் நாள் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் 'ஜீன் பாப்டிஸ்ட் டிரிங்கால்' என்பதாம். இதைத்தான் இனிய தமிழில் 'திருமுழுக்கு அருளப்பர் திரிங்கால்' என்றும் 'திரிங்கால் அருளப்பர்' என்றும் வழங்குகிறோம். இவருடன் பிறந்தவர் 2 சகோதரர்கள், ஒரு சகோதரி. இவர்கள் அனைவருமே இறைப்பணிக்குத் தம்மை ஒப்படைத்து, குருக்களாக மாறியவர்கள். சகோதரியும் துறவு பூண்டவரே. இளமையிலேயே திரிங்கால் இத்தாலி, இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், பிரெஞ்சு (தாய்மொழி) முதலிய பல மொழிகள் கற்றுத் தேர்ந்தார். பிறகு தத்துவக் கல்வியும் இறையியல் கல்வியும் உயர் நிலையில் கற்றார். 1840இல் சேசு சபையில் குருத்துவப் பயிற்சிக்காகச் சேர்ந்து, ஈராண்டுகள் பயின்றார். அப்போது அவர் இறைத் துறவுப் பணியாற்றிய அருளாளர்கள் பலரது வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படித்தார். குறிப்பாக, இந்தியாவில் திருத்தொண்டாற்றிய புனித பிரான்சிஸ் சேவியர், வேதசாட்சி அருளானந்தர், தத்துவ போதகர் இராபர்ட்-டி-நொபிலி, காப்பியப் புலவர் வீரமாமுனிவர் போன்றோர் பற்றியெல்லாம் படித்து, தாமும் இந்தியாவுக்கு வந்து அருட்தொண்டாற்ற ஆர்வம் கொண்டார். அதனால் அவரை சேசு சபையினர் ஆங்கிலப் புலமை பெற, இங்கிலாந்து நாட்டுக்கு அனுப்பினர். அங்கு சென்று ஆங்கிலம் கற்று மீண்ட பின், குருத்துவப் பட்டம் பெற்றார். இந்தியா புறப்படத் தயாரானார்.

## *II.* இந்திய வருகையும் திருப்பணிகளும் வாழ்வின் நிறைவும்

1844 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாள், நான்கு குருக்களோடும், இரண்டு துணைச் சகோதரர்களோடும் இந்தியா நோக்கிய நீண்ட கடற் பயணத்தை, 'கான்கிரேடு' என்ற கப்பலில் தொடங்கினார். 11/2 மாதம் நீண்ட இக்கடற்பயணத்தை, 'முன்னத்தி' நாவலில் தந்தைமாற்கு மிகச்சுவையாக வருணித்துள்ளார். பிறகு சென்னை துறைமுகம் வந்திறங்கிய திருத்தொண்டர்களை இங்கிருந்த திருச்சபைத் தொண்டர்கள் வரவேற்றனர். சிறிது காலம் மயிலாப்பூர் குருமனையில் தங்கி, இங்கிருந்து பாண்டிச்சேரி (காரைக்கால்) சென்றனர். அங்கிருந்து நாகப்பட்டினம் சென்ற இம்மறைப் போதகர்கள் தமிழும் ஆங்கிலமும் கற்கத் தொடங்கினர். குறிப்பாக, திரிங்கால் அடிகளார் தமிழ் வித்துவான் ஒருவர் வழி, தமிழை ஆர்வத்துடன் பயின்றார். வீரமாமுனிவர் நூல்கள் போன்றவற்றை மிக விரும்பி, பிறருடன் இணைந்து கற்று, இணையில்லாப் புலமை பெற்றார்.

இப்புலமை வழி, சிறுவர்களுக்கு நெடுநேரம் ஞான உபதேசங்கள் செய்வார். நெடுநேரம் சிறு பிள்ளைகளுக்கு, அவர் வாயில் சில நேரம் இரத்தம் வருமளவு போதிப்பார் என ஒரு வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது. பிறகு பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்கள் கட்டினார். ஆலயங்கள் எழுப்பினார். பல நூல்கள் படைத்தார். (அவை பற்றியெல்லாம் தொடர்ந்து விரிவாகப் பார்ப்போம்.) பிறகு அவர் திருச்சிராப்பள்ளியில் படை வீரர்களின் ஆன்ம குருவாகவும் உதவி பணியாளராகவும் பணியாற்றினார். பின்னர், தஞ்சாவூரில் குருத்துவப் பணியாற்றினார். ஓராண்டு வேளாங்கண்ணியில் பங்கு குருவாய் இருந்தார். பிறகு, மதுரை வியாகுல அன்னைப் பேராலயத்தின் முதல் பங்குப் பணியாளராகப் பணியாற்றினார்.

அதிலிருந்து விடுவிக்கப்பட்டவர், பிறகு ஊர் ஊராகச் சென்று திருமறை பரப்பும் பணியில் 'நாடோடி ஊழியராக' ஆர்வத்துடன் பணியாற்றினார். சுமார் 10 ஆண்டுகள் இப்படிக் கழித்து, கடைசியில் 1875இல் வ. புதுப்பட்டியில் பஸ்குகுருவாக நியமிக்கப்பட்டு, வாழ்வின் இறுதிவரை அங்கேயே தொண்டாற்றினார். மதுரையில் 1892, மே, 1ஆம் நாள் மறைந்து, அங்குள்ள (அவர் பணியாற்றிய) வியாகுல அன்னை பேராலயத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார்.

## III அடிகளாரின் பன்முகப் பணிகளும் பங்களிப்புகளும்

திரிங்கால் அடிகளாரது பணிகளைத் தொகுத்து நோக்கும்போது, அவரை ஓர் ஆன்மிகப் பணியாளராக மட்டும் நாம் அச்சிமிழுக்குள் அடைத்துவிட முடியாது என உணர முடியும். பெரும்பாலான கிறித்தவ அருள் தொண்டர்களுக்கு இவ்வாசகம் பொருந்துமெனினும் திரிங்கால் அடிகளாருக்கு இது சாலவே பொருத்தமானதொரு கூற்றாகும். அவரது பன்முகப் பங்களிப்புகளைச் சில தலைப்புகளில் தொகுத்துரைக்க முற்படுவோம்.

### அ) கல்விப்பணி

ஆரம்ப காலத்திலேயே சிறுவர் சிறுமியருக்கு ஞான உபதேசம் கற்றுக் கொடுப்பதில் அவர் அளவிலா ஆனந்தம் கொண்டார். தாம் பணியாற்றிய தஞ்சாவூரிலும் புதுப்பட்டியிலும் பல பள்ளிகளை அவர் நிறுவினார். அந்தப் பள்ளிகளிலெல்லாம் கட்டாயம் தமிழ்ப்பாடம் கற்பிக்க வேண்டுமென்று தமிழாசிரியர்களை நியமித்தார். அது மட்டுமல்லாமல், ஏழைப் பிள்ளைகளுக்கு விடுதிகள் ஏற்படுத்தி, தங்கிப் படிக்க வகை செய்தார். பள்ளிகளில் பிள்ளைகள் படிப்போடு தோட்ட வேலையும் செய்து பழக வேண்டுமென்று பள்ளித் தோட்டங்களை உருவாக்கினார்.

### ஆ) நூல் படைப்புப் பணி

ஏராளமான பணிகளைச் செய்து வந்த அடிகளார் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியுள்ளார். அவர் எழுதியதாக அறியப்படும் பல நூல்கள் இன்று கிடைக்கவில்லை. எனினும், அவரது சிறந்த நூல்களாக 3 பேசப்படுகின்றன.

**1. சத்திய வேத சரித்திர சங்ஷேபம் *(The Summary of the history of the True religion)***

உலகப் படைப்பு முதல் இன்று வரையான வரலாற்றுச் சுருக்கத்தை, விவிலிய மறையின் அடிப்படையிலும் திருச்சபை வரலாற்றின் அடிப்படையிலும் மூன்று காண்டங்களாகப் பகுத்து இந்நூலில் எழுதியுள்ளார். இயேசுவின் பிறப்பு முதல் திருச்சபை வரலாறு வரை *429* பக்கங்களில் பேசும் இந்நூல், மறைப் போதகர்களுக்குப் பேருதவியாய் அமைவது. *1877*இல் வெளியிடப்பட்டது.

***2) ‘இயேசுவின் பரிசுத்த சுவிசேஷப் பொருத்தம்’ (The Concordance of the Four Gospels)***

விவிலியத்திலுள்ள நான்கு நற்செய்தி நூல்களின் ஒருங்கமைவாக - பொதுத்தொகுப்பு நூலாக இது அமைகிறது. அக்காலத்திலேயே ஆங்கிலத்தில் இத்தகு நூல்கள் வெளிவந்திருப்பினும், தமிழில் இவ்வகையில் வெளிவந்த முதல் நூல் இதுவேயாகும். அழகிய வரிசை முறையில் இது மிகச் சிறப்பாகத் தொகுக்கப்பட்டுள்ளது. *1891*இல் இது வெளியானது. இன்றும் கொடைக்கானலிலுள்ள செண்பகனூர் ஆய்வுக் காப்பகத்தில் இது வைக்கப்பட்டுள்ளது.

***3) ஞான உரைகல்***

இது அக்காலத்தில் கத்தோலிக்கத் திருச்சபையின் கொள்கைகளை மறுத்துப் பேசியும் எழுதி வந்த மறுநெறிக்கிறித்தவர்களின் (Protestant Christians) நூல்களுக்கு மறுப்பு நூலாக, விரிவாக எழுதப்பட்ட நூல். கத்தோலிக்கத் திருச்சபையின் கோட்பாடுகளை மிகச் சிறப்பாகத் தொகுத்து, விவாத முறையில் எழுதப்பட்ட நூல் இது. இதனை ‘உரைநடைப் பிரபந்தம்’ என்றே அவர் குறிப்பிடுகிறார்.

**இ) விவிலிய மொழிபெயர்ப்புப் பணி**

அடிகளார் சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும் திகழ்ந்துள்ளார். தமிழிலிருந்து இலத்தீனுக்கும் பிரெஞ்சிலிருந்து தமிழுக்கும் பல நூல்களை மொழிபெயர்த்துள்ளதாகத் தெரிகிறது. ஒரு ஜெபப் புத்தகத்தையும் அவர் தமிழில் பெயர்த்துள்ளார். ஆனால் அவைகள் பலவும் இப்போது கிடைக்கவில்லை. வீரமாமுனிவரின் ‘வேதியர் ஒழுக்கம்’ ‘ஞான உணர்த்துதல் ஆகிய இரு நூல்களை இலத்தீனில் மொழிபெயர்த்துள்ளார். ஆனால் அவரது மணிமுடிப் படைப்பு அவரது விவிலியப் புதிய ஏற்பாடு மொழியாக்கமே.

குருக்களுக்கும் பணியாளருக்கும் அரிய துணை நூலாக விளங்கியது அவரது விவிலிய மொழிபெயர்ப்பு. அக் காலங்களில் பல அருளாளர்கள் விவிலியத் தமிழ் மொழியாக்கத்தில் ஈடுபட்டனர். இவ்வகையில் திருத்தமுறை அருட்பணியாளர்களே சிறப்பான பல பணிகள் செய்துள்ளனர். ஆனால், சேசுசபைத் துறவியான இவரது புதிய ஏற்பாடு மொழியாக்கம் அக்காலத்தில் மிகப் புகழ்பெற்றது. 1860இல் தொடங்கி, ஏறத்தாழ 29 ஆண்டுகளாகப் பணிசெய்து 1889இல் தான் இப்பணி முடித்தார். பிறகு பல மறைவல்லுநர்களால் பரிசோதிக்கப்பட்டு, 1891இல் இது வெளியானது. செண்பகனூர் நூலகத்தில் இன்றும் வைக்கப்பட்டுள்ளது. 1970வரை இது மக்கள் வழக்கில் இருந்தது. 4 பதிப்புகள் வெளிவந்தன. பின்னர், நூலின் கீழே அடிகளாரின் சிறுசிறு விளக்கக் குறிப்புகளோடும் கிறிஸ்துவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் படங்களோடும் இது வெளியிடப்பட்டது.

**ஈ. சமுதாய சீர்திருத்தப்பணி**

அடிகளார் ஆன்மிகப் பணிகளோடு எண்ணற்ற சமுதாயச் சீர்திருத்தப் பணிகளும் செய்து வந்தார். முக்கியமான சில: 1. விதவை மறுமணம் இதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாத காலகட்டத்தில், திருச்சியில் ஒரு விதவைப் பெண்ணுக்கு மறுமணம் செய்து வைத்தார். பின்னாளில் இது தெரிய வந்தபோது, அப் பகுதியில் பெரிய எதிர்ப்புக் கலவரமே ஏற்பட்டது. பின்னாளில், விதவைப் பெண்களுக்காகவே திருச்சியில் புனித அன்னாள் துறவு சபை உருவாக இது வழிவகுத்தது.

**உ) குடிவெறி ஒழிப்பு**

குறிப்பாக, திருச்சியில் இருந்தபோது, படை வீரர்களின் குடிவெறியைக் குறைக்க அரும்பாடுபட்டார். ‘குறைவாகக் குடிப்போர் சங்கம் ஏற்படுத்தினார். நூலகம் ஒன்றை ஏற்படுத்தி, படிக்கும் பழக்கத்தை உருவாக்கி, அவர்கள் கவனத்தைத் திருப்பினார்.

*3) ஆதிக்க சாதியினருக்குச் சவால்*

*ஏழை மக்களை ஒடுக்கிய ஆதிக்க சாதியினருக்கு எதிராகக் குரல் கொடுத்தார். விவசாய வேலை கொடுக்க நில உடமையாளர்கள் மறுத்தபோது, பக்கத்து ஊர்களுக்குச் சென்று ஆண்களும் பெண்களும் சமமாக விவசாய வேலை செய்ய ஊக்கப்படுத்தினார். கூலி பெற்றுத் திரும்பும்போது, வேலை கொடுக்காத முதலாளிகளுக்குச் சவால் விடுவது போல, மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டுவரச் சொன்னார்.*

***4) ஜமீன்தார்கள் எதிர்ப்பு***

*தலித் மக்களைக் கொத்தடிமைகளாக வைத்திருந்த - அவர்களது குடிசைகளைக் கொளுத்திய ஜமீன்தார்களுக்கு எதிராகப் போராடினார். குறைந்தது 15 சமீன்தார்களை அவர் எதிர்த்ததாகக் கூறப்படுகிறது. அவர்களுக்கு எதிராக வழக்கு போட்டு, உயர்நீதிமன்றம் வரை சென்று வெற்றி பெற்று, ஏழைகளின் குரல் வெற்றிபெற வைத்தார்.*

***5) மூட நம்பிக்கை ஒழிப்பு***

*மக்களிடையே இருந்த மூடப் பழக்கங்கள், மூட நம்பிக்கைகள், சூனியம் வைத்தல், கைரேகை பார்ப்பது இவற்றைக் களையப் பாடுபட்டார்; விவசாய நிலத்தின் நடுவே 'சாமி' இருக்கும் கல்லாகப் பார்க்கப்பட்டதை அவர்களையே அகற்ற வைத்து, நிரூபித்துக் காட்டினார்.*

***6) எளிய மக்களுக்கு உதவி***

*ஏழை எளிய மக்களுக்கு எண்ணற்ற உதவிகள் புரிந்தார். 1876 இலிருந்து 1878 வரை தமிழகத்தில் ஏற்பட்ட மிகக் கொடிய பஞ்சகாலத்தில், பல்வேறு நிவாரணப் பணிகள் புரிந்தார். பஞ்சத்திலிருந்து 500 குழந்தைகளைக் காப்பாற்றியதாகக் கூறப்படுகிறது. திருட்டுத் தொழிலிலிருந்து கள்ளர்களை மனம் மாற வைத்தார். பனைமரம் ஏறிப் பிழைக்கும் நாடார் இன மக்கள், சமீன்தார்களால் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தபோது, தாமே பனைமரங்களை விலைக்கு வாங்கி, அவர்களிடமே ஒப்படைத்து வாழ வைத்தார். இப்படிப் பல.*

## *IV) தனித்துவப் பண்புகளும் பங்களிப்புகளும்*

*இத்தகு பெருவாழ்வு வாழ்ந்த மாமனிதரின் தனித்துவப் பண்புகளாகவும் பங்களிப்புகளாகவும் சிலவற்றைச் சுட்டலாம்.*

***1) தணியாத தமிழ்ப்பற்றும் புலமையும்***

*அயல்நாட்டிலிருந்து வந்து அன்னைத் தமிழுக்காகவும் தமிழருக்காகவுமே வாழ்ந்த அடிகளார் 'என் தாய்மொழி பிரெஞ்சைப்போலவே தமிழையும் நான் சரளமாகப் பேசவும் எழுதவும் முடியும் என்று பெருமிதம் கொள்வாராம். தாம் வெளியிட்ட தமிழ் நூல்களில் பக்க எண்களையெல்லாம் தமிழ் எழுத்துகளில் குறித்தார். தாம் ஏற்படுத்திய பள்ளிகளில் எல்லாம் தமிழைக் கட்டாயப் பாடமாக்கி, பல தமிழாசிரியர்களை நியமித்தார்.*

*உ) சமத்துவ சமுதாயம் காண விழைவு*

ஒடுக்கப்பட்ட - ஏழை எளிய தலித் மக்களுக்காக, ஆதிக்க சாதியினரையும் நில உடைமையாளர்களையும் எதிர்த்துப் போராடி வெற்றி கண்டார். விதவைகள் மறுமணம், பனையேறித் தொழிலாளிகள் நலவாழ்வு என சமுதாய மேம்பாட்டுக்காக உழைத்தார்.

*3) தன்னலமற்ற தியாக வாழ்வு*

ஏழை மக்களுக்கு உதவ, பலரிடம் நிதி கேட்டார். தன் தாய்நாட்டில் உள்ள தன் குடும்பத்தார் மற்றும் உறவினரிடம்கூட நிதி வசூலித்தார். மிகப்பெரிய கோயில் கட்டி, அதனருகில் தான் ஒரு சிறிய குடிசையில் வாழ்ந்தார். பஞ்ச காலத்தில் மக்களுக்கு உதவ, தன் ஒருவேளை உணவையும் தவிர்த்து, அதனைச் சேமித்தார்.

*4) எளிமையின் உச்சம்*

எல்லா வகையிலும் எளிய வாழ்வினை, இந்த ஏழைப் பங்காளர் வாழ்ந்து காட்டினார். தான் இறந்த பிறகும் மக்கள் தன் கல்லறையைத் தொழ ஆரம்பிப்பர் என்று கருதி, தான் நெடுங்காலம் தொண்டாற்றிய புதுப்பட்டி கிராமத்தில் அடக்கம் செய்யப்படுவதைத் தவிர்த்தார்.

*5) சிறுபிள்ளைகள் / எளியோர் மேல் பாசம்*

சிறுபிள்ளைகளை நேசித்து தன்னையே உருக்கி ஞான உபதேசங்கள் புரிந்தார். அவர்களுக்குப் பள்ளிகளும் விடுதிகளும் ஏற்படுத்தி, அவர்கள் வாழ்வில் உயரத் திட்டமிட்டுப் பல பணிகள் செய்தார்.

## V நமக்கோர் அறைகூவல்

இத்தகு பெருவாழ்வு - தியாகத் திருவாழ்வு வாழ்ந்த பெருமகன், தமது தியாகம் - அயரா உழைப்பு - எளிமை - சமூகநீதிக்கான போராட்டம். முதலிய பண்புகளாலும் பணிகளாலும் நமக்கோர் மிகப் பெரிய அறைகூவலாக - மிகப்பெரிய ஊக்கு சக்தியாகத் திகழ்கிறார் என்பது மிகையன்று.

# Book Release of Glimpses of Kamba Ramayana by Dr. Chandrika, in Sydney

The English version of Tamil Kamba Ramayanam  was released in Sydney last week. Dr Chandrika Subramaniyan, lawyer and writer has chosen 108 songs from the Kamban's Ramayanam and translated them into English, transliteration, Tamil meaning and English meaning for each song. The book was titled as 'Glimpses of Kambaramayanam.'

Kamban,is a versatile Tamil poet of 7th century ,who has produced 10,600 songs following Valmiki's Sanskrit ramayanam in creating  it in Tamil.

The event was presided by the time was scholar from Sydney Mr Thiru Thirunanda Kumar. The  book release was part of celebrations associated with honouring and praising famous Tamil poet Subramanya Bharathiar.

Dr Hugh MCDERMOTT MP for prospect, released the book and the first  copy was received by  Dr Janaki Raman Consulate General of Indian consulate in Sydney .

The event included additional book releases written by two sydney-based writers. Mr Vijay Singh released a book on ' Siddha way of life' and a poetic contribution of Mr Kumar was also released at the event.

The book was reviewed by a Tamil youngster Akalavan Sriskandarajan

# புதிய வெளியீடுகள்





சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18.
போன் 7010997639